# செல்வி
# செந்தமிழ்
# இலக்கணம்

T17543
R005K03

# முகவுரை

செல்வி செந்தமிழ் இலக்கணம் என்னும் இந்நூல் எட்டாம் வகுப்பிற்குரியது. இஃது அரசியலார் அண்மையில் வெளியிட்டுள்ள புதிய பாட இயலைப் பின்பற்றி எழுதப்பட்டதாகும். பாட இயலில் குறிக்கப்பட்டுள்ள பகுதிகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மாணவர்கள் எளிமையாக இலக்கணத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்நூலில் அவர்களுக்கு எளிதில் விளங்கும் எடுத்துக்காட்டுகளின் வாயிலாக இலக்கணம் விளக்கப் பட்டுள்ளது.

பாட இயலை ஒட்டி மொழிப்பயிற்சியும் தரப்பட்டுள்ளது.

சுருங்கக் கூறின், இந்நூல் எட்டாம் வகுப்பு மாணவர்கள் இலக்கணத்தை ஆர்வத்தோடு கற்கும் வகையிலும், அறிவைப் பெருக்கிக் கொள்ளும் வகையிலும் எழுதப்பட்டுள்ளது. தமிழ் மாணவருலகம் இதனைப் படித்துப் பயன்பெற ஆசிரியப் பெருமக்களும், பள்ளியை நடத்துவோரும் உதவி செய்ய வேண்டுகிறோம்.

ஆசிரியர்கள்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| **I.** | **எழுத்து :** | |
| 1. | எழுத்தும் வகையும் ... | 1 |
| 2. | முதல் எழுத்து ... | 3 |
| 3. | சார்பு எழுத்து ... | 9 |
| 4. | குற்றியலுகரம், குற்றியலிகரம் ... | 13 |
| 5. | மாத்திரை ... | 17 |
| **II.** | **சொல் :** | |
| 1. | பதம் ... | 20 |
| 2. | ஓரெழுத்தொரு மொழி ... | ,, |
| 3. | பகாப்பதம், பகுபதம் ... | 21 |
| 4. | பகுபதவுறுப்புக்கள் ... | 22 |
| 5. | ஆகுபெயர் ... | 27 |
| 6. | தொழிற்பெயர் விகுதிகள் ... | 35 |
| 7. | பண்புப் பெயர் விகுதிகள் ... | 36 |
| 8. | முதனிலைத் தொழிற் பெயர் ... | ,, |
| 9. | முதனிலை திரிந்த தொழிற் பெயர் ... | 37 |
| 10. | வினையாலணையும் பெயர் ... | 38 |
| 11. | தொழிற் பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடு ... | 40 |
| 12. | வேற்றுமை ... | 41 |
| 13. | வினைச்சொல் இலக்கணம் ... | 54 |
| 14. | தெரிநிலை வினைமுற்று ... | 55 |
| 15. | குறிப்பு வினைமுற்று ... | 57 |
| 16. | செய்யும் என்னும் முற்று ... | 59 |
| 17. | இடைச் சொல் ... | 60 |
| 18. | ஏ, ஓ, உம், கொல் இடைச் சொற்கள் ... | 63 |
| 19. | உரிச்சொல் ... | 68 |
| 20. | ஒரு குணம் தழுவிய உரிச்சொல் ... | 69 |
| 21. | பல குணம் தழுவிய உரிச்சொல் ... | ,, |
| **III.** | **பொது :** | |
| 1. | வழக்கு ... | 71 |
| 2. | இயல்பு வழக்கு, தகுதி வழக்கு ... | ,, |

பக்கம்

3. தொகைநிலைத் தொடர் ... 79
4. தொகாநிலைத் தொடர் ... 87

**IV. புணர்ச்சி :**

1. புணர்ச்சியாவது யாது? ... 92
2. இயல்பு, விகாரம் (தோன்றல், திரிதல், கெடுதல்) ... ,,
3. மெய்யீற்றின் முன் உயிர் (பொது, சிறப்பு) ... 95
4. உடம்படுமெய் ... 96
5. உயிர்முன் வல்லினம் ... 98
6. குற்றியலுகரப் புணர்ச்சி ... 100

**V. யாப்பு :**

1. யாப்பின் உறுப்புக்கள் ... 105
2. அசை, சீர் ... 106

**VI. அணி :**

1. இயல்பு நவிற்சி ... 112
2. உயர்வு நவிற்சி ... 113
3. உவமையணி (பொது) ... 114
4. உருவகம் (பொது) ... 115

**VII. மொழிப்பயிற்சி :**

1. வாக்கியம் ... 117
2. வாக்கியப் பொருத்தம் ... 119
3 எழுத்துப் பிழைகளும் திருத்தமும் ... 123
4. வாக்கிய முடிவுப் பிழைகளும் திருத்தமும் ... 132
5. வாக்கிய மாற்றம் ... 133
6. நிறுத்தற் குறிகள் ... 137
7. வல்லெழுத்து மிகும் இடங்களும் மிகா இடங்களும் ... 143

# தேசீய கீதம்

*ஜன கண மன அதிநாயக ஜயஹே*
*பாரத பாக்ய விதாதா*
*பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா*
*த்ராவிட உத்கல வங்கா*
*விந்த்ய ஹிமாசல யமுனு கங்கா*
*உச்சல ஜலதி தரங்கா*
*தவ சுப நாமே ஜாகே*
*தவ சுப ஆசிஷ மாங்கே*
*காயே தவ ஜய காதா*
*ஜன கண மங்கள தாயக ஜயஹே*
*பாரத பாக்ய விதாதா*
*ஜயஹே! ஜயஹே! ஜயஹே!*
*ஜய ஜய ஜய ஜய ஹே!*

—இரவீந்திரநாத தாகூர்

## நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை கங்கை நதிகளின் இன்பநாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப் படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி!

# I. எழுத்து

உலகில் வாழும் மக்கள் தங்கள் மனத்தில் தோன்றும் எண்ணங்களைப் பிறர்க்கு அறிவிக்கவும், பிறர் எண்ணங்களை அறிந்து கொள்ளவும் பயன்படுவது **மொழியாகும்.**

எம்மொழி எவ்வினத்தவரால் தொன்றுதொட்டுப் பேசப்படுகிறதோ, அம்மொழி அவ்வினத்தவர்க்குத் **தாய்மொழியாகும்.** தமிழர்களாகிய நமக்குத் **தமிழ் மொழியே தாய்மொழியாகும்.**

தமிழ் மொழியைப் பிழை இல்லாமல் பேசவும், எழுதவும் கற்பிக்கும் நூல் **தமிழ் இலக்கணமாகும்.**

தமிழ் மொழியிலே எழுத்திற்கு இலக்கணமும், எழுத்தால் ஆன சொல்லுக்கு இலக்கணமும், சொல் உணர்த்தும் பொருளுக்கு இலக்கணமும், சொல்லாலும் பொருளாலும் அமைந்த பாக்களுக்கு (யாப்புக்கு) இலக்கணமும், பாக்களுக்கு அழகு செய்யும் அணி இலக்கணமும் உள்ளன.

**நினைவிற் கொள்க**

**தமிழிலக்கணம் ஐந்து வகைப்படும்: (1) எழுத்திலக்கணம் (2) சொல்லிலக்கணம் (3) பொருளிலக்கணம் (4) யாப்பிலக்கணம் (5) அணியிலக்கணம்.**

## 1. எழுத்தும் வகையும்

கந்தா ஓடி வா.

இவ்வெடுத்துக் காட்டில் மூன்று சொற்கள் உள்ளன. இம்மூன்று சொற்களையும் கேட்டவளவில் கந்தன் நம்மிடம் ஓடி வருகின்றான். இவற்றுள் 'வா' என்பது ஓரெழுத்தாய் நின்றும், 'ஓடி' என்பது இரண்டெழுத்துக்கள் சேர்ந்தும், 'கந்தா' என்பது மூன்று

எழுத்துக்கள் சேர்ந்தும் பொருள் தந்தன. 'கந்தா' என்பதில் 'க, ந், தா' என்ற மூன்று ஒலிகள் சேர்ந்தும், 'ஓடி' என்பதில் 'ஓ, டி' என்ற இரு ஒலிகள் சேர்ந்தும், 'வா' என்பதில் 'வா' என்ற ஓர் ஒலியும் நின்று பொருள் தந்தன. இவ்வாறு சொல் உண்டாவதற்குக் காரணமாய் அமையும் ஒலியே எழுத்தாகும்.

**குறிப்பு**: சொல் உண்டாவதற்குக் காரணமாய் உள்ள ஒலியே எழுத்தாகும். தும்மல், இருமல், கனைத்தல் முதலிய ஒலிகள் எழுத்தாகா.

முருகா போ.

இவ்வாறு கூறியவுடன் 'மு, ரு, கா' என்ற மூன்று எழுத்துக்களும், 'போ' என்ற ஓரெழுத்தும் ஒலி வடிவில் அவன் காதில் பொருந்த, முருகன் போகின்றான். இவ்விரு சொற்களின் எழுத்துக்களையும் கரும்பலகையில் எழுதிக்காட்ட, அவன் அவ்வொலிகளின் வரி வடிவைக் கண்டு போகின்றான். இவ்வாறு எழுத்து, ஒலிவடிவு, வரிவடிவு என இரு வகையினை உடையதாகும். (ஒலி-ஓசை; வரி-கோடு; வடிவம்-உருவம்.)

**நினைவிற் கொள்க**

**எழுத்து ஒலி வடிவம், வரி வடிவம் என இரு வகைப்படும்.**

தமிழ் மொழியிலுள்ள 247 எழுத்துக்களும் முதல் எழுத்து, சார்பெழுத்து என்ற இருபிரிவில் அடங்கும்.

**நினைவிற் கொள்க**

**மொழிக்கு முதற்காரணமாயும், அணுத்திரளின் காரியமாயும் உள்ள ஒலியே எழுத்து ஆகும். அது முதலெழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும்.**

**நன்னூல் சூத்திரம்:**

மொழிமுதற் காரண மாம்அணுத் திரள்ஒலி
எழுத்தது முதல்சார் பென இரு வகைத்தே.

## 2. முதல் எழுத்து

'அ' முதல் 'ஔ' இறுதியாக உள்ள உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும், 'க்' முதல் 'ன்' இறுதியாகவுள்ள மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்களும் முதல் எழுத்தாகும். இம் முப்பது எழுத்துக்களும் பிற எழுத்துக்கள் தோன்றவும் இயங்கவும் முதன்மையாக இருத்தலின், முதலெழுத்து ஆகும்.

ந. சூ. : உயிரும் உடம்புமாம் முப்பது முதலே.

### உயிர் எழுத்து

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ—என்ற பன்னிரண்டு எழுத்துக்களும் உயிர் எழுத்துக்களாகும். இவை உயிர்போலத் தனித்து இயங்கும் ஆற்றல் உடையன. அதனால், இவை உயிர் எழுத்து எனப் பெயர் பெற்றன. 'ஆவி' என்பது இதன் வேறு பெயர்.

### (அ) குறில்

அன்பு, இடம், உடை, எலி, ஒன்று.

இவ்வெடுத்துக்காட்டுகளின் முதலெழுத்துக்களாகிய 'அ, இ, உ, எ, ஒ' என்பன நெட்டெழுத்துக்களை விடக் குறுகி ஒலிக்கின்றன. ஆதலின், இவை குறில் எழுத்துக்களாம்.

**நினைவிற் கொள்க**

அ, இ, உ, எ, ஒ—ஐந்தும் ஓசை குறுகி ஒலிக்கும் எழுத்துக்கள் ஆகும். ஆதலின், இவை குறில் அல்லது குற்றெழுத்து என்று கூறப்படும்.

ந. சூ. : அஇ உ எ ஒக்குறில் ஐந்தே.

### (ஆ) நெடில்

ஆலை, ஈதல், ஊர், ஏர், ஐந்து, ஓடம், ஔவை.

இவ்வெடுத்துக்காட்டுகளின் முதலெழுத்துக்களாகிய 'ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ' என்பன குறில் எழுத்துக்களைவிட நீண்டு ஒலிக்கின்றன. ஆதலின், இவை நெடில் எழுத்துக்களாகும்.

நினைவிற் கொள்க

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ — ஏழும் ஓசை நீண்டு ஒலிக்கும் எழுத்துக்கள் ஆகும். ஆதலின், இவை நெடில் அல்லது நெட்டெழுத்து என்று கூறப்படும்.

உயிர் எழுத்து குறில், நெடில் என இரண்டு வகைப்படும்.

ந. சூ.: ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில்.

## (இ) சுட்டெழுத்து

அவன், அவ்வீடு.

இவள், இம்மாடு.

உவன், உப்பக்கம்.

இவ்வெடுத்துக்காட்டுகளில் அ, இ, உ — மூன்றும் சொல்லின் முதலில் நின்று பொருள்களைச் சுட்டிக் காட்டுகின்றன. ஆதலின், இவை சுட்டெழுத்து ஆகும். இவற்றுள், 'அ' தூரத்திலுள்ள பொருள்களையும், 'இ' பக்கத்திலுள்ள பொருள்களையும், 'உ' மேல், பின், நடுவிலுள்ள பொருள்களையும் சுட்டிக் காட்டுகின்றன.

நினைவிற் கொள்க

அ, இ, உ — மூன்று எழுத்துக்களும் சொல்லின் முதலில் நின்று பொருள்களைச் சுட்டிக் காட்டும்போது சுட்டெழுத்துக்கள் ஆகும். 'அ' தூரத்திலுள்ள பொருளையும், 'இ' பக்கத்திலுள்ள பொருளையும், 'உ' மேல், பின், நடுவிலுள்ள பொருள்களையும் சுட்டிக் காட்டும்.

ந. சூ.: அ, இ உம்முதல் தனிவரின் சுட்டே.

**அகச்சுட்டு :**

*அவள், இவர், உது.*

இவ்வெடுத்துக்காட்டுகளில் அ, இ, உ — மூன்றும் சுட்டெழுத்துக்களாகும். இச்சுட்டெழுத்துக்கள் நீங்கி விடின், மற்ற 'அள், அர், து' என்பன பொருள் தர வில்லை. இவை சொல்லின் அகத்தே (உள்ளே) இருந்து பொருள்களைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆதலின், அகச் சுட்டு ஆகும்.

நினைவிற் கொள்க

**அ, இ, உ — இம்மூன்று எழுத்துக்களுள் ஒன்று சொல்லின் அகத்தே நின்று பொருள்களைச் சுட்டிக் காட்டுமானால் அகச் சுட்டு ஆகும். அச்சுட்டுச் சொல்லிலுள்ள சுட்டெழுத்தை நீக்கி விட்டால் மற்றவை பொருள் தாரா.**

**புறச்சுட்டு :**

*அப்பொருள், இம்மாடு, உப்பக்கம்.*

இவ்வெடுத்துக்காட்டுகளில் அ, இ, உ — மூன்றும் சுட்டெழுத்துக்களாகும். இச்சுட்டெழுத்துக்கள் நீங்கி விடின், மற்ற 'பொருள், மாடு, பக்கம்' என்பன பொருள் தருகின்றன. இவை சொல்லின் புறத்தே (வெளியே) இருந்து பொருள்களைச் சுட்டிக் காட்டு கின்றன. ஆதலின், புறச்சுட்டு ஆகும்.

நினைவிற் கொள்க

**அ, இ, உ — இம்மூன்று எழுத்துக்களுள் ஒன்று சொல்லின் புறத்தே நின்று பொருள்களைச் சுட்டிக் காட்டுமானால் புறச் சுட்டு ஆகும். அச்சுட்டுச் சொல்லிலுள்ள சுட்டெழுத்தை நீக்கி விட்டால் மற்றவை பொருள் தரும்.**

சுட்டு அகச்சுட்டு, புறச்சுட்டு என இருவகைப் படும்.

**குறிப்பு :** 'உ' செய்யுளில் மட்டும் சுட்டாக வரும். அணில், இலை, உரல் — இச்சொற்களிலுள்ள 'அ, இ, உ'

மூன்றும் மொழிக்கு முதலில் வந்திருப்பினும் சுட்டுப் பொருளை உணர்த்தாமையின் சுட்டெழுத்துக்கள் ஆகா.

## (ஈ) வினவெழுத்து

| | |
|---|---|
| எவன் ? | எப்பேறு ? |
| யாவர் ? | யாங்ஙனம் ? |
| அவளா ? | மங்கையா ? |
| இவனே ? | தேவனே ? |
| ஏது ? | கந்தனே ? |

இவ்வெடுத்துக் காட்டுகளில் எ, யா—இரண்டும் சொல்லின் முதலில் நின்றும், ஆ, ஓ—இரண்டும் சொல்லின் இறுதியில் நின்றும், ஏ—சொல் முதல் இறுதி ஆகிய இரண்டிடத்தும் நின்றும் வினா (கேள்வி)ப் பொருளைத் தந்தன. ஆதலின், இவை வினவெழுத்து ஆகும்.

### நினைவிற் கொள்க

எ, யா—இரண்டும் சொல்லின் முதலில் நின்றும், ஆ, ஓ—இரண்டும் சொல்லின் இறுதியில் நின்றும், 'ஏ' சொல்லின் முதல், இறுதி ஆகிய இரண்டிடத்து நின்றும் வினாப்பொருளைத் தரும். இவ்வைந்தும் வினவெழுத்து ஆகும்.

ந. சூ.: எயா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏயிரு வழியும் வினவா கும்மே.

## அகவினா :

எவன் ? யார் ? ஏது ?

இவ்வெடுத்துக் காட்டுகளில் எ, யா, ஏ—மூன்றும் வினா வெழுத்துக்கள் ஆகும். இவ்வினா வெழுத்துக்கள் நீங்கிவிடின், மற்ற 'அன், ர், து' என்பன பொருள் தரவில்லை. இவை சொல்லின் அகத்தே (உள்ளே) இருந்து வினாப் பொருளைத் தருகின்றன. ஆதலின், அக வினாவாகும்.

நினைவிற் கொள்க

எ, யா, ஏ,— இம்மூன்று எழுத்துக்களுள் ஒன்று சொல்லின் அகத்தே நின்று வினாப் பொருளைத் தருமானால் அகவினா வாகும். அவ்வினாச் சொல்லிலுள்ள வினாவெழுத்தை நீக்கி விட்டால் மற்றவை பொருள் தாரா.

**புறவினா :**

ஏப்பள்ளி ? யாங்ஙனம் ? நண்பனா ?
படிப்பாயோ ? வேலனே ?

இவ்வெடுத்துக் காட்டுகளில் எ, யா, ஆ, ஓ ஏ —ஐந்தும் வினா வெழுத்துக்கள் ஆகும். இவ்வினா வெழுத்துக்கள் நீங்கிவிடின், மற்ற 'பள்ளி, ஙனம், நண்பன், படிப்பாய், வேலன்' என்பன பொருள் தரு கின்றன. இவை சொல்லின் புறத்தே (வெளியே) இருந்து வினாப்பொருளைத் தருகின்றன. ஆதலின், புறவினா வாகும். (ஙனம்-விதம்)

நினைவிற் கொள்க

எ, யா, ஆ, ஓ, ஏ — இவ்வைந்து எழுத்துக்களுள் ஒன்று சொல்லின் வெளியே நின்று வினாப் பொருளைத் தருமானால் புற வினாவாகும். அவ்வினாச் சொல்லிலுள்ள வினாவெழுத்தை நீக்கிவிட்டால் மற்றவை பொருள் தரும்.

வினா அகவினா, புறவினா என இருவகைப்படும்.

குறிப்பு : எள், யானை, ஆலை, ஓடு, ஏர்—இச் சொற்களில் எ, யா, ஆ, ஓ, ஏ — என்பனவந்திருப்பினும் வினாப்பொருளை உணர்த்தாமையின் வினாவெழுத்துக் கள் ஆகா.

## (உ) மெய்யெழுத்து

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் — என்ற பதினெட்டு எழுத்துக்களும் மெய் யெழுத்துக்களாகும். இவை மெய் (உடம்பு) போலத் தனித்து இயங்கா. அதனால், இவை மெய்யெழுத்து

எனப் பெயர் பெற்றன. உடல், உடம்பு, புள்ளி, ஒற்று என்பன இதன் வேறு பெயர்களாகும்.

### (ஊ) வல்லினம்

கொக்கு, மச்சு, பட்டு, முத்து, காப்பு, காற்று.

இவ்வெடுத்துக் காட்டுகளில் இடையிலுள்ள க், ச், ட், த், ப், ற்—என்ற ஆறு மெய்யெழுத்துக்களும் ஏனைய மெய்யெழுத்துக்களை விட வன்மையாக ஒலிக்கின்றன. ஆதலின், இவை வல்லின மெய் யெழுத்துக்கள் ஆகும்.

நினைவிற் கொள்க

**க், ச், ட், த், ப், ற்—ஆறும் வன்மையாக ஒலிக்கின்ற மெய்யெழுத்துக்கள் ஆகும். ஆதலின், வல்லினம் எனப்படும். இவை வல்லெழுத்து, வன்கணம், வன்மை, வலி என்றும் கூறப் படும்.**

ந. சூ.: வல்லினம் கசடத பறஎன ஆறே.

### (எ) மெல்லினம்

சங்கு, வஞ்சனை, வண்டு, பந்து, காம்பு, கன்று.

இவ்வெடுத்துக் காட்டுகளில் இடையிலுள்ள ங், ஞ், ண், ந், ம், ன் —என்ற ஆறு மெய்யெழுத்துக் களும் மென்மையாக ஒலிக்கின்றன. ஆதலின், இவை மெல்லின மெய்யெழுத்துக்கள் ஆகும்.

நினைவிற் கொள்க

**ங், ஞ், ண், ந், ம், ன் — ஆறும் மென்மையாக ஒலிக்கின்ற மெய்யெழுத்துக்கள் ஆகும். ஆதலின், மெல்லினம் எனப்படும். இவை மெல்லெழுத்து, மென்கணம், மென்மை, மெலி என்றும் கூறப்படும்.**

ந. சூ. : மெல்லினம் ஙஞணந மன என ஆறே.

### (ஏ) இடையினம்

காய், உயிர், கல், கொவ்வை, தாழ்வு, தேள்.

இவ்வெடுத்துக் காட்டுகளில் இடையிலுள்ள ய், ர், ல், வ், ழ், ள் — என்ற ஆறு மெய்யெழுத்துக்களும் வல்லினம், மெல்லினம் இரண்டிற்கும் இடைப்பட்ட ஒலியுடன் ஒலிக்கின்றன. ஆதலின், இவை இடையின மெய்யெழுத்துக்கள் ஆகும்.

நினைவிற் கொள்க

ய், ர், ல், வ், ழ், ள் — ஆறும் வல்லினம் மெல்லினம் இரண்டிற்கும் இடைப்பட்ட ஒலியுடைய மெய்யெழுத்துக்கள் ஆகும். ஆதலின், இடையினம் எனப்படும். இவை இடையெழுத்து, இடைக்கணம், இடைமை, இடை என்றும் கூறப்படும்.

ந. சூ.: இடையினம் யரலவ ழளஎன ஆறே.

குறிப்பு : வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூவகை எழுத்துக்களையும் மூவினம் என்று வழங்குவர்.

## 3. சார்பு எழுத்து

### (அ) உயிர்மெய்

பசு

ப — (ப் + அ = ப). இதில் 'ப்' என்ற மெய்யெழுத்தும், 'அ' என்ற உயிர் எழுத்தும் சேர்ந்து உள்ளன.

சு — (ச் + உ = சு). இதில் 'ச்' என்ற மெய்யெழுத்தும், 'உ' என்ற உயிர் எழுத்தும் சேர்ந்து உள்ளன.

| | | |
|---|---|---|
| க் + அ = க | க் + உ = கு | க் + ஐ = கை |
| க் + ஆ = கா | க் + ஊ = கூ | க் + ஒ = கொ |
| க் + இ = கி | க் + எ = கெ | க் + ஓ = கோ |
| க் + ஈ = கீ | க் + ஏ = கே | க் + ஔ = கௌ |

இவ்வாறே பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் ஒவ்வொரு மெய்யெழுத்தோடும் தனித்தனி சேர்ந்து

ஒலிக்க $12 \times 18 = 216$ உயிர்மெய்யெழுத்துக்கள் உண்டாகும். இவை உயிர், மெய் என்ற முதலெழுத்துக்களைச் சார்ந்து தோன்றினவாகும்.

நினைவிற் கொள்க

'அ' முதல் 'ஔ' முடிய உள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும், 'க்' முதல் 'ன்' முடிய உள்ள பதினெட்டு மெய்யெழுத்துக்களோடும் சேர்ந்து ஒலிக்க ($12 \times 18 = 216$) இருநூற்றுப் பதினாறு எழுத்துக்கள் உண்டாகும். இவை உயிரும் மெய்யும் கூடுவதால் பிறக்கும் எழுத்துக்களாதலின் உயிர்மெய் எழுத்து என்று பெயர் பெற்றன.

குறிப்பு : உயிர்மெய்யெழுத்துக்களிலும் குறில், நெடில் என்ற பிரிவும், வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற பிரிவும் உண்டு.

## (ஆ) ஆய்தம்

*எஃகு, கஃசு, அஃது.*

இவற்றுள் 'எ, அ' இரண்டும் உயிர்க்குறில் ஆகும். 'க' உயிர்மெய்க் குறில் ஆகும். 'கு, சு, து' மூன்றும் வல்லின உயிர்மெய்க் குறில் ஆகும். இடையில் மூன்று புள்ளி வடிவில் ஓர் எழுத்து உள்ளது. இது நுண்ணிய ஓசையோடு ஒலிக்கின்றது. ஆதலின், இஃது ஆய்த வெழுத்து எனப்படும். இது தனித்து வராமல் முதலெழுத்துக்களைச் சார்ந்து வருதலால் சார்பு எழுத்து எனப்படும்.

நினைவிற் கொள்க

மூன்று புள்ளி வடிவில் அமைந்த எழுத்து ஆய்த வெழுத்தாகும். இது நுண்ணிய ஓசையுடைய எழுத்தாதலின் ஆய்த வெழுத்து என்று பெயர் பெற்றது. இது குற்றெழுத்திற்குப் பின்பும், வல்லின உயிர்மெய் எழுத்திற்கு முன்பும் வரும்.

உயிர்மெய், ஆய்தம்—இவைகளே யன்றிக் கீழே வருவனவும் முதலெழுத்துக்களைச் சார்ந்து வருவனவாகும்.

**உயிரளபெடை :** *தனக்குரிய மாத்திரையின் மிக்கு ஒலிக்கும் உயிரெழுத்து. [அளவு-மாத்திரை ; எடை - எடுத்தல், மிகுதல்.]*

**ஒற்றளபெடை :** *தனக்குரிய மாத்திரையின் மிக்கு ஒலிக்கும் மெய்யெழுத்து.*

**குற்றியலிகரம் :** *தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் 'இ' என்னும் எழுத்து.*

**குற்றியலுகரம் :** *தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் 'உ' என்னும் எழுத்து.*

**ஐகாரக் குறுக்கம் :** *தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் 'ஐ' என்னும் எழுத்து.*

**ஔகாரக் குறுக்கம் :** *தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் 'ஔ' என்னும் எழுத்து.*

**மகரக் குறுக்கம் :** *தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் 'ம்' என்னும் எழுத்து.*

**ஆய்தக் குறுக்கம் :** *தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் 'ஃ' என்னும் எழுத்து.*

### நினைவிற் கொள்க

**முதலெழுத்துக்களைச் சார்ந்து வரும் எழுத்து சார்பெழுத்தாகும். அஃது உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் எனப் பத்து வகைப்படும்.**

**குறிப்பு : உயிர்மெய் எழுத்தும், ஆய்த எழுத்தும் எழுத்தைச் சார்ந்து வருவனவாகும். ஏனைய எட்டும் சொல்லைச் சார்ந்து வருவனவாகும்.**

**ந. சூ.:** *உயிர்மெய், ஆய்தம், உயிரளபு, ஒற்றளபு*
*அஃகிய இ, உ, ஐ, ஔ, மஃகான்,*
*தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும்.*

### பயிற்சி

(அ) எழுத்து என்பது யாது ?

(ஆ) எழுத்து எத்துணை வகைப்படும்? அவை யாவை ?

(இ) அகச்சுட்டு, புறச்சுட்டு—இவற்றை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

(ஈ) அ, இ, உ,—இவை முறையே எவ்வெவ்விடங்களிலுள்ள பொருள்களைச் சுட்டும் ?

(உ) அகவினா, புறவினா—இவற்றை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

(ஊ) மெய்யெழுத்து எத்துணை வகைப்படும்? அவை அப்பெயர் பெறக் காரணம் யாது !

(எ) சார்பெழுத்து என்பது யாது ?

(ஏ) சார்பெழுத்துக்கள் எத்துணை வகைப்படும் ? அவை யாவை ?

(ஐ) கீழ்க்கண்ட சொற்களில் உள்ள அகச்சுட்டுகளையும், புறச் சுட்டுகளையும் எடுத்தெழுதுக:

அவ்வீடு, இவர், உப்பக்கம். அவ்வேலை, இப்பாடம், இச்சிறுநூல், உவன், இங்ஙனம்.

(ஒ) கீழ்க்கண்ட தொடர்களில் உள்ள அகவினாவையும், புறவினாவையும் எடுத்தெழுதுக.

(*i*) எவன் இதைச் செய்யுமாறு கூறினான் ?

(*ii*) எப்பொருளையும் பற்றி ஆய்ந்து ஒரு முடிவுக்கு வருவதே நல்லது.

(*iii*) இதனை உனக்குத் தந்தவர் யார் ?

(*iv*) செந்தமிழ்ச்சுவை தேனோ, பாலோ ?

(*v*) முருகனா இதைச் செய்தான் ?

## 4. குற்றியலுகரம்

குடக்கு, புடைப்பு.

இவ்வெடுத்துக் காட்டுகளில் கு,பு என்ற எழுத்துக்களை உச்சரித்துப் பாருங்கள். முதலில் உள்ள கு,பு நிறைந்த ஓசையுடையனவாகவும், ஈற்றில் உள்ள கு,பு குறைந்த ஓசையுடையனவாகவும் ஒலிக்கின்றன. இவ்வாறு சொல்லின் ஈற்றிலே வல்லினமெய் மீது ஏறி வரும் உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கும். அது குற்றியலுகரம் எனப்படும். (குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம் — குறுகிய ஓசையுடைய உகரம்.)

### நினைவிற் கொள்க

**தனிக் குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்களோடு தொடர்ந்து வரும் சொல்லின் ஈற்றிலே உள்ள வல்லின மெய்கள் மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கும். அவ்வுகரம் குற்றியலுகரம் ஆகும்.**

### (அ) நெடிற்றொடர்க் குற்றியலுகரம்

பாகு, காசு, காடு, காது, பாபு, பேறு.

இவ்வெடுத்துக் காட்டுகளில் தனிநெட்டெழுத்தின் பின் வந்த வல்லின மெய்கள் மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரைமாத்திரை ஒலிக்கின்றது.

### நினைவிற் கொள்க

ஈரெழுத்து ஒரு மொழியின் ஈற்றிலே நெட்டெழுத்தின் பின் உள்ள வல்லெழுத்தின் மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கும். அது நெடிற்றொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

### (ஆ) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

எஃகு, கஃசு, அஃது.

இவ்வெடுத்துக் காட்டுகளில் ஆய்த எழுத்தின் பின் வந்த வல்லின மெய்கள் மூன்றின்மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கின்றது.

நினைவிற் கொள்க

**சொல்லின் ஈற்றிலே ஆய்த எழுத்தின் பின் உள்ள வல்லெழுத்தின் மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கும். அஃது ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.**

### (இ) உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்

வரகு, பலாசு, பகடு, எருது, மரபு, வயிறு.

இவ்வெடுத்துக் காட்டுகளில் உயிர் எழுத்துக்களின் பின் வந்த வல்லின மெய்கள் மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கின்றது. (ர=ர்+அ ; லா=ல்+ஆ ; க=க்+அ ; ரு=ர்+உ ; யி=ய்+இ).

நினைவிற் கொள்க

**சொல்லின் ஈற்றிலே உயிர் எழுத்தின் பின் உள்ள வல்லெழுத்தின் மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கும். அஃது உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.**

### (ஈ) வன்றொடர்க் குற்றியலுகரம்

சுக்கு, அச்சு, பட்டு, பத்து, காப்பு, பற்று.

இவ்வெடுத்துக்காட்டுகளில் வல்லின மெய்களின் பின் வந்த வல்லின மெய்கள் மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கின்றது.

நினைவிற் கொள்க

**சொல்லின் ஈற்றிலே வல்லின மெய்யெழுத்தின் பின் உள்ள வல்லெழுத்தின் மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில்**

குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கும். அது வன்றொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

## (உ) மென்றொடர்க் குற்றியலுகரம்

சங்கு, பஞ்சு, துண்டு, பந்து, காம்பு, கன்று.

இவ்வெடுத்துக் காட்டுகளில் வல்லின மெய்களின் பின் வந்த வல்லினமெய்களின் மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கின்றது.

### நினைவிற் கொள்க

சொல்லின் ஈற்றிலே மெல்லின மெய்யெழுத்தின் பின் உள்ள வல்லெழுத்தின் மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கும். அது மென்றொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

## (ஊ) இடைத்தொடர்க் குற்றியலுகரம்

மார்பு, போழ்து, தெள்கு.

இவ்வெடுத்துக் காட்டுகளில் இடையின மெய்கள் மூன்றின் பின் உள்ள வல்லின மெய்கள் மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கின்றது.

### நினைவிற் கொள்க

சொல்லின் ஈற்றிலே இடையின மெய்யெழுத்தின் பின் வந்த வல்லெழுத்தின் மீது ஏறிய உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கும். அஃது இடைத் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

குறிப்பு : நெடிற்றொடர்க் குற்றியலுகரம் மட்டும் தான் ஈரெழுத்தொரு மொழியாக இருக்கும். ஏனைய ஐந்து தொடர்களும் இரண்டெழுத்துகட்கு மேற்பட்ட மொழி (சொல்)ஆக இருக்கும்.

நினைவிற் கொள்க

ஈற்றெழுத்தின் அயலெழுத்தைக் கொண்டு குற்றியலுகரம் நெடிற்றொடர், ஆய்தத் தொடர், உயிர்த் தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத் தொடர் என ஆறு வகையாக வழங்கப் படும்.

ந. சூ.: நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலிஇடை
தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் படுமே.

## (எ) முற்றியலுகரம்

கடு, ஏழு, கதவு, பள்ளு.

இவ்வெடுத்துக் காட்டுகளின் ஈற்றிலே உள்ள டு, ழு, வு, ளு என்ற எழுத்துக்களில் உள்ள உகரம் தனக்குரிய ஒரு மாத்திரை அளவு ஒலிக்கின்றது. ஆதலின், முற்றியலுகரம் ஆகும். (முற்று + இயல் + உகரம் = முற்றியலுகரம்-ஓசை நிறைந்த உகரம்.)

நினைவிற் கொள்க

தனித்து வரும் உகரமும், மெய்யெழுத்தின் மீது ஏறிய உகரமும், தனிக் குறிலின் பின் உள்ள வல்லெழுத்தின் மீது ஏறிய உகரமும், வல்லின மெய்கள் மீது ஏறிச் சொல்லின் முதலிலும், இடையிலும் வரும் உகரமும், மெல்லின, இடையின மெய்களின்மேல் ஏறி சொல்லின் முதல், இடை, கடை மூவிடத்தும் வரும் உகரமும் முற்றியலுகரமாகும்.

## (ஏ) குற்றியலிகரம்

வீடியாது, எஃகியாது, முரசியாது,

முத்தியாது, பாம்பியாது, நாற்றியாது.

இவ்வெடுத்துக் காட்டுகளை வீடு+யாது; எஃகு+யாது; முரசு+யாது; முத்து+யாது; பாம்பு+யாது; நாற்று+யாது என்று பிரிக்கலாம். இவற்றுள் நிலை மொழியில் உள்ளவை முறையே அறுவகைத்

தொடர்க் குற்றியலுகரங்களாகும். அவை வருமொழியில் 'யா' என்ற எழுத்து வந்தமையால் இகரமாகத் திரிந்தன. ஆதலின், 'டி, கி, சி, தி, பி, றி' என்பன வற்றின் மீதுள்ள இகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரைமாத்திரை அளவு ஒலிக்கின்றது. ஆதலின், குற்றியலிகரமாகும். (குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம் — குறைந்த ஓசையுடைய இகரம்.)

கேண்மியா, சென்மியா.

இவ்வெடுத்துக்காட்டுகளில் 'ம்' மீது ஏறிய இகரமும் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கின்றது.

**நினைவிற் கொள்க**

**நிலைமொழி ஈற்றிலே உள்ள குற்றியலுகரம் வருமொழி முதலில் யகரம் வரும்போது இகரமாகத் திரியும். அவ்வாறு திரிந்த இகரமும், கேண்மியா, சென்மியா என்ற அசைச் சொற்களில் மகரத்தின்மீது ஏறிய இகரமும் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கும். அது குற்றிய லிகரமாகும்.**

ந. சூ.: யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய.

## 5. மாத்திரை

அறம், ஆண், பலா, பஃறி.

இவ்வெடுத்துக் காட்டுகளில் அ, ஆ — இரண்டும் உயிர் எழுத்துக்கள் என்றும், ம், ண் — இரண்டும் மெய்யெழுத்துக்கள் என்றும், ற, ப, லா, றி — என்பன உயிர் மெய்யெழுத்துக்கள் என்றும், ஃ — ஆய்த எழுத்து என்றும் அறிவீர்கள். இவ்வெழுத்துக்கள் ஒவ்வொன்றையும் ஒலித்துப் பார்த்து ஒலிக்கும் கால அளவை அறியுங்கள்.

அ—உயிர்க்குறில்: ஒரு மாத்திரை அளவு ஒலிக்கிறது.

ற, ப, றி—உயிர்மெய்க் குறில்கள்: ஒரு மாத்திரை அளவு ஒலிக்கின்றன.

ஆ— உயிர் நெடில்; இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கிறது.

லா —உயிர்மெய் நெடில்; இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கிறது.

ம், ண்—மெய் எழுத்துக்கள்; அரை மாத்திரை அளவு ஒலிக்கின்றன.

ஃ—ஆய்த எழுத்து; அரை மாத்திரை அளவு ஒலிக்கிறது.

நினைவிற் கொள்க

**இயல்பாகக் கண் இமைக்கும் நேரம் அல்லது கை நொடிக்கும் நேரம் ஒரு மாத்திரைக்குரிய கால அளவாகும்.**

ந. சூ.: இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை.

1. உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில்—ஒரு மாத்திரை.
2. உயிர்நெடில், உயிர்மெய் நெடில்—இரண்டு மாத்திரை.
3. மெய், ஆய்தம்—அரை மாத்திரை.
4. உயிரளபெடை—மூன்று மாத்திரை.
5. ஒற்றளபெடை—ஒரு மாத்திரை.
6. குற்றியலுகரம், குற்றயலிகரம்—அரை மாத்திரை.
7. ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம்—ஒரு மாத்திரை.
8. 'மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம்—கால் மாத்திரை.

**குறிப்பு :** க, கா முதலிய உயிர்மெய் யெழுத்துக்களில் க் + அ, க் + ஆ என மெய்யும் உயிரும் சேர்ந்து

இருந்தாலும் அவற்றிற்கு முறையே மாத்திரை ஒன்றரையும், இரண்டரையும் ஆதல் இல்லை. 'க' என்ற எழுத்திற்கு மாத்திரை ஒன்றும், 'கா' என்ற எழுத்திற்கு மாத்திரை இரண்டுமே ஆகும். மெய் மீது ஏறிய உயிரெழுத்தின் மாத்திரையையே உயிர்மெய் யெழுத்திற்குக் கொள்ள வேண்டும்.

தயிரோஒ தயிர் (பண்டமாற்று)

தம்பீஇஇ! (விளி)

ஐயாவோஒ (புலம்பல்)

இவ்வாறு பண்டமாற்று, விளி, புலம்பல், இசை முதலியவற்றில் எழுத்துக்கள் தமக்குரிய மாத்திரை அளவைக் கடந்து ஒலிக்கும். இசையில் நீண்டொலித் தலைப் பாடும்போது கேட்டு அறிக.

### பயிற்சி

(அ) குற்றியலுகரத்தின் இலக்கணத்தை எழுதுக.

(ஆ) குற்றியலுகரத்தின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(இ) சங்கு, காசு, வண்டு, பந்து, விறகு, அடக்கு, எ.்கு, மாடு, தராசு, அச்சு, மார்பு—இவை ஒவ்வொன்றும் எத் தொடர்க் குற்றியலுகரமென்று எடுத்தெழுதுக.

(ஈ) குற்றியலிகரத்தின் இலக்கணம் யாது?

(உ) கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளிலமைந்த குற்றிய லுகரங்களையும், முற்றியலுகரங்களையும் எடுத்தெழுதுக:

சுக்கு, பசு, பாடு, கதவு, முழக்கு, முழவு, அடங்கு, தும்மு, குடகு, மடு, இது, சார்பு, தேர்வு.

(ஊ) மாத்திரை என்பது யாது?

(எ) ஒரு மாத்திரையின் அளவு யாது?

(ஏ) உயிர்மெய்க்குறில், நெடில், ஆய்தம், குற்றியலுகரம், ஔகாரக் குறுக்கம் — இவை ஒவ்வொன்றுக்கும் உரிய மாத்திரையைக் குறிப்பிடுக.

(ஐ) எழுத்துக்கள் அளவிறந்து ஒலிக்குமிடங்கள் யாவை?

# II. சொல்

## 1. பதம்

ஆ, புறா, குதிரை.

இவற்றுள் 'ஆ' என்பது ஓர் எழுத்துமட்டும் நின்று 'பசு' என்ற விலங்கையும், 'புறா' என்பது 'பு, றா' என்ற இரண்டு எழுத்துக்கள் சேர்ந்து ஒரு பறவையையும், 'குதிரை' என்பது 'கு, தி, ரை' என்ற மூன்று எழுத்துக்கள் சேர்ந்து ஒரு விலங்கையும் குறித்தன. ஆதலின், இவை சொற்களாகும்.

றாபு, ரை திகு.

இவற்றுள்ளும் அவ்வெழுத்துக்களே உள்ளன. ஆயினும் 'றாபு' என்பது எப்பொருளையும் உணர்த்த வில்லை. 'ரைதிகு' என்பது எப்பொருளையும் உணர்த்த வில்லை. எழுத்துக்கள் சேர்ந்திருப்பினும் பொருள் தராமையால் இவை சொற்களாகா.

**நினைவிற் கொள்க**

ஓர் எழுத்து தனித்து நின்று பொருள் தருவதும், ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து பொருள் தருவதும் பதம் ஆகும். இது சொல் என்றும் கூறப்படும்.

## 2. ஓரெழுத்து ஒருமொழி

கை ஒடிந்தது.

இது 'கை என்ற உறுப்பு ஒடிந்தது' என்று பொருள் தருகிறது. இதில் 'கை' என்பது ஓர் எழுத்து மட்டும் நின்று ஓர் உறுப்பு என்ற பொருளைத் தந்தது. இதுபோன்று 'ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, கா, கூ, கோ, சா, சீ, சே, சோ, தா, தீ, தூ, தே, தை, நா, நீ, நே, நை, நொ, பா, பூ, பே, பை, போ, மா, மீ, மூ, மை, மோ, வா, வீ, வை' முதலிய எழுத்துக்களும் தனித்து நின்று பொருள் தருவனவாகும்.

[ஊ - தசை. ஏ - அம்பு. ஐ - அழகு, தலைமை. ஓ - மதகு நீர் தாங்கும் பலகை. ஔ - கடித்தல். கா - சோலை. கூ - பூமி. கோ - அரசன். சா - இற. சீ - சீழ். சே - எருது. சோ - அரண். தூ - தூய்மை, வெண்மை. தே - தெய்வம். நா - நாக்கு. நே - அன்பு. நை-வருந்து. நொ - வருந்து, நோய். பா - பாடல். பே - நுரை. மீ - மேல். மூ - மூப்பு. மை - மேகம், எழுது மை. மோ - முகர். வீ-பூ. வௌ - அபகரி.

#### நினைவிற் கொள்க

**ஓர் எழுத்து தனித்து நின்று பொருள் தருவது ஓர் எழுத்து ஒரு மொழியாகும்.**

## தொடர் எழுத்து ஒருமொழி

பசு கன்று ஈன்றது.

இவ்வெடுத்துக் காட்டில் 'பசு' என்பது இரண்டு எழுத்துக்கள் சேர்ந்து நின்றும், 'கன்று' என்பது மூன்று எழுத்துக்கள் சேர்ந்து நின்றும், 'ஈன்றது' என்பது நான்கு எழுத்துக்கள் சேர்ந்து நின்றும் பொருள் தந்தன. ஆதலின், இவை ஒவ்வொன்றும் சொல் ஆகும்.

#### நினைவிற் கொள்க

**ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து நின்று பொருள் தருவன தொடர் எழுத்து மொழியாகும். (மொழி, பதம், கிளவி, சொல் என்பன ஒரு பொருள் தருவனவாகும்.)**

## 3. பகாப் பதம்

**கல், பல்.** (பெயர்ப் பகாப்பதம்.)
**வா, நில்.** (வினைப் பகாப்பதம்.)
**பிற, தில்.** (இடைப் பகாப்பதம்.)
**கூர், சால்.** (உரிப் பகாப்பதம்.)

இவை எழுத்துக்கள் சேர்ந்து பொருள் தருகின்ற மையால் சொற்கள் ஆகும். இவை ஒவ்வொன்றும்

பதமாகும். இப் பதங்களைப் பிரித்தால் அவை பொருள் தருவன அல்ல. ஆதலின், இவைகள் பிரிக்க முடியாத பதங்களாகும்.

நினைவிற் கொள்க

**பகுதி, விகுதி முதலியனவாகப் பிரிக்க முடியாத பதம் (சொல்) பகாப்பதம் ஆகும். (பகாப்பதம் - பிரிக்க முடியாத சொல்.)**

## பகுபதம்

வலைஞன். (பெயர்ப் பகுபதம்)
செய்தாள். (வினைப் பகுபதம்)
போன்றார். (இடைப் பகுபதம்)
சான்றார். (உரிப் பகுபதம்)

இவற்றுள் 'வலைஞன்' என்பதை 'வலை + ஞ் + அன்' எனப் பிரிக்கலாம். 'வலை' என்பது பெயர்ச் சொல். ஆதலின், வலைஞன் பெயர்ப் பகுபதம் ஆகும்.

'செய்தான்' என்பதை 'செய் + த் + ஆன்' எனப் பிரிக்கலாம். 'செய்' என்பது வினைச்சொல். ஆதலின், 'செய்தான்' வினைப் பகுபதம் ஆகும்.

'போன்றார்' என்பதை 'போல் + ற் + ஆர்' எனப் பிரிக்கலாம். 'போல்' என்பது இடைச்சொல். ஆதலின், 'போன்றார்' இடைப் பகுபதம் ஆகும்.

'சான்றார்' என்பதை 'சால் + ற் + ஆர்' எனப் பிரிக்கலாம். 'சால்' என்பது இடைச்சொல். ஆதலின், 'சான்றார்' உரிப்பகுபதம் ஆகும்.

நினைவிற் கொள்க

**பகுதி, விகுதி முதலியனவாகப் பிரிக்கக்கூடிய பதம் (சொல்) பகுபதம் ஆகும். (பகுபதம்—பிரிக்கக்கூடிய சொல்.)**

## 4. பகுபத உறுப்புக்கள்

### (அ) பகுதி

செய்தான், செய்கிறாள், செய்வார்.

இவ்வெடுத்துக் காட்டுகளை 'செய் + த் + ஆன்; செய் + கிறு + ஆள்; செய் + வ் + ஆர்' எனப் பிரிக்க லாம். ஆதலின், இவை பகுபதம் ஆகும். இவை செய்த லாகிய தொழிலை உணர்த்துகின்றன. செய்தல் தொழிலை முதலில் உள்ள 'செய்' என்பது உணர்த்து கின்றது. இது பகுதியாகும்.

**நினைவிற் கொள்க**

**பிரிக்கக்கூடிய சொல்லில் முதலில் நிற்கும் பகாப்பதம் பகுதியாகும். அது முதலில் நிற்பதால் முதனிலை என்றும் கூறப் படும்.**

குறிப்பு: வினைப் பகுபதத்தில் பகுதி கட்டளைச் சொல்லாக இருக்கும்.

## (ஆ) விகுதி

வென்றான், வெல்கிறாள், வெல்வார்.

வெல் + ற் + ஆன் = வென்றான். இதில் 'வெல்' பகுதி. 'வெல்லுதல் தொழிலைச் செய்தது யார்?' என்று கேள்வி கேட்டால் ஓர் ஆண் மகன் என்று பதில் வரும். அதனைத் தெரிவிப்பது கடைசியிலுள்ள 'ஆன்' என்ற உறுப்பு ஆகும்.

வெல் + கிறு + ஆள் = வெல்கிறாள். இதில் 'வெல்லு தல் தொழிலைச் செய்கிறது யார்?' என்று கேள்வி கேட்டால் ஒரு பெண் என்று பதில் வரும். அதனைத் தெரிவிப்பது கடைசியிலுள்ள 'ஆள்' என்ற உறுப்பு ஆகும்.

வெல் + வ் + ஆர் = வெல்வார். இதில் 'வெல்லுதல் தொழிலைச் செய்யப் போவது யார்?' என்று கேள்வி கேட்டால் மனிதர் என்று பதில் வரும். அதனைத் தெரிவிப்பது கடைசியிலுள்ள 'ஆர்' என்ற உறுப்பு ஆகும்.

இவை மூன்றிலும் கடைசியிலுள்ள உறுப்பாகிய ஆன், ஆள், ஆர் என்பன படர்க்கை யிடத்தில்

முறையே ஆண்பால், பெண்பால், பலர்பால் என்பவை களைக் குறித்தன. ஆதலின், இவை விகுதியாகும்.

நினைவிற் கொள்க

பிரிக்கக் கூடிய சொல்லில் இறுதியிலே உள்ள உறுப்பே விகுதி யாகும். இது கருத்தாவின் திணை, பால், எண், இடங் களை உணர்த்தும். இறுதியிலே உள்ளமையின் இறுதி நிலை என்றும் கூறப்படும்.

## (இ) இடைநிலை

அறிஞன், உண்டான், செல்கிறாள், தின்பார்.

அறி + ஞ் + அன் = அறிஞன். இது பெயர்ச் சொல் லாகும். 'அறி'—பகுதி. 'அன்'—விகுதி. பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் 'ஞ்' வந்துள்ளது. ஆதலின், ஞ் பெயரிடை நிலையாகும்.

உண் + ட் + ஆன் = உண்டான். இது வினைமுற் றுச் சொல்லாகும். இச்சொல் தொழில் முன்பே நடந்து விட்டதைத் தெரிவிக்கிறது. 'உண்'—பகுதி. 'ஆன்'—விகுதி. பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் 'ட்' வந் துள்ளது. ஆதலின், ட் இறந்தகால இடைநிலையாகும்.

செல் + கிறு + ஆள் = செல்கிறாள். இது வினை முற்றுச் சொல்லாகும். இச்சொல் தொழில் இப்பொழுது நிகழ்வதைத் தெரிவிக்கிறது. 'செல்'—பகுதி. 'ஆள்' —விகுதி. பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் 'கிறு' வந்துள்ளது. ஆதலின், கிறு நிகழ்கால இடைநிலை யாகும்.

தின் + ப் + ஆர் = தின்பார். இது வினைமுற்றுச் சொல்லாகும். இச்சொல் தொழில் இனி நடைபெறப் போவதைத் தெரிவிக்கிறது. 'தின்'—பகுதி. 'ஆர்'—விகுதி. பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் 'ப்' வந் துள்ளது. ஆதலின், ப்—எதிர்கால இடைநிலை யாகும்.

நினைவிற் கொள்க

**பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்பது இடைநிலை.**

குறிப்பு: பகுபதத்திற்கு பகுதி, விகுதி என்ற இரண்டும் முக்கிய உறுப்புக்களாகும். வினைச் சொல்லாயின் இடைநிலை பெரும்பாலும் காலம் காட்டும்.

**(ஈ) சாரியை**

செய்தது, வாழ்கின்றன.

செய் + த் + அ + து = செய்தது. இது வினைமுற்றுச் சொல்லாகும். 'செய்'—பகுதி. 'து'—விகுதி. 'த்'—இறந்தகால இடைநிலை. இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் 'அ' என்பது அவற்றைச் சார்ந்து வந்தது. ஆதலின், அ சாரியையாகும்.

வாழ் + கின்று + அன் + அ = வாழ்கின்றன.

இது வினைமுற்றுச் சொல்லாகும். 'வாழ்'—பகுதி, 'அ'—விகுதி. 'கின்று'—நிகழ்கால இடைநிலை. இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் 'அன்' என்பது அவற்றைச் சார்ந்து வந்தது. ஆதலின், அன் சாரியையாகும்.

நினைவிற் கொள்க

**இடைநிலையையோ விகுதியையோ சார்ந்து இயைவது சாரியை ஆகும்.**

**(உ) சந்தி**

படித்த, எடுப்பாள்.

படி + த் + த் + அ = படித்த.

இது பெயரெச்ச மாகும். 'படி'—பகுதி. 'அ'—பெயரெச்ச விகுதி. 'த்'—இறந்தகால இடைநிலை. பகுதியும் இடைநிலையும் சந்திக்கும் போழ்து 'த்' தோன்றியது. ஆதலின், த் சந்தியாகும்.

எடு + ப் + ப் + ஆள் = எடுப்பாள்.

இது வினைமுற்றுச் சொல்லாகும். ' எடு '—பகுதி. ' ஆள் '—விகுதி. ' ப் '—எதிர்கால இடைநிலை. பகுதியும் இடைநிலையும் சந்திக்கும்போழ்து ' ப் ' தோன்றியது. ஆதலின், ப் சந்தியாகும்.

நினைவிற் கொள்க

பகுதியும் இடைநிலையும் சந்திக்கும் போழ்து தோன்றுவது சந்தியாகும்.

**(ஊ) விகாரம்**

எழுந்து, ஓடிய.

எழு + த் (ந்) + த் + உ = எழுந்து.

இது வினை எச்சமாகும். ' எழு '—பகுதி. ' உ '—விகுதி. ' த் '— இறந்தகால இடைநிலை. ' த் '—சந்தி. சந்தியிலுள்ள ' த் ' ' ந் ' எனத் திரிந்தது விகாரம்.

ஓடு + இன் (ய்) + அ = ஓடிய. இது பெயரெச்சமாகும். ' ஓடு '—பகுதி. ' அ '—விகுதி. ' இன் '—இறந்தகால இடைநிலை. இடைநிலை ' ன் ' கெட்டது விகாரம். ' ய் '—உடம்படு மெய் தோன்றியது விகாரம்.

நினைவிற் கொள்க

பகுதி முதலிய உறுப்புக்களில் புதிதாக எழுத்துக்கள் தோன்றுதலோ, உள்ள எழுத்துக்கள் திரிதலோ, குறுகலோ, கெடுதலோ விகாரம் ஆகும்.

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகிய ஆறும் பகுபத வுறுப்புக்கள் ஆகும்.

குறிப்பு : இந்த ஆறு உறுப்புக்களில் சில குறைந்து வரும். பகுதியும் விகுதியும் பகுபதத்திற்கு இன்றியமையாதனவாகும்.

ந.சூ. : பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

பயிற்சி

(அ) சொல் என்பது யாது ?

(ஆ) ஓரெழுத்தொரு மொழி என்பதை விளக்கி எடுத்துக் காட்டுகளும் தருக.

(இ) பகுபதத்தின் இலக்கணம் யாது ?

(ஈ) பகுபத உறுப்புக்கள் யாவை ?

(உ) பகாப்பதம் எத்துணை வகைப்படும் ? வகைக்கோர் எடுத்துக்காட்டு தருக.

(ஊ) கீழ்வரும் சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக : கூனன், செய்தான், படித்தாள், வந்தார், சென்றது, நடந்தார், நடந்தனன்.

## 5. ஆகுபெயர்

நான் **பள்ளி** சென்றேன்.

*விளையாட்டுப் போட்டியில் என்* **பள்ளி** *வென்றது.*

முதல் தொடரில் உள்ள 'பள்ளி' என்ற பெயர் அதன் பொருளாகிய இடத்தினை உணர்த்துகின்றது. ஆதலின், இடப்பெயர்.

இரண்டாம் தொடரில் உள்ள 'பள்ளி' என்ற இடப்பெயர் இடத்தினை உணர்த்த வில்லை. 'வென்றது' என்ற குறிப்பால் 'பள்ளி' என்பது பள்ளியில் பயிலும் மாணவர்களை உணர்த்துகின்றது. 'பள்ளி' என்ற இடப் பெயர் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குப் பெயராக ஆகி வந்தமையால் ஆகுபெயர் ஆகும்.

நினைவிற் கொள்க

**ஒன்றனது பெயர் தனக்குரிய பொருளை உணர்த்தாமல், அதனோடு தொடர்புடைய பொருளுக்குப் பெயராக ஆகித் தொன்று தொட்டு வழங்கி வருவது ஆகுபெயர். ஆகுபெயர் 16 வகைப்படும்.**

## (1) பொருளாகு பெயர்

**தாமரை போன்ற முகம்.**

இது 'தாமரை மலர் போன்ற முகம்' என்று பொருள் தருகிறது. 'தாமரை' என்ற பெயர் 'தாமரைக் கொடி' என்ற பொருளின் பெயர் ஆகும். ஆனால், இங்குத் 'தாமரை' என்பது 'தாமரைக் கொடி' என்ற பொருளினை உணர்த்தாமல், அதன் சினை (உறுப்பு) ஆகிய மலருக்குப் பெயராக ஆகிவந்தது.

**நினைவிற் கொள்க**

ஒரு பொருளின் பெயர் அதன் தொடர்புடைய சினைக்குப் பெயராக ஆகி வருவது பொருளாகுபெயர். இது முதலாகு பெயர் என்றும் கூறப்படும்.

## (2) இடவாகு பெயர்

**ஊர் அடங்கிற்று.**

இது 'ஊரிலுள்ள மக்கள் அடங்கினர்' என்று பொருள் தருகிறது. 'ஊர்' என்பது இடப்பெயர் ஆகும். ஆனால், இங்கு 'ஊர்' என்பது இடத்தினை உணர்த்தாமல், அவ்விடத்தில் வாழும் மக்களுக்குப் பெயராக ஆகி வந்தது.

**நினைவிற் கொள்க**

ஓர் இடத்தின் பெயர் அவ்விடத்தோடு தொடர்புடைய பொருளுக்குப் பெயராக ஆகி வருவது இடவாகுபெயர்.

## (3) காலவாகு பெயர்

**கார் அறுவடை ஆயிற்று.**

இது 'கார் காலத்தில் விளையும் நெல் அறுவடை ஆயிற்று' என்று பொருள் தருகிறது. 'கார்' என்பது காலப் பெயர் ஆகும். ஆனால், இங்குக் 'கார்' என்பது காலத்தினை உணர்த்தாமல், அக்காலத்தில் விளையும் நெல்லுக்குப் பெயராக ஆகி வந்தது. (ஆவணி புரட்டாசி—கார்காலம்.)

நினைவிற் கொள்க

ஒரு காலத்தின் பெயர் அக்காலத்தோடு தொடர்புடைய பொருளுக்குப் பெயராக ஆகி வருவது காலவாகுபெயர்.

## (4) சினையாகு பெயர்

தலைக்கு ஒரு வாழைப்பழம் தா.

இது 'மனிதனுக்கு ஒரு வாழைப்பழம் தா' என்று பொருள் தருகிறது. 'தலை' என்பது சினைப் பெயர். ஆனால், இங்குத் 'தலை' என்பது சினையினை உணர்த் தாமல், அச்சினையினையுடைய பொருளுக்கு (முதலுக்கு)ப் பெயராக ஆகி வந்தது.

நினைவிற் கொள்க

ஒரு சினையின் (உறுப்பின்) பெயர் அச்சினையினை (உறுப்பினை)க் கொண்ட பொருளுக்குப் பெயராக ஆகி வருவது சினையாகு பெயர்.

குறிப்பு: பொருளாகு பெயரும் சினையாகு பெயரும் தம்முள் நேர்மாறுபாடு உடையவை ஆகும்.

## (5) பண்பாகு பெயர்

இனிப்பு உண்டான்.

இது 'இனிப்புச் சுவையுடைய பொருளை உண்டான்' என்று பொருள் தருகிறது. 'இனிப்பு' என்பது பண்புப் பெயர். ஆனால், இங்கு 'இனிப்பு' என்பது பண்பினை உணர்த்தாமல், அப்பண்பினைக் கொண்ட பொருளுக்குப் பெயராக ஆகி வந்தது.

நினைவிற் கொள்க

ஒரு பண்பின் பெயர் அப்பண்பினைக் கொண்ட பொருளுக்குப் பெயராக ஆகிவருவது பண்பாகு பெயர். இது குணவாகு பெயர் என்றும் கூறப்படும்.

## (6) தொழிலாகு பெயர்

வற்றல் உண்டான்.

இது 'வற்றுதல் தொழிலை அடைந்த பொருளை உண்டான்' என்று பொருள் தருகிறது. 'வற்றல்' என்பது தொழிற்பெயர். ஆனால், இங்கு 'வற்றல்' என்பது தொழிலை உணர்த்தாமல், அத்தொழிலைக் கொண்ட பொருளுக்குப் பெயராக ஆகி வந்தது.

நினைவிற் கொள்க

ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலைக் கொண்ட பொருளுக்குப் பெயராக ஆகி வருவது தொழிலாகு பெயர்.

## (7) எண்ணலளவை ஆகுபெயர்

ஆமைபோல் ஐந்து அடக்குக.

இது "ஆமை கால்களையும் தலையையும் ஒட்டினுள் அடக்குதல் போல ஐம்பொறிகளையும் அடக்குக" என்று பொருள் தருகிறது. 'ஐந்து' என்பது எண்ணலளவுப் பெயர் ஆகும். ஆனால், இங்கு 'ஐந்து' என்பது எண்ணிக்கையை உணர்த்தாமல், அவ்வெண்ணிக்கையைக் கொண்ட பொறிகளுக்குப் பெயராக ஆகி வந்தது.

நினைவிற் கொள்க

ஓர் எண்ணலளவுப் பெயர் அவ்வெண்ணிக்கையினைக் கொண்ட பொருளுக்குப் பெயராக ஆகிவருவது எண்ணலளவையாகு பெயர்.

## (8) எடுத்தலளவை ஆகுபெயர்

சர்க்கரை விற்கும் கடையில் நான்கு **வீசை** வாங்கினேன்.

இது 'சர்க்கரை விற்கும் கடையில் நான்கு வீசை சர்க்கரை வாங்கினேன்' என்று பொருள் தருகிறது. 'வீசை' என்பது எடுத்தல் (நிறுத்தல்) அளவுப் பெயர் ஆகும். ஆனால், இங்கு 'வீசை' என்பது அளவை உணர்த்தாமல், அவ்வளவினைக் கொண்ட சர்க்கரைக்குப் பெயராக ஆகி வந்தது.

நினைவிற் கொள்க

ஓர் எடுத்தலளவுப் பெயர் அவ்வளவினைக் கொண்ட பொருளுக்குப் பெயராக ஆகி வருவது எடுத்தலளவை யாகு பெயர்.

## (9) முகத்தலளவை யாகுபெயர்

உண்பது நாழி.

இது 'உண்பது நாழி அளவு கொண்ட அரிசி' என்று பொருள் தருகிறது. 'நாழி' முகத்தலளவுப் பெயர் ஆகும். ஆனால், இங்கு 'நாழி' என்பது முகத்தல் அளவை உணர்த்தாமல், அவ்வளவினைக் கொண்ட அரிசிக்குப் பெயராக ஆகி வந்தது.

நினைவிற் கொள்க

ஒரு முகத்தலளவுப் பெயர், அவ்வளவினைக் கொண்ட பொருளுக்குப் பெயராக ஆகி வருவது முகத்தலளவை யாகு பெயர்.

## (10) நீட்டலளவை யாகுபெயர்

துணிக் கடையில் இரண்டு முழம் வாங்கினேன்.

இது 'துணிக்கடையில் இரண்டு முழம் அளவுள்ள துணி வாங்கினேன்' என்று பொருள் தருகிறது. 'முழம்' என்பது நீட்டலளவுப் பெயர் ஆகும். ஆனால், இங்கு 'முழம்' என்பது நீட்டலளவை உணர்த்தாமல், அவ்வளவினைக் கொண்ட துணிக்குப் பெயராக ஆகி வந்தது.

நினைவிற் கொள்க

ஒரு நீட்டலளவுப் பெயர், அவ்வளவினைக் கொண்ட பொருளுக்குப் பெயராக ஆகி வருவது நீட்டலளவை யாகு பெயர்.

## (11) சொல்லாகு பெயர்

நீ சொன்ன உரை எனக்குப் புரியவில்லை.

இது 'நீ சொன்ன உரையின் (சொல்லின்) பொருள் எனக்குப் புரியவில்லை' என்று பொருள் தருகிறது. 'உரை' என்பது ஒரு சொல் ஆகும். ஆனால், இங்கு 'உரை' என்ற சொல் சொல்லினை உணர்த்தாமல், அதன் பொருளுக்குப் பெயராக ஆகி வந்தது.

நினைவிற் கொள்க

ஒரு சொல்லின் பெயர் அச்சொல்லின் பொருளுக்குப் பெயராக ஆகி வருவது சொல்லாகு பெயர்.

## (12) தானியாகு பெயர்

தலையிலிருந்து தயிரை இறக்குக.

இது 'தலையிலிருந்து தயிருள்ள பாத்திரத்தை இறக்குக' என்று பொருள் தருகிறது. 'தயிர்' என்பது ஒரு பொருளின் பெயராகும். 'பாத்திரம்' தயிர் இருக்கும் இடமாகும். ஆனால், இங்குத் தயிர் என்பது பொருளை உணர்த்தாமல், அதன் இருப்பிடமாகிய பாத்திரத்திற்குப் பெயராக ஆகி வந்தது. (தானி - தயிர்; தானம் - பாத்திரம்)

நினைவிற் கொள்க

ஒரு தானியின் பெயர் அது இருக்கும் தானத்திற்கு (இடத்திற்கு)ப் பெயராக ஆகி வருவது தானியாகு பெயர். (தானம் - இடம்; தானி - இடத்திலுள்ள பொருள்)

குறிப்பு : இட வாகுபெயரும் தானியாகுபெயரும் தம்முள் நேர் மாறுபாடு உடையவை யாகும்.

## (13) கருவியாகு பெயர்

குறள் கற்றேன்.

இது 'குறள் என்ற நூலைக் கற்றேன்' என்று பொருள் தருகிறது. 'குறள்' என்பது இரண்டடி வெண்பாவின் பெயராகும். ஆனால், இங்குக் 'குறள்' என்பது இரண்டடி வெண்பாவை உணர்த்தாமல், அவ் வெண்பாவினைக் கொண்ட நூலுக்குப் பெயராக ஆகி வந்தது. (கருவி-குறள் ; காரியம்-நூல்.)

நினைவிற் கொள்க

ஒரு கருவியின் (காரணத்தின்) பெயர் அதன் காரியத்திற்குப் பெயராக ஆகி வருவது கருவியாகு பெயர். இது "காரணவாகு பெயர்" என்றும் கூறப்படும். (கருவி-காரணம்.)

## (14) காரிய வாகுபெயர்

அலங்காரம் படித்தேன்.

இது 'அலங்காரத்திற்குக் காரணமான நூலைப் படித்தேன்' என்று பொருள் தருகிறது. 'அலங்காரம்' காரியம். ஆனால், இங்கு 'அலங்காரம்' என்பது காரியத்தை உணர்த்தாமல், அவ்வலங்காரத்திற்குக் காரணமான நூலுக்கு (கருவிக்கு)ப் பெயராக ஆகி வந்தது. (காரியம்-அலங்காரம் ; கருவி-நூல்.)

நினைவிற் கொள்க

ஒரு காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்கு(க் கருவிக்கு)ப் பெயராக ஆகி வருவது காரியவாகு பெயர்.

குறிப்பு : கருவியாகு பெயரும், காரிய வாகு பெயரும் தம்முள் நேர் மாறுபாடு உடையவையாகும்.

## (15) கருத்தா வாகுபெயர்

திருவள்ளுவர் படித்தேன்.

இது 'திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளைப் படித்தேன்' என்று பொருள் தருகிறது. 'திருவள்ளுவர்' என்பது ஆசிரியர் (கருத்தா) பெயர் ஆகும். ஆனால், இங்குத் 'திருவள்ளுவர்' என்பது ஆசிரியரை உணர்த்தாமல், அவரால் இயற்றப் பெற்ற நூலுக்குப் பெயராக ஆகி வந்தது.

நினைவிற் கொள்க

ஒரு கருத்தாவின் பெயர் அக் கருத்தாவால் செய்யப்பட்ட பொருளுக்குப் பெயராக ஆகி வருவது கருத்தாவாகுபெயர். (கருத்தா-தொழில் செய்வோன்.)

## (16) உவமை யாகுபெயர்

*அநுமன் இலங்கையில் மயிலே வணங்கினுன்.*

இது '*அநுமன் இலங்கையில் மயில்போன்ற சாயலுடைய சீதையை வணங்கினுன்*' என்று பொருள் தருகிறது. '*மயில்*'—உவமை. '*சீதை*'—உவமேயம். ஆனுல், இங்கு '*மயில்*' என்பது மயில் என்ற பறவையை உணர்த்தாமல், மயில் போன்ற சாயலுடைய சீதைக்குப் பெயராக ஆகி வந்தது.

### நினைவிற் கொள்க

**ஓர் உவமையின் (உவமானத்தின்) பெயர் உவமேயத்திற்குப் பெயராக ஆகிவருவது உவமையாகுபெயர்.**

ந.சூ. : *பொருள்முதல் ஆறேடு அளவைசொல் தானி*
*கருவி காரியம் கருத்தன் ஆதியுள்*
*ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்*
*தொன்முறை உரைப்பன ஆகு பெயரே.*

### பயிற்சி

(அ) ஆகுபெயரின் இலக்கணத்தை எழுதுக.

(ஆ) ஆகுபெயர் எத்துணை வகைப்படும்? அவை யாவை?

(இ) முதலாகு பெயருக்கும், சினையாகு பெயருக்கும் உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்துக.

(ஈ) இடவாகு பெயருக்கும், தானியாகு பெயருக்கும் உள்ள வேறுபாட்டை எழுதுக.

(உ) பொங்கல் உண்டான், மதுரை நகரமே திரண்டு வந்தது, காளை வந்தான், வெற்றிலை நட்டான், ஆளுக்கு ஒன்று கொடு.—இவை ஒவ்வொன்றும் ஆகுபெயருள் எதனைச் சேர்ந்தது என்பதை விளக்கி யெழுதுக.

## 6. தொழிற் பெயர் விகுதிகள்

*செய்தல், ஓடல், வாட்டம், வாழ்க்கை.*

இவை தொழிலை உணர்த்துகின்றன. ஆதலின், தொழிற் பெயர்களாகும். செய் + தல் = செய்தல்; ஓடு + அல் = ஓடல்; வாடு + அம் = வாட்டம்; வாழ் + க் + கை = வாழ்க்கை. இத் தொழிற் பெயர்கள் நான்கிற்கும் முறையே 'தல், அல், அம், கை' விகுதிகளாகும். ஆதலின், இவை தொழிற் பெயர் விகுதிகளாகும்.

| தொழிற் பெயர் | | விகுதி |
|---|---|---|
| பாடுதல் | பாடு + தல் | தல் |
| ஆடல் | ஆடு + அல் | அல் |
| ஓட்டம் | ஓடு + அம் | அம் |
| பொறை | பொறு + ஐ | ஐ |
| செல்கை | செல் + கை | கை |
| பார்வை | பார் + வை | வை |
| போக்கு | போ + க் + கு | கு |
| பிறப்பு | பிற + ப் + பு | பு |
| செலவு | செல் + அ + வ் + உ | உ |
| மறதி | மற + தி | தி |
| காட்சி | காண் + சி | சி |
| கல்வி | கல் + வி | வி |
| கடவுள் | கட + உள் | உள் |
| சாக்காடு | சா + காடு | காடு |
| கோட்பாடு | கோள் + பாடு | பாடு |
| தேற்றரவு | தேறு + அரவு | அரவு |
| வாராமை | வா + ஆமை | ஆமை |
| ஓடாமை | ஓடு + ஆ + மை | மை |
| எடுப்பது | எடு + ப் + ப் + அ + து | து |
| தழால் | தழு + ஆல் | ஆல் |
| இறக்குமதி | இறக்கு + மதி | மதி |

மேலே காட்டப் பெற்ற விகுதிகளுள் ஒன்று தொழிற் பெயரில் விகுதியாக இருக்கும்.

**குறிப்பு :** தொழிற் பெயருக்குக் கால இடைநிலை கிடையாது.

## 7. பண்புப் பெயர் விகுதிகள்

*பசுமை, அன்பு, மாட்சி.*

இவை பண்பை (குணத்தை) உணர்த்துகின்றன. ஆதலின், பண்புப் பெயர்களாகும். பசு + மை = பசுமை. அன் + பு = அன்பு. மாண் + சி = மாட்சி. இப் பண்புப் பெயர்கள் மூன்றிற்கும் முறையே 'மை', பு, சி' விகுதிகளாகும். ஆதலின், இவை பண்புப் பெயர் விகுதிகளாகும்.

| பண்புப் பெயர் | விகுதி |
|---|---|
| செம்மை | மை |
| தொல்லை | ஐ |
| மாட்சி | சி |
| மாண்பு | பு |
| மழவு | உ |
| நன்கு | கு |
| நன்றி | றி |
| நன்று | று |
| நலம் | அம் |
| ஒட்பம் | பம் |
| நன்னர் | நர் |
| தீது | து |

மேலே காட்டப்பெற்ற விகுதிகளுள் ஒன்று பண்புப் பெயரில் விகுதியாக வரும்.

## 8. முதல்நிலைத் தொழிற் பெயர்

*மின்னுமல் இடி இடித்தது.*

*சோறு கொதி வந்தது.*

இத் தொடர்களில் 'இடி, கொதி' என்பன பெயர்ச் சொற்கள். 'இடி' என்பது இடித்தல் என்றும், 'கொதி' என்பது கொதித்தல் என்றும் தொழில்களைக் குறித்

தலின் தொழிற் பெயர்களாகும். இவை 'தல்' என்ற விகுதி பெறுமல் 'இடி, கொதி' என்னும் முதனிலைகள் (பகுதிகள்) மட்டுமே தொழிற் பெயர்களாக வந்தன. ஆதலின், இவை முதல்நிலைத் தொழிற் பெயர்களாகும்.

நினைவிற் கொள்க

தொழிற் பெயர் விகுதி பெறுமல் பகுதி (முதனிலை) மட்டும் நின்று தொழிற் பெயராய் வருவது முதனிலைத் தொழிற் பெயர் ஆகும்.

## 9. முதல்நிலை திரிந்த தொழிற் பெயர்

காந்தி அடிகள் சூடு பட்டு இறந்தார்.
சாதுவன் பொருள் கேடு அடைந்தது.

இத் தொடர்களில் 'சூடு', கேடு' என்பன பெயர்ச் சொற்களாகும். 'சூடு' என்பது சுடுதல் என்றும், 'கேடு' என்பது கெடுதல் என்றும் தொழில்களைக் குறித்தலின் தொழிற் பெயர்களாகும். சுடுதல், கெடுதல் என்ற விகுதி பெற்ற தொழிற் பெயர்களின் பகுதிகள் 'சுடு, கெடு' என்பனவாகும். அப்பகுதிகள் சூடு, கேடு எனத் திரிந்து தொழிற் பெயர்களாக வந்தன. ஆதலின், இவை முதனிலை திரிந்த தொழிற் பெயர்களாகும்.

நினைவிற் கொள்க

தொழிற் பெயர் விகுதி பெறுத பகுதி (முதனிலை) திரிந்து தொழிற் பெயராய் வருவது முதனிலை திரிந்த தொழிற் பெயராகும்.

## 10. வினையாலணையும் பெயர்

பாணன் நன்றாகப் பாடினான்.

பாடினவன் வீடு சென்றான்.

பாடினவனுக்குப் பரிசு கிடைத்தது.

முதல் தொடரில் 'பாடினான்' என்பது பாணனது தொழில் முடிந்ததைக் காட்டுகின்றது. ஆதலின், வினை முற்றாகும்.

இரண்டாந் தொடரில் 'பாடினவன்' என்ற வினை முற்று பாணனது தொழிலை உணர்த்தாமல், தொழில் செய்த பாணனை உணர்த்துகின்றது. பாணன் பெயர்ச் சொல்லாகும். இவ் வினைமுற்று பெயர்ப் பொருளைத் தந்தமையால் வினையாலணையும் பெயர்.

மூன்றாந் தொடரில் 'பாடினவன்' என்ற வினை முற்றோடு 'கு' என்ற நான்காம் வேற்றுமை உருபு சேர்ந்து வந்தது. இதுவும் பாடின பாணனுக்கு என்று பொருள் தந்தமையால் வினையாலணையும் பெயர்.

நினைவிற் கொள்க

வினைமுற்று வினையை உணர்த்தாமல் பெயர்த்தன்மை அடைந்து வருதலும், வினைமுற்று பெயர்த்தன்மை அடைந்து வேற்றுமை உருபை ஏற்று வருதலும் வினையாலணையும் பெயர் ஆகும்.

### தன்மை வினையாலணையும் பெயர்

படித்தேனைக் கண்டாயா?

இதில் 'படித்தேன்' என்ற தன்மை ஒருமை வினை முற்று பெயர்த்தன்மை அடைந்து இரண்டாம் வேற்றுமை உருபேற்று வந்தது.

சென்றேமைப் பார்த்தாய்.

இதில் 'சென்றேம்' என்ற தன்மைப் பன்மை வினை முற்று பெயர்த் தன்மை அடைந்து இரண்டாம் வேற்றுமை உருபேற்று வந்தது.

## முன்னிலை வினையாலணையும் பெயர்

சென்றயைக் கண்டாய்.

இதில் 'சென்றய்' என்ற முன்னிலை ஒருமை வினை முற்று பெயர்த் தன்மை அடைந்து இரண்டாம் வேற்றுமை உருபேற்று வந்தது.

சென்றீரைக் கண்டோம்.

இதில் 'சென்றீர்' என்ற முன்னிலைப் பன்மை வினை முற்று பெயர்த் தன்மை அடைந்து இரண்டாம் வேற்றுமை உருபேற்று வந்தது.

## படர்க்கை வினையாலணையும் பெயர்

வந்தவனுக்குப் பரிசு கிடைத்தது.

வந்தவளுக்குப் பரிசு கிடைத்தது.

வந்தவர்க்குப் பரிசு கிடைத்தது.

இத் தொடர்களில் 'வந்தவன்' என்ற படர்க்கை ஆண்பால் வினைமுற்றும், 'வந்தவள்' என்ற படர்க்கைப் பெண்பால் வினைமுற்றும், 'வந்தவர்' என்ற படர்க்கைப் பலர் பால் வினைமுற்றும் பெயர்த்தன்மை அடைந்து நான்காம் வேற்றுமை உருபேற்று வந்தன.

ஓடியதைக் கண்டேன்.

ஓடினவற்றைக் கண்டேன்.

இத் தொடர்களில் 'ஓடியது' என்ற படர்க்கை ஒன்றன் பால் வினைமுற்றும், 'ஓடின' என்ற படர்க்கைப் பலவின் பால் வினைமுற்றும் பெயர்த்தன்மை அடைந்து இரண்டாம் வேற்றுமை உருபேற்று வந்தன.

# 11. தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடுகள்

| தொழிற் பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| (1) தொழிலைக் குறிக்கும். | (1) தொழிலைச் செய்யும் பொருளைக் குறிக்கும். |
| (2) படர்க்கை இடத்திற் குரியது. | (2) மூவிடங்களுக்கும் உரியது. |
| (3) காலம் காட்டாது. | (3) காலம் காட்டும். |

## பயிற்சி

(அ) தொழிற்பெயர் விகுதிகளுள் ஐந்தினை எடுத்தெழுதி அவற்றிற்கு எடுத்துக்காட்டுகளும் தருக.

(ஆ) பண்புப் பெயர் விகுதிகள் யாவை? நான்கு எடுத்துக் காட்டுகள் தருக.

(இ) முதல்நிலைத் தொழிற்பெயர் என்பது யாது?

(ஈ) முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்பது யாது? எடுத்துக்காட்டுகள் இரண்டு தருக.

(உ) வினையாலணையும் பெயரின் இலக்கணத்தை எழுதுக.

(ஊ) தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கு முள்ள வேறுபாடுகள் யாவை ?

# 12. வேற்றுமை

**வேலன் வென்றான்.**

**வேலனை வென்றான்.**

முதல் தொடரில் 'வேலன்' என்பது ஒருவன் பெயரைக் குறிக்கிறது. ஆதலின் பெயர்ச்சொல். இத்தொடர் வெல்லுதல் தொழிலைச் செய்தவன் வேலன் என்பதை உணர்த்துகிறது.

இரண்டாந் தொடரில் 'வேலன்' என்ற பெயர்ச்சொல்லோடு 'ஐ' என்பது சேர்ந்து வந்துள்ளது. இத்தொடர் வெல்லப்பட்டவன் வேலன் என்றும், வென்றவன் வேறு ஒருவன் என்றும் உணர்த்துகிறது. முதல் தொடரில் வென்றவனாக இருந்த வேலன் இரண்டாந் தொடரில் 'ஐ' சேர்ந்தமையால் வெல்லப்பட்டவனாக (தோற்றவனாக) மாறிவிட்டான்.

**ஆதிரை கொடுத்தாள்.**

**ஆதிரைக்குக் கொடுத்தாள்.**

முதல் தொடரில் ஆதிரை என்பாள் கொடுப்பவளாக உள்ளாள். இரண்டாந் தொடரில் ஆதிரை என்ற பெயர்ச் சொல்லோடு 'கு' என்பது சேர்ந்தமையால் கொடுக்கப்பட்டவளாக (வாங்கியவளாக) மாறிவிட்டாள்.

'வேலன், ஆதிரை' என்ற பெயர்ச்சொற்களோடு 'ஐ, கு' என்பவை சேர்ந்தமையால் பெயர்ச் சொல்லின் பொருள் வேறுபட்டுவிட்டது.

### நினைவிற் கொள்க

**பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுப்பது வேற்றுமை யாகும். அவ்வாறு வேறுபடுக்க பெயர்ச் சொற்களின் ஈற்றிலே சேர்ந்து வரும் இடைச்சொல் வேற்றுமை உருபு என்று கூறப்படும். வேற்றுமை முதல் வேற்றுமை, இரண்டாம்**

வேற்றுமை, மூன்றும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப்படும்.

## (1) முதல் வேற்றுமை

*மாதவி பாடினுள்.*

*மாதவி அவள்.*

*மாதவி யார் ?*

இவ்வெடுத்துக் காட்டுகளில் உள்ள 'மாதவி' என்ற சொல் யாதொரு வேறுபாடும் அடையாத பெயர்ச் சொல்லாக உள்ளது. அது எழுவாயாக வந்துள்ளது. முதல் தொடரில் 'மாதவி' என்ற பெயர்ச் சொல் 'பாடினுள்' என்ற வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளது. இரண்டாந் தொடரில் 'மாதவி' என்ற பெயர்ச் சொல் 'அவள்' என்ற பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்துள்ளது. மூன்றுந் தொடரில் 'மாதவி' என்ற பெயர்ச் சொல் 'யார்' என்ற வினுச் சொல்லைக் கொண்டு முடிந்துள்ளது.

### நினைவிற் கொள்க

யாதொரு மாறுபாடும் அடையாத பெயர்ச் சொல் முதல் வேற்றுமையாகும். அது கருத்தாப் பொருளை உணர்த்தி வினைச் சொல், பெயர்ச்சொல், வினுச் சொல் இவற்றுள் ஒன்றைப் பயனிலையாகக் கொண்டு முடியும். இ∴து எழுவாய் வேற்றுமை என்றும் கூறப்படும். முதல் வேற்றுமைக்கு உருபு கிடையாது.

*மாதவி ஆனவள் பாடினுள்.*

*மாதவி ஆகின்றவள் அவள்.*

*மாதவி என்பவள் யாவள் ?*

இத் தொடர்களில் 'மாதவி' என்பது முதல் வேற்றுமை என அறிவீர்கள். இம் முதல் வேற்றுமையோடு 'ஆனவள், ஆகின்றவள், என்பவள்' இச் சொற்கள் சேர்ந்து வந்தும் முதல் வேற்றுமையின்

பொருள் வேறுபடவில்லை. இவை சொல்லும்போது உருபுகளாக வந்தன. ஆதலின், இவை சொல்லுருபுகளாகும்.

முதல் வேற்றுமைக்கு ஆனவன், ஆனவள், ஆனவர், ஆனது, ஆனவை, ஆகின்றவன், ஆகின்றவள், ஆகின்றவர், ஆகின்றது, ஆகின்றவை, என்பவன், என்பவள், என்பவர், என்பது, என்பவை சொல்லுருபுகளாகும்.

ந. சூ : எழுவாய் உருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினக்கொளல் அதன்பய னிலையே.

## (2) இரண்டாம் வேற்றுமை

குலோத்துங்கன் கலிங்கரை வென்றான்.

இத் தொடரில் 'கலிங்கர்' என்ற முதல் வேற்றுமையோடு 'ஐ' என்ற இடைச்சொல் சேர்ந்து வந்து பெயர்ப்பொருளைச் செயப்படு பொருளாக மாற்றியது.

கருத்தா (எழுவாய்) செய்த தொழிலின் பயனை அடைந்திருப்பது செயப்படு பொருள். அஃது ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை முதலிய பொருள்களில் வரும்.

இளங்கோ சிலப்பதிகாரத்தைப் பாடினார். (ஆக்கல்)
கிள்ளிகளிறு கோட்டையை இடித்தது. (அழித்தல்)
கோவலன் மதுரையை அடைந்தான். (அடைதல்)
துறவி பற்றுக்களைத் துறந்தார். (நீத்தல்)
ஆதிரை திருமகளைப் போல் விளங்கினாள். (ஒத்தல்)
ஔவையார் அறிவை உடையவர். (உடைமை)

நினைவிற் கொள்க

இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' ஆகும். அதன் பொருள் செயப்படு பொருளாம். அச் செயப்படு பொருள் 'ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை' முதலியனவாகப் பலவகைப்படும்.

ந. சூ : இரண்டா வதனுரு பையே அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி யாகும்.

## (3) மூன்றும் வேற்றுமை

வழுதி தன் படையால் பகைவரை வென்றான்.

செங்குட்டுவனுன் கோயில் கட்டப்பட்டது.

பாணன் விறலியொடு சென்றான்.

இலக்குவன் இராமனேடு சென்றான்.

இவ்வெடுத்துக் காட்டுகளில் உள்ள 'படை, செங்குட்டுவன், விறலி, இராமன்' என்ற பெயர்ச் சொற்களோடு 'ஆல், ஆன், ஒடு, ஓடு' என்ற இடைச் சொற்கள் சேர்ந்து வந்துள்ளன. 'ஆல்' என்பது 'படை' என்ற கருவியோடும், 'ஆன்' என்பது 'செங்குட்டுவன்' என்ற கருத்தாவோடும் சேர்ந்து வந்தன. 'ஒடு' என்பது 'பாணனும் விறலியும்' சென்ற நிகழ்ச்சி உடனிகழ்ந்ததையும், 'ஓடு' என்பது 'இலக்குவனும் இராமனும்' சென்ற நிகழ்ச்சி உடனிகழ்ந்ததையும் உணர்த்தின. (உடனிகழ்தல்—ஒரே காலத்தில் நிகழ்தல்.)

குறிப்பு: 'ஆல், ஆன்' இரண்டும் கருவிப் பொருளிலும் கருத்தாப் பொருளிலும் வரும். 'ஒடு, ஓடு' இரண்டும் உடனிகழ்ச்சிப் பொருளிலும் வரும்.

### நினைவிற் கொள்க

மூன்றும் வேற்றுமை உருபுகள் 'ஆல், ஆன், ஒடு, ஓடு' என்பனவாம். கருவிப் பொருள், கருத்தாப் பொருள், உடனிகழ்ச்சிப் பொருள் என்பன அதன் பொருள்களாம். (உடனிகழ்ச்சி - செயல் ஒன்றாக நிகழ்தல்)

கோலிகனல் ஆடை நெய்யப்பட்டது.

அரசனல் கோயில் கட்டப்பட்டது.

ஆடை நெய்யும் தொழிலைக் கோலிகனே செய்தான். ஆதலின், கோலிகன் இயற்றுதற் கருத்தா.

கோயில் கட்டுதல் தொழிலை அரசன் தானே செய்ய வில்லை. அரசன் பிறரை ஏவிக் கோயிலைக் கட்டுமாறு செய்தான். ஆதலின், அரசன் ஏவுதல் கருத்தா. (கருத்தா — செயல் செய்பவன். இயற்றுதல் — செய்தல்.)

**நினைவிற் கொள்க**

**செயல் செய்பவன் கருத்தா எனப்படுவான். கருத்தா இயற்றுதற் கருத்தா ஏவுதற் கருத்தா என இருவகைப்படும்.**

பொன்னால் குழை செய்தான்.

உளியால் பெட்டி செய்தான்.

பொன், குழை செய்வதற்குக் கருவியாக இருந்தது. பொன்னே குழை உருவமாக மாறி அமைந்தது. ஆதலின், பொன் முதற்கருவி. உளி பெட்டி செய்தற் குக் கருவியாக இருந்தது. உளி, மரம் பெட்டியாக அமையும்வரை துணையாக இருந்து அப்பெட்டியின் தொடர்பின்றி நீங்கிவிட்டது. ஆதலின், உளி துணைக் கருவி.

**நினைவிற் கொள்க**

**கருத்தாவின் செயலுக்குச் சாதனமாக இருப்பது கருவி எனப்படும். கருவி முதற் கருவி, துணைக்கருவி என இருவகைப் படும்.**

தச்சன் நாற்காலியைச் செய்தான்.

தச்சனால் நாற்காலி செய்யப்பட்டது.

முதல் தொடரில் தச்சன் முதல் வேற்றுமைக் கருத்தாவாகும். 'செய்தான்' என்ற பயனிலை செய் வினையில் உள்ளது. இரண்டாந் தொடரில் தச்சன் மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவாகும். 'செய்யப் பட்டது' என்ற பயனிலை செயப்பாட்டு வினையில் உள்ளது.

**நினைவிற் கொள்க**

**கருத்தா முதல் வேற்றுமையில் இருந்தால் பயனிலை செய் வினையில் இருக்கும்; செயப்படு பொருள் இரண்டாம்**

வேற்றுமையில் இருக்கும். கருத்தா மூன்றும் வேற்றுமையில் இருந்தால் பயனிலை செயப்பாட்டு வினையில் இருக்கும்; செயப்படு பொருள் முதல் வேற்றுமையாக இருக்கும்.

*செழியன் படை கொண்டு வென்றான்.*
*சேரனுடன் சோழன் சென்றான்.*

இவ் வெடுத்துக் காட்டுகளுள் 'கொண்டு' என்பது 'படை' என்ற கருவியோடு சேர்ந்து மூன்றும் வேற்றுமைப் பொருளில் வந்தது. 'உடன்' என்பது 'சேரன்' என்ற கருத்தாவோடு சேர்ந்து மூன்றும் வேற்றுமைப் பொருளில் வந்தது. இவை சொல்லும்போது மூன்றும் வேற்றுமைக்கு உருபுகளாக வந்தன.

**நினைவிற் கொள்க**

**கொண்டு, உடன் ஆகிய இரண்டும் மூன்றும் வேற்றுமையின் சொல்லுருபுகளாம். 'கொண்டு' கருவி, கருத்தாப் பொருள்களிலும் 'உடன்' உடனிகழ்ச்சிப் பொருளிலும் சொல்லுருபாக வரும்.**

ந. சூ.: *மூன்றா வதன்உரு பால்ஆன் ஒடொடு*
*கருவி கருத்தா உடனிகழ் வதன் பொருள்.*

## (4) நான்காம் வேற்றுமை

*அதியமான் ஔவையார்க்கு நெல்லிக்கனி ஈந்தான்.*

இவ்வெடுத்துக் காட்டில் 'ஔவையார்' என்ற பெயர்ச் சொல்லோடு 'கு' என்ற இடைச் சொல் சேர்ந்து வந்துள்ளது. ஔவையார் என்ற பெயர்ச் சொல் 'கு' சேர்ந்தமையால் ஔவையார் நெல்லிக் கனியை ஏற்றுக் கொள்ளும் பொருளாக வேறு படுத்தப்பட்டது என்பதை உணர்கிறோம்.

ஏற்றுக் கொள்ளுதல் பொருள் 'கொடை, பகை, நேர்ச்சி (நட்பு), தகவு (தகுதி), அதுவாதல், பொருட்டு, முறை' முதலிய பொருள்களில் வரும்.

| | |
|---|---|
| பாரி முல்லைக்குத் தேர் கொடுத்தான். | (கொடை) |
| பாம்புக்குப் பகை கீரி. | (பகை) |
| கோப்பெருஞ் சோழனுக்கு நண்பர் பிசிராந்தையார். | (நட்பு) |
| அரசர்க்கு முடி உரியது. | (தகுதி) |
| சோற்றுக்கு அரிசி வாங்கினான். | (அதுவாதல்) |
| வேலைக்கு விண்ணப்பம் போட்டான். | (பொருட்டு) |
| இராமனுக்குத் தாய் கோசலை. | (முறை) |

## நினைவிற் கொள்க

நான்காம் வேற்றுமை உருபு 'கு' ஆகும். அதன் பொருள் ஏற்றுக்கொள்ளல் பொருளாகும். அது 'கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை' முதலியனவாம். (அது ஆதல்-ஒன்று மற்றொன்றாதல்.)

நளன் தேவர்க்காகத் தூது சென்றான்.

அன்னம் நளன் பொருட்டுத் தூது சென்றது.

அதியமான் நிமித்தம் ஔவையார் தூது சென்றார்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'தேவர்' என்பது நான்காம் வேற்றுமை உருபு 'கு' ஏற்றதோடு 'ஆக' என்பதனையும் பெற்று நான்காம் வேற்றுமைப் பொருளில் சொல்லும்போது உருபாக வந்தது. 'பொருட்டு' என்பது 'நளன்' என்ற பெயர்ச் சொல்லோடும், 'நிமித்தம்,' 'அதியமான்' என்ற பெயர்ச் சொல்லோடும் சேர்ந்து நான்காம் வேற்றுமைப் பொருளில் சொல்லும் போது உருபுகளாக வந்தன.

## நினைவிற் கொள்க

ஆக, பொருட்டு, நிமித்தம் ஆகிய மூன்றும் நான்காம் வேற்றுமையின் சொல்லுருபுகளாம்.

ந. சூ.: நான்கா வதற்குரு பாகும் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியின் இதற்கி
தெனல் பொருளே.

## (5) ஐந்தாம் வேற்றுமை

பாகன் யானையின் இறங்கினான்.

கல்வியில் பெரியவர் கம்பர்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'யானை, கல்வி' என்ற பெயர்ச் சொற்களோடு 'இன், இல்' என்ற இடைச் சொற்கள் சேர்ந்து வந்தன. 'இன்' உருபு, பாகன் எதனின்றும் இறங்கினான் (நீங்கினான்) என்பதையும், 'இல்' உருபு, கம்பர் எது காரணமாகப் பெரியவர் என்பதையும் உணர்த்த முறையே 'யானை, கல்வி' இவற்றோடு சேர்ந்து வந்தன.

### நினைவிற் கொள்க

**ஐந்தாம் வேற்றுமை உருபுகள் இன், இல் என்பனவாம். நீங்கல் பொருள், ஒப்புப் பொருள், எல்லைப் பொருள், ஏதுப் பொருள் என்பன அதன் பொருள்களாம்.**

மலையின் வீழ் அருவி. (நீங்கல்)

பாலின் வெளிது ஆடை (ஒப்பு.)

கோயம்புத்தூரின் தெற்கு திருநெல்வேலி. (எல்லை)

வீரத்தில் சிறந்தவன் கரிகாலன். (ஏது)

நின்று, இருந்து என்பன ஐந்தாம் வேற்றுமையின் சொல்லுருபுகளாக வரும்.

ந. சூ.: ஐந்தா வதனுரு பின்னும் இல்லும்
நீங்கலொப் பெல்லை ஏதுப் பொருளே.

## (6) ஆரும் வேற்றுமை

முருகனது கை.

எனது கை.

என கால்கள்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் முருகன், என் என்ற சொற்களோடு 'அது, ஆது, அ' என்ற இடைச் சொற்கள் சேர்ந்து வந்துள்ளன. இவைகள் முருகனுக்கும் கைக்கும் உள்ள உரிமையையும், 'என்' என்பதற்கும், கை, கால்கள் என்பனவற்றிற்கும் உள்ள உரிமையையும் உணர்த்த வந்தன.

**நினைவிற் கொள்க**

**ஆரும் வேற்றுமை ஒருமை உருபுகள் அது, ஆது. பன்மை உருபு அ. பொருள் கிழமைப் பொருளாம். (கிழமை—உரிமை, சம்பந்தம்.)**

குறிப்பு: வருமொழி ஒருமையாயின் 'அது, ஆது' உருபுகளாக வரும்; பன்மையாயின் 'அ' உருபாக வரும். 'அ' என்னும் உருபு சிறுபான்மை செய்யுளிலே வரும்.

உதயகுமரனது வாய்.

உதயகுமரனது தேர்.

முதல் தொடரில் இருக்கும் உதய குமரனுக்கும், வாய்க்கும் உள்ள உரிமை பிரிக்க முடியாததாகும். இரண்டாந் தொடரில் இருக்கும் உதய குமரனுக்கும் தேர்க்கும் உள்ள உரிமை பிரிக்கக் கூடியதாகும்.

இராமனது கருமை—பண்பு<br>
வீரனது நடை—தொழில் } பண்புத் தற்கிழமை

தமயந்தியது முகம்—உறுப்புத் தற்கிழமை

ஆடுகளது கூட்டம்—ஒன்றன் கூட்டத் தற்கிழமை.

படைகளது ஈட்டம்—பலவின் ஈட்டத் தற்கிழமை.

மிளகாயது பொடி — திரிபின் ஆக்கத் தற்கிழமை.

குறிப்பு : ஒன்றன் கூட்டம்—ஒருவகைப் பொருளின் கூட்டம். பலவின் ஈட்டம்—பலவகைப் பொருளின் கூட்டம். திரிபின் ஆக்கம்—ஒரு பொருளே திரிந்து மற்றொரு பொருளாக மாறுதல்.]

கன்னனது அம்பு—பொருள் பிறிதின் கிழமை.

அரசனது அரண்மனை—இடப்பிறிதின் கிழமை.

கந்தனது கார்த்திகை—காலப்பிறிதின் கிழமை.

### நினைவிற் கொள்க

கிழமைப் பொருள் தற்கிழமை, பிறிதின் கிழமை என இரண்டு வகைப்படும். தன்னின் வேறுகப் பிரிக்க முடியாத பொருளின் உரிமை தற்கிழமையாகும். தன்னின் வேறுகப் பிரிக்க முடியும் பொருளின் உரிமை பிறிதின் கிழமையாகும். தற்கிழமை பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம் என ஐந்து வகைப்படும். பிறிதின் கிழமை, பொருள் பிறிதின் கிழமை, இடப் பிறிதின் கிழமை, காலப் பிறிதின் கிழமை என மூன்று வகைப்படும்.

நளனுடைய தேர்.

இவ்வெடுத்துக் காட்டில் 'நளன்' என்ற பெயர்ச் சொல்லோடு 'உடைய' என்ற சொல் சேர்ந்து ஆறும் வேற்றுமைக் கிழமைப் பொருளில் சொல்லும் போது உருபாக வந்தது.

### நினைவிற் கொள்க

உடைய ஆறும் வேற்றுமையின் சொல்லுருபாகும்.

ந. சூ.: ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம் பண்புறுப்பு
ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபின் ஆக்க மாம்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

### (7) ஏழாம் வேற்றுமை

சுதமதி புகாரில் வாழ்ந்தாள்.

வேலன் கந்தனிடம் சென்றான்.

பழம் கிளைக்கண் உள்ளது.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'புகார்' என்ற பெயர்ச் சொல்லோடு 'இல்' என்ற இடைச் சொல் சேர்ந்து சுதமதி எவ்விடத்தில் வாழ்ந்தாள் என்பதை உணர்த்தியது. 'கந்தன்' என்ற பெயர்ச் சொல்லோடு 'இடம்' என்ற இடைச் சொல் சேர்ந்து வேலன் யாரிடம் சென்றான் என்பதை உணர்த்தியது. 'கிளை' என்ற பெயர்ச் சொல்லோடு 'கண்' என்ற இடைச் சொல் சேர்ந்து பழம் எவ்விடம் உள்ளது என்பதை உணர்த்தியது.

#### நினைவிற் கொள்க

ஏழாம் வேற்றுமை உருபுகள் இல், இடம், கண் முதலியன வாகும். பொருள் இடப்பொருள். இவ்வேற்றுமை உருபுகள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறு வகைப் பெயர்களையும் தற்கிழமை இடமாகவும், பிறிதின்கிழமை இடமாகவும் வேறுபடுத்தும்.

| | |
|---|---|
| சூரியன்கண் ஒளி உள்ளது.<br>— தற்கிழமை<br>மரத்தின்கண் குயில் உள்ளது.<br>— பிறிதின்கிழமை | பொருள் இடமாயிற்று. |
| ஊரில் வீடு உள்ளது.<br>— தற்கிழமை<br>அரண்மனையில் அரசி உள்ளாள்.<br>— பிறிதின்கிழமை | இடம் இடமாயிற்று. |
| நாளில் நாழிகை உள்ளது.<br>— தற்கிழமை<br>கார் காலத்தில் பயிர் செழிக்கும்.<br>— பிறிதின்கிழமை. | காலம் இடமாயிற்று. |

| | | |
|---|---|---|
| கையில் விரல் உளது.<br>—தற்கிழமை<br>விரலில் மோதிரம் உளது.<br>—பிறிதின்கிழமை | } | சினை<br>இடமாயிற்று. |
| கருமையில் அழகு உளது.<br>—தற்கிழமை<br>முதுமையில் வறுமை வந்தது.<br>—பிறிதின் கிழமை | } | பண்பு<br>இடமாயிற்று. |
| ஆட்டத்தில் அவிநயம் உளது.<br>—தற்கிழமை<br>ஆட்டத்தில் பாட்டு உண்டு.<br>—பிறிதின்கிழமை | } | தொழில்<br>இடமாயிற்று. |

ந. சூ.:

(1) ஏழன் உருபு கண் ஆதி யாகும்
பொருள்முதல் ஆறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன் பொருள் என்ப.

(2) கண்கால் கடை இடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலம் இடம் மேல் கீழ் புடை முதல்
பின்பாடு அளைதேம் உழைவழி உழி உளி
உள் அகம் புறம்இல் இடப்பொருள் உருபே.

## (8) எட்டாம் வேற்றுமை

நண்ப! வருக.

மகளே! கேள்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'நண்ப, மகளே' என்பன படர்க்கையில் உள்ளோரை முன்னிலைப் படுத்தி விளித்தற்கு (கூப்பிடுதற்கு)ப் பயன்பட்ட பெயர்ச் சொற்களாகும். 'நண்பன்' என்ற முதல் வேற்றுமையின் ஈற்றெழுத்து (ன்) கெட்டு விளித்தல் பொருளில் வந்தது. 'மகள்' என்ற முதல் வேற்றுமையின் ஈற்றில் 'ஏ' என்ற எழுத்து மிகுதியாகச் சேர்ந்து விளித்தல் பொருளில் வந்தது.

நினைவிற் கொள்க

எட்டாம் வேற்றுமைக்கு உருபு, பெயர்ச்சொல் விளி ஏற்கும் போது ஈறு திரிதல், ஈறு குன்றல், ஈறு மிகுதல், இயல்பு, ஈற்றயல் திரிதல் ஆகிய விகாரங்களை ஏற்று வருதலாம். படர்க்கை இடத்தில்உள்ளோரைத் தனக்கு எதிர்முகமாக விளித்தல்இதன் பொருளாம். இது விளி வேற்றுமை என்றும் கூறப்பெறும். விளி அண்மை விளி, சேய்மை விளி என இருவகைப்படும். (அண்மை — பக்கம்; சேய்மை — தூரம்.)

| முதல் வேற்றுமை | 8-ஆம் வேற்றுமை | |
|---|---|---|
| *அன்னை* | அன்னாய் ! | — ஈறுதிரிதல் |
| *தோழன்* | தோழ ! | — ஈறு குன்றல் |
| *நெஞ்சு* | நெஞ்சே ! | — ஈறு மிகுதல் |
| *தம்பி* | தம்பி ! | — இயல்பு |
| *பிள்ளைகள்* | பிள்ளைகாள் ! | — ஈற்றயல் திரிதல் |

**குறிப்பு :** ஈறு குன்றலும், இயல்பும் அண்மை விளியில் வரும். ஏனையவை சேய்மை விளியில் வரும்.

இவ்வேற்றுமை பல உருபுகளை ஒரே சொல்லில் பெற்று வருதலும் உண்டு.

| முதல் வேற்றுமை | 8-ஆம் வேற்றுமை | |
|---|---|---|
| *கந்தன்* | கந்தா — ஈறுகெட்டு அயல்திரிதல். | |
| *அண்ணன்* | அண்ணாவே — | ஈறுகெட்டு அயல் திரிந்து ஈற்றில் முறையே 'ஏ' 'ஓ' மிகுந்தன. |
| *ஐயன்* | ஐயாவோ — | |

ந. சூ: எட்ட னுருபே எய்துபெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்
திரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே.

பயிற்சி

(அ) வேற்றுமை என்பது யாது? அது எத்துணை வகைப்படும்?

(ஆ) இரண்டாம் வேற்றுமை பெயர்ச்சொல்லை எப்பொருளாக வேறுபடுத்தும்?

(இ) மூன்றும் வேற்றுமை உருபுகளையும், பொருள்களையும் எடுத்தெழுதி விளக்குக.

(ஈ) நான்காம் வேற்றுமை உருபு யாது? அதன் பொருள் வகைகளை எடுத்தெழுதுக.

(உ) ஐந்தாம் வேற்றுமை பெயர்ச்சொல்லை எவ்வெப் பொருளாக வேறுபடுத்தும்? வகைக்கோர் எடுத்துக்காட்டு தருக.

(ஊ) தற்கிழமை, பிறிதின்கிழமை—இவற்றை விளக்கி எடுத்துக்காட்டுகளும் தருக.

(எ) ஏழாம் வேற்றுமையுருபுகளில் எட்டினை எழுதுக.

(ஏ) விளிவேற்றுமையில் பெயர்கள் அடையும் மாறுதல்கள் எவை? வகைக்கோர் எடுத்துக்காட்டு தருக.

(ஐ) முதற்கருவி, துணைக்கருவி, இயற்றுதல் கருத்தா, ஏவுதல் கருத்தா—இவைகளை விளக்குக.

(ஒ) முதல் வேற்றுமைக் கருத்தாவுக்கும், மூன்றும் வேற்றுமைக் கருத்தாவுக்கும் உள்ள வேறுபாட்டை எழுதுக.

## 13. வினைச்சொல்

*மாடலன் வந்தான்.*

*சுந்தரி உண்கின்றாள்.*

*மாதவி ஆடுவாள்.*

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'வந்தான்' என்பது மாடலன் செய்த தொழிலையும், 'உண்கின்றாள்' என்பது சுந்தரி செய்கின்ற தொழிலையும், 'ஆடுவாள்' என்பது மாதவி செய்யப் போகும் தொழிலையும் குறிக்கின்றன. வந்தான்: இறந்த காலம். உண்கின்றாள்: நிகழ்காலம்.

ஆடுவாள் : எதிர்காலம். இவை மூன்றும் தொழிலை உணர்த்துவதால் வினைச்சொற்களாகும்.

**நினைவிற் கொள்க**

**ஒன்றன் தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல். இது காலத்தைக் காட்டும்; வேற்றுமை ஏற்காது.**

**முற்று வினை**

காயசண்டிகை கனியைச் சிதைத்தாள்.

புலவர் பாடுகிறார்.

மான் ஓடும்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'சிதைத்தாள், பாடுகிறார், ஓடும்' என்பவை தொழில் முற்றுப் பெற்றதைக் குறிக்கின்றன. இவை முற்றுப்பெற்ற வினையைக் குறிப்பதால் முற்றுவினை.

**நினைவிற் கொள்க**

**தொழில் முடிந்திருத்தலை அறிவிக்கும் சொல் வினை முற்றாகும். (வினை — தொழில், முற்று — முடிந்தது.)**

## 14. தெரிநிலை வினைமுற்று

கண்ணகி மதுரையை எரித்தாள்.

வடிவாம்பிகை பாடம் எழுதுகிறாள்.

பையன்கள் வீட்டிற்குச் செல்வர்.

இவ்வெடுத்துக்காட்டுகளுள் 'எரித்தாள்' என்ற வினைமுற்று எரித்தல் தொழிலையும், இறந்த காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தியது. 'எழுதுகிறாள்' என்ற வினைமுற்று எழுதுதல் தொழிலையும், நிகழ் காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தியது. 'செல்வர்' என்ற வினைமுற்று செல்லுதல் தொழிலையும், எதிர்காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தியது. ஆதலின், இவை மூன்றும் **தெரிநிலை வினைமுற்றாகும்.** (தெரிநிலை — தெரிய நிற்பது.)

### நினைவிற் கொள்க

தொழிலும் காலமும் வெளிப்படையாகத் தெரிய நிற்கும் வினைமுற்று தெரிநிலை வினைமுற்றாகும். இவ்வினைமுற்று செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆறையும் உணர்த்தும்.

சேணியர் ஆடை நெய்தார்.

நெய்தார் என்பது தெரிநிலை வினைமுற்று. இதில்,

| | |
|---|---|
| சேணியர் | —செய்பவன் (கருத்தா) |
| தறி | —கருவி |
| வீடு | —நிலம் |
| நெய்யும் தொழில் | —செயல் |
| முன்பு (இறந்த காலம்) | —காலம் |
| ஆடை | —செய்பொருள் |

குறிப்பு: தெரிநிலை வினைமுற்றின் பகுதியால் செயலும், இடைநிலையால் காலமும், விகுதியால் செய்பவனும் (கருத்தாவும்) வெளிப்படையாகத் தோன்றும். ஏனையவை குறிப்பாகத் தோன்றும்.

மோகன் ஓடுகின்றான்.

ஓடுகின்றான் என்பது தெரிநிலை வினைமுற்று. இதில்,

| | |
|---|---|
| மோகன் | —செய்பவன் |
| கால் | —கருவி. |
| விளையாடுமிடம் | —நிலம். |
| ஓடுதல் | —செயல். |
| இப்போது (நிகழ்காலம்) | —காலம். |

இவ்வினைமுற்றில் செய்பொருள் இல்லை. செய்பபடு பொருள் குன்றிய தெரிநிலை வினைமுற்று செய்பொருள் நீங்கிய ஏனைய ஐந்தினையும் உணர்த்தும்.

ந. சூ.: செய்பவன் கருவி நிலம்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே.

## 15. குறிப்பு வினைமுற்று

வளவன் நேற்று பொன்னன்.

கூத்தரசன் இப்போது இனியன்.

அழகரசன் நாளை வலியன்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'பொன்னன்', இனியன், வலியன்' என்பன வினைமுற்றுக்களாகும். இவற்றுள் 'பொன்' என்பது பொருள் பெயராகும். 'இனிமை, வலிமை' என்பன பண்புப் பெயர்களாகும். இவை முறையே 'பொன்னையுடையவனாக இருந்தான், இனிமை உடையவனாக இருக்கின்றான், வலிமை உடையவனாக இருப்பான்' என்று பொருள் தருகின்றன. 'நடந்தான், எழுதுகின்றான், படிப்பான்' என்ற வினைமுற்றுக்களைப் போல் இவை காலத்தை வெளிப்படையாக உணர்த்தவில்லை. 'அன்' என்ற விகுதியால் ஆண்பால் வினைமுற்று என்பதை மட்டுமே உணர முடிகிறது. 'நேற்று' என்ற சொல்லால் 'பொன்னையுடையவனாக இருந்தான்' என்று இறந்த காலத்திலும், 'இப்போது' என்ற சொல்லால் 'இனிமையுடையவனாக இருக்கின்றான்' என்று நிகழ்காலத்திலும், 'நாளை' என்ற சொல்லால் 'வலிமையுடையவனாக இருப்பான்' என்று எதிர்காலத்திலும் குறிப்பாகப் பொருள் கொள்கிறோம்.

**நினைவிற் கொள்க**

**செய்பவனை மட்டும் வெளிப்படையாகவும், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் இவற்றைக் குறிப்பாகவும் உணர்த்தி வரும் வினைமுற்று குறிப்பு வினைமுற்றாகும். இவ்வினைமுற்று பொருட் பெயர், இடப் பெயர், காலப் பெயர், சினைப் பெயர், பண்புப் பெயர், தொழிற் பெயர் என்னும் அறுவகைப் பெயர்களின் அடியாகத் தோன்றும். இது வினைக்குறிப்பு முற்று என்றும் கூறப்படும்.**

அவன் பொருளன் — பொருளடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

அவன் நாடன் — இடமடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

அவன் உத்திரட்டாதியான்—காலமடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

அவன் மூக்கன்—சினையடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

அவன் சிறியன்—பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

அவன் நடையன்—தொழிலடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

ந. சூ.:

பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.

## பெயரெச்சம்

மகிழ்ந்த பையன்.
மகிழ்கின்ற பையன்.
மகிழும் பையன்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'மகிழ்ந்த, மகிழ்கின்ற, மகிழும்' என்பன பொருள் முற்றுப் பெறாத வினைச் சொற்களாக உள்ளன. இவை 'பையன்' என்ற பெயரைக் கொண்டு முடிந்தன. ஆதலின், 'மகிழ்ந்த' இறந்த காலப் பெயரெச்சமாகும். 'மகிழ்கின்ற' நிகழ் காலப் பெயரெச்சமாகும். 'மகிழும்' எதிர்காலப் பெயரெச்சமாகும்.

நினைவிற் கொள்க

பொருள் முற்றுப் பெறாத வினைச்சொல் பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சமாகும். இது பெயரெச்ச வினை என்றும் கூறப்படும்.

## வினை எச்சம்

ஒடித்து வைத்தாள்.
ஒடிக்க வருகின்றான்.
ஒடிப்பின் வீழ்வார்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'ஒடித்து, ஒடிக்க, ஒடிப்பின்' என்பன பொருள் முற்றுப் பெறாத வினைச் சொற்களாக உள்ளன. இவை முறையே 'வைத்தாள், வருகின்றான், வீழ்வார்' என்ற மற்றொரு வினையைக் கொண்டு முடிந்தன. ஆதலின், 'ஒடித்து' இறந்த கால வினை எச்சமாகும். 'ஒடிக்க' நிகழ்கால வினை எச்சமாகும். 'ஒடிப்பின்' எதிர்கால வினை எச்சமாகும்.

**நினைவிற் கொள்க**

பொருள் முற்றுப் பெறாத வினைச்சொல் மற்றொரு வினையைக் கொண்டு முடிவது வினையெச்சமாகும். இது எச்ச வினை என்றும் கூறப்படும்.

## 16. செய்யும் என்னும் வினைமுற்று

அரசன் செல்லும்.

தாய் மகிழும்.

மரம் வளரும்.

பறவைகள் பறக்கும்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'செல்லும், மகிழும், வளரும், பறக்கும்' என்பன 'உம்' விகுதிபெற்று வந்த வினைமுற்றுக்களாகும். இவை எதிர்காலத்தை உணர்த்தின. 'செல்லும்' என்பது படர்க்கை ஆண்பாலின் வினைமுற்றாக வந்துள்ளது. ஆயினும், ஆண்பால் வினைமுற்று விகுதி இல்லை. 'மகிழும்' என்பது படர்க்கைப் பெண்பாலின் வினைமுற்றாக வந்துள்ளது. ஆயினும், பெண்பால் வினைமுற்று விகுதி இல்லை. 'வளரும்' என்பது படர்க்கை ஒன்றன்பாலின் வினைமுற்றாக வந்துள்ளது. ஆயினும், ஒன்றன்பால் வினைமுற்று விகுதி இல்லை. 'பறக்கும்' என்பது படர்க்கைப் பலவின்பால் வினைமுற்றாக வந்துள்ளது. ஆயினும், பலவின்பால் வினைமுற்று விகுதி இல்லை. இவை 'செய்யும்' என்னும் வாய்பாட்டில் (சொல்முறையில்) அமைந்துள்ளன.

### நினைவிற் கொள்க

'உம்' என்னும் விகுதியை ஈற்றிலே கொண்ட வினைமுற்று செய்யும் என்னும் வினைமுற்று ஆகும். அது படர்க்கை ஆண் பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய நான்கு பால்களிலும் வரும். எதிர்காலம் காட்டும். இது 'செய்யும் என்னும் முற்று' என்றும், 'செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்று' என்றும் கூறப்படும்.

*குறிப்பு: படர்க்கைப் பலர்பாலிலும், தன்மை யிலும், முன்னிலையிலும் வராது.*

ந, சூ : பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில் செல்லா தாகும் செய்யுமென் முற்றே.

### பயிற்சி

(அ) வினைச்சொல் என்பது யாது ?

(ஆ) முற்றுவினை, எச்சவினை—இவற்றை விளக்கி எழுதுக.

(இ) தெரிநிலை வினைமுற்றின் இலக்கணம் யாது ?

(ஈ) குறிப்பு வினைமுற்றின் இலக்கணத்தை எழுதுக.

(உ) 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றை எடுத்துக் காட்டு தந்து விளக்குக.

## 17. இடைச் சொல்

*தந்தையை வணங்கினான்.*

இவ்வெடுத்துக் காட்டில் 'தந்தை' என்பது பெயர்ச் சொல். 'வணங்கினான்' என்பது வினைச் சொல். இடையில் உள்ள 'ஐ' என்பது என்ன சொல்? அது பெயர்ச் சொல்லும் அன்று ; வினைச் சொல்லும் அன்று. 'ஐ' எனத் தனித்துக் கூறின், அஃது எப் பொருளையும் உணர்த்தாது. 'தந்தை' என்ற பெயர்ச் சொல்லினைச் சார்ந்து வந்து பொருளை உணர்த்தியது.

*மகன் வணங்கினானா ?*

இவ்வெடுத்துக் காட்டில் 'வணங்கினான்' என்பது வினைச் சொல். அதன் பின் உள்ள 'ஆ' என்பது

என்ன சொல்? அது பெயர்ச் சொல்லும் அன்று; வினைச் சொல்லும் அன்று. 'ஆ' எனத் தனித்துக் கூறின், அஃது எப் பொருளையும் உணர்த்தாது. 'வணங்கினுன்' என்ற வினைச் சொல்லினைச் சார்ந்து வந்து பொருளை உணர்த்தியது.

இவ்வாறு தனித்து வராமல் பெயர் வினைகளை இடமாகக் கொண்டு வரும் சொல் இடைச் சொல்லாகும்.

**தம்பிக்குக்** கொடுத்தேன்.—கு—உருபு இடைச் சொல். ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலிய வேற்றுமை உருபுகளும் இடைச் சொல்.

**கூறுவாய்.** (கூறு + வ் + ஆய்)—ஆய்-விகுதி இடைச் சொல். அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார், என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இர், ஈர் முதலிய விகுதிகளும் இடைச் சொல்.

**ஓடுகின்ருள்.** (ஓடு + கின்று + ஆள்)—கின்று—இடைநிலை இடைச் சொல். த், ட், ற், இன், கிறு, கின்று, ப், வ் முதலிய இடை நிலைகளும் இடைச் சொல்.

**ஓடுகின்றனன்.** (ஓடு + கின்று + அன் + அன்) — அன்—சாரியை இடைச் சொல். அன், ஆன், அல், அற்று, அத்து, அம், இன், அ, கு, உ முதலிய சாரியைகளும் இடைச் சொல்.

புலி போலப் பாய்ந்தான்.—போல—உவம உருபு இடைச் சொல். போல, புரைய, ஒப்ப, உறழ, அன்ன, நேர, நிகர்ப்ப முதலிய உவம உருபுகளும் இடைச் சொல்.

அப் பெண்.—அ — சுட்டெழுத்து இடைச் சொல். அ, இ, உ ஆகிய சுட்டெழுத்துக்களும் இடைச் சொல்.

**கபிலனே** பாடினுன்? (கபிலன் + ஓ)—ஓ—வினுவெழுத்து இடைச் சொல். எ, யா, ஆ, ஓ, ஏ ஆகிய வினுவெழுத்துக்களும் இடைச் சொல்.

படபட என முறிந்தது. படபட—ஒலிக் குறிப்பு இடைச் சொல்.

திடுக்கென வீழ்ந்தான். திடுக்கென—அச்சக் குறிப்பு இடைச் சொல்.

அம்மா பெரிது! அம்மா—வியப்பிடைச் சொல்.

அந்தோ பாவம்!—அந்தோ—இரக்கக் குறிப்பை உணர்த்தும் இடைச் சொல்.

*சீச்சீ!* இது என்ன வாழ்வு? சீச்சீ—இகழ்ச்சிக் குறிப்பை உணர்த்தும் இடைச் சொல்.

சரேல் எனப் பாய்ந்தான். சரேல்—விரைவு இடைச் சொல்.

ஏ ஏ! இவளொருத்தி பேடி. ஏ ஏ என்பன வேறு பொருளின்றி செய்யுளின் ஓசையை நிறைக்க வந்தமையால் இசை நிறை இடைச சொல்.

இயம்புவன் எழுத்தே: ஏ என்பது ஒரு பொருளும் இன்றி ஈற்றில் அசையாக வந்தமையின் அசைநிலை இடைச்சொல். ஏ, ஓ, ஆம், தாம், தான், போலும் முதலிய அசைநிலைகளும் இடைச்சொல்.

பாண்டவர் ஐவரும் சென்றனர். உம் என்பது முற்றுப் பொருளில் வந்தமையால் உம் இடைச்சொல். ஏ, ஓ, உம், மற்று, கொல் முதலிய தத்தம் பொருள் உணர்த்துவனவும் இடைச் சொற்களாகும்.

**நினைவிற் கொள்க**

**பெயர், வினைகளைப்போல் தனித்துப் பொருள் உணர்த்தும் ஆற்றலின்றிப் பெயர் வினைகளை அடுத்து அவற்றின் இடமாக வரும் சொல் இடைச்சொல் ஆகும்.**

**வேற்றுமை உருபுகள், விகுதிகள், இடைநிலைகள், சாரியைகள், உவமை உருபுகள், சுட்டெழுத்துக்கள், வினாவெழுத்துக்கள், குறிப்பால் பொருள் தருவன, இசைநிறை, அசை நிலை, தத்தம் பொருள் தருவன போன்றவை இடைச்சொல் ஆகும்.**

## 18. (அ) ஏகார இடைச்சொல்

நூல்களுள் திருக்குறளே சிறந்தது என்பதில் 'ஏ' பல நூல்களுள் திருக்குறளைப் பிரித்துக் கூறுதலின் ஏகாரம் பிரிநிலை.

நக்கீரனே அஞ்சினன்?—என்பது 'நக்கீரனோ அஞ்சினன்' என்று வினாப்பொருள் தருதலின் ஏகாரம் வினா.

நிலனே நீரே தீயே வளியே—என்பது, 'நிலனும் நீரும் தீயும் வளியும்' என எண்ணுப் பொருளைத் தருதலின் ஏகாரம் எண்.

ஔவை அதியமான் அவைக்கு வந்தனளே—என்பதில் 'வந்தனள்' என்பதோடு 'ஏ' ஈற்றில் சேர்ந்து வந்து வேறு பொருள் தராமையின் ஏகாரம் ஈற்றசை. (இது செய்யுளின் இறுதியில் மட்டுமே வரும்.)

அன்பே சிறந்தது—என்பதில் 'அன்பு' என்பதோடு 'ஏ' சேர்ந்து அன்பினது உறுதியைத் தெளிவுபடுத்துதலின் ஏகாரம் தேற்றம். (தேற்றம்–தெளிவு)

ஏஏ இவளொருத்தி பேடி—என்பதில் 'ஏ, ஏ' என்பன ஒரு பொருளையும் தராது இசை நிறைக்க வந்தமையின் ஏகாரம் இசைநிறை.

### நினைவிற் கொள்க

ஏ என்னும் இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை என்னும் ஆறு பொருள்களை உணர்த்தி வரும்.

குறிப்பு : நானே செய்தேன்—என்பது 'நான் செய்யவில்லை' எனப் பொருள் தரின் ஏகாரம் எதிர்மறை. இவ்வாறு வருதலும் உண்டு.

ந. சூ.: பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை என ஆறு ஏகா ரம்மே.

## (ஆ) ஓகார இடைச்சொல்

படிக்கவோ வந்தான்—என்பது 'படித்தற்கு வரவில்லை; விளையாட வந்தான்' என்னும் ஒழிந்த பொருளைத் தருதலின் ஓகாரம் **ஒழியிசை.**

வடிவாம்பிகையோ பாடினாள்?—என்பது, 'வடிவாம்பிகையா பாடினாள்' என வினாப் பொருளைத் தருதலின் **ஓகாரம் வினா.**

ஓஒ புத்தர் பெரியவர்—என்பது 'புத்தர் மிகப் பெரியவர்' என்று பொருள் தருகிறது. 'ஓஒ' என்பவை புத்தரின் பெருமையைக் குறித்தலின் **ஓகாரம் உயர்வு சிறப்பு.**

ஓஒ திருடன் கொடியன்—என்பது 'திருடன் மிகக் கொடியவன்' என்று பொருள் தருகிறது. 'ஓஒ' என்பவை திருடனின் கொடுமையைக் குறித்தலின் **ஓகாரம் இழிவு சிறப்பு.**

சிறப்பு உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு என இருவகைப்படும்.

இராமனோ தசரதன் சொல் மறுப்பான்—என்பது 'இராமன் தசரதன் சொல்லை மறுக்க மாட்டான்' என்று பொருள் தருகிறது. 'ஓ' மறுக்க மாட்டான் என்று எதிர்மறைப் பொருளைத் தருதலின் **ஓகாரம் எதிர்மறை.**

அழகரசன் **பணக்காரனோ** அல்லன்; ஏழையோ அல்லன்—என்பதில் 'ஓ' அழகரசன் பணக்காரனும் ஏழையும் அல்லாத நடுத்தரமான நிலையை உடையன் என்று தெரிவித்தலின் **ஓகாரம் தெரிநிலை.**

ஏனோ இங்கு வந்தேன்!—என்பது 'இங்கு வந்தது வீண்' என்று பொருள் தருகிறது. இதில் 'ஓ' கழிந்த செயலுக்கு (கடந்த செயலுக்கு) இரங்குவதைத் தெரிவித்தலின் **ஓகாரம் கழிவு.**

காணிய **வம்மினோ**—என்பது 'காண வாருங்கள்' என்று பொருள் தருகிறது. இதில், 'ஓ' யாதொரு

பொருளும் தருதலின்றி அசையாக வந்தமையின் ஓகாரம் அசைநிலை.

ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரமோ சிறப்புடையது—என்பதில் 'ஓ' சிலப்பதிகாரத்தை ஏனைய நான்கு நூல்களினும் பிரித்துக் கூறுதலின் ஓகாரம் பிரிநிலை.

நினைவிற் கொள்க

ஓ என்னும் இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிநிலை என்னும் எட்டுப் பொருள்களை உணர்த்தி வரும்.

குறிப்பு: ஒன்றோ இரண்டோ வாங்கினான் என ஓகாரம் ஐயப் பொருளிலும் வருதல் உண்டு.

ந. சூ.: ஒழியிசை வினாச்சிறப்பு எதிர்மறை தெரிநிலை
கழிவு அசை நிலைபிரிப்பு எனஎட்டு ஓவே.

## (இ) உம்மை இடைச்சொல்

மரகதாம்பிகை வருதற்கும் உரியள்—என்பது 'மரகதாம்பிகை வாராமல் இருப்பதற்கும் உரியள்' என்று பொருள் தருகிறது. இதில் 'ஓ' எதிர்மறைப் பொருள் தருதலின் 'உம்மை' எதிர்மறை.

அறிஞனும் விரும்பும் நூல்—என்பதில் 'உம்' சிறந்த அறிஞனே விரும்பக் கூடிய நூல் என நூலின் சிறப்பை உணர்த்துதலின் 'உம்மை' உயர்வு சிறப்பு.

நாயும் விரும்பாத உணவு—என்பதில் 'உம்' இழிந்த நாயே விரும்பாத உணவு என உணவின் இழிவை உணர்த்துதலின் 'உம்மை' இழிவு சிறப்பு.

மங்களாம்பிகை வெல்லினும் வெல்லுவாள்—என்பதில் 'உம்' மங்களாம்பிகை வெல்லுதலைத் துணிந்து கூறாமல் ஐயமாக உணர்த்துதலின் 'உம்மை' ஐயம்.

மண மண்டபத்திற்கு நளனும் வந்தான் — என்பதில் உம்' தேவர்கள் முன்பே வந்திருந்தனர் என முன்பு

நிகழ்ந்ததை உணர்த்துதலின் 'உம்மை' **இறந்தது தழுவிய எச்சம்.**

**மணிமேகலையும்** உவவனம் புறப்பட்டாள்—என்பதில் 'உம்' இனி சுதமதி புறப்படுவாள் என இனி நிகழப் போவதை உணர்த்துதலின் 'உம்மை' **எதிரது தழுவிய எச்சம்.**

(எச்சம் இறந்தது தழுவியது, எதிரது தழுவியது என இருவகைப்படும்.)

தமிழ் நாட்டு **மூவேந்தரும்** வந்தனர் — என்பதில் 'உம்' தமிழ் நாட்டு வேந்தர் ஆகிய மூவருமே வந்து விட்டனர் என்னும் முற்றுப் பொருளை உணர்த்துதலின் 'உம்மை' **முற்று.**

**மறைமலையடிகளும்** கல்யாணசுந்தரனாரும் பேசினர்—என்பதில் 'உம்' இருவரும் பேசினர் என எண்ணிக் கைப் பொருளை உணர்த்துதலின் 'உம்மை' **எண்.**

இராமனைக் காட்டிற்கு அனுப்பியவள் **கோசலையும்** அல்லள்; **சுமத்திரையும்** அல்லள்—என்பதில் 'உம்' கைகேயி என்பதை உணர்த்துதலின் 'உம்மை' **தெரிநிலை.**

**பாலும்** ஆயிற்று—என்பது அதுவே மருந்தும் ஆயிற்று என்று பொருள் தருகிறது. இதில் 'உம்' ஆக்கப் பொருளை உணர்த்துதலின் 'உம்மை' **ஆக்கம்.**

**நினைவிற் கொள்க**

**உம்மை இடைச்சொல், எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருள்களை உணர்த்தி வரும்.**

**ந. சூ:** எதிர்மறை சிறப்புஐயம் எச்சம்முற்று அளவை
தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே.

**(அளவை — எண்)**

## (ஈ) கொல் என்னும் இடைச்சொல்

இவ்வளவில் செல்லுங் கொல்; இவ்வளவில் காணுங் கொல்; இவ்வளவில் இயம்புங் கொல்—என்பதில் 'கொல்' இவ்வளவில் செல்லுமோ, காணுமோ, சொல்லுமோ என ஐயப் பொருளை உணர்த்துதலின் **'கொல்'** ஐயம்.

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்—என்பதில் **'கொல்'** யாதொரு பொருளும் உணர்த்தாது அசையாக வந்தமையால் **'கொல்' அசைநிலை.**

*(நீ 'கொல்' எடுத்தாய்—என்பதில் நீ எடுத்தாயா? என 'கொல்' வினாப் பொருள் உணர்த்தி வருதலும் உண்டு.)*

### நினைவிற் கொள்க

**'கொல்' என்னும் இடைச்சொல் ஐயம், அசைநிலை என்னும் இரு பொருள்களை உணர்த்திவரும்.**

ந. சூ.: *கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே.*

*(கூற்று—சொல்)*

### பயிற்சி

(அ) இடைச்சொல் என்பது யாது?

(ஆ) இடைச்சொல் வகையைச் சேர்ந்தன யாவை?

(இ) ஏகார இடைச்சொல் எவ்வெப் பொருளில் வரும்?

(ஈ) ஒ, உம் என்ற இடைச்சொற்கள் எவ்வெப் பொருள்களைத் தரும்?

(உ) 'கொல்' என்ற இடைச்சொல் அசை நிலையாகவும், ஐயப் பொருளை உணர்த்தியும் வந்ததற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

(ஊ) கீழ்வரும் வாக்கியங்களில் அமைந்த இடைச்சொற்களை எடுத்தெழுதி விளக்குக.

(*i*) ஆசிரியர் வந்தாரோ ?

(*ii*) அறனெனப்பட்டது இல்வாழ்க்கையே.

(*iii*) பாலும் பழமும் உண்டான்.

(*iv*) சென்றது கொல், போந்தது கொல்

## 19. உரிச்சொல்

இவள் நனி பேதை.

இது 'இவள் மிகவும் பேதை' என்று பொருள் தருகிறது. இதில் 'பேதை' என்ற பெயர்ச் சொல்லின் குணத்தை மிகுதிப்படுத்த 'நனி' என்ற சொல் அதனைச் சார்ந்து வந்துள்ளது. 'நனி' என்பது பெயர்ச் சொல்லும் அல்ல, வினைச்சொல்லும் அல்ல. இவ்வாறு பெயரை அடுத்து வந்து அதன் குணத்தை உணர்த்தி வரும் சொல் உரிச்சொல் எனப்படும்.

இவன் சாலப் பேசினான்.

இது 'இவன் மிகுதியாகப் பேசினான்' என்று பொருள் தருகிறது. இதில் 'பேசினான்' என்ற வினைச் சொல்லின் குணத்தை மிகுதிப்படுத்த 'சால' என்ற சொல் அதனைச் சார்ந்து வந்துள்ளது. 'சால' என்பது பெயர்ச் சொல்லும் அல்ல; வினைச்சொல்லும் அல்ல. இவ்வாறு வினையை அடுத்து வந்து அதன் குணத்தை உணர்த்திவரும் சொல் உரிச்சொல் எனப்படும்.

### நினைவிற் கொள்க

பெயர் வினைகளைப்போல் தனித்து வந்து பொருளை உணர்த்தாமல், பெயர்வினைகளை அடுத்து அவற்றின் குணத்தை உணர்த்தும் சொல் உரிச் சொல்லாகும். செய்யுட்கு உரிய சொல் ஆதலால் உரிச்சொல் எனப் பெயர் பெற்றது என்றும் கூறுவர். அஃது ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள், பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல் என இருவகைப்படும்.

## 20. ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள்

**சால** மகிழ்ந்தாள் (மிக மகிழ்ந்தாள்)

**உறு** பொருள் (மிக்க பொருள்)

**தவச்** சேய் நாட்டார் (மிக்க சேய்மையிலுள்ள நாட்டார்)

**நனி** தின்றுன் (மிகுதியாகத் தின்றுன்)

மகிழ்ச்சி **கூர்** மனம் (மகிழ்ச்சி மிக்க மனம்)

**கழி** உவகை (மிக்க உவகை)

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'சால, உறு, தவ, நனி, கூர், கழி' என்னும் ஆறும் 'மிகுதி' என்னும் ஒரே குணத்தை உணர்த்தி வந்தன. ஆதலால், இவை ஒரு குணம் தழுவிய உரிச்சொற்களாம்.

நினைவிற் கொள்க

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் ஆறும் **மிகுதி** என்னும் ஒரு குணம் உணர்த்தும் பல உரிச் சொற்களாகும்.

ந. சூ.: சால உறுதவ நனிகூர் கழிமிகல்.

## 21. பலகுணம் தழுவிய ஓர் உரிச்சொல்

**கடி** நகர் (காவல் அமைந்த நகர்)

**கடி** வாள் (கூர்மையான வாள்)

**கடி** மலர் (மணம் (வாசனை) உடைய மலர்)

**கடி** மார்பு (விளக்கம் (ஒளி) அமைந்த மார்பு)

**கடிப்** பேய் (அச்சந் தரும் பேய்)

**கடி** நண்பன் (சிறப்புடைய நண்பன்)

**கடி** விடுவேன் (விரைவாக விடுவேன்)

கடி வெயில் (மிகுந்த வெயில்)

கடி மாலை (புதுமையான மாலை)·

கடி முரசு (ஆர்க்கும் (ஒலிக்கும்) முரசு)

கடி மது (வரைவுக்குரிய (விலக்குதற்குரிய) மது)

கடி வினை (மன்றல் (திருமணம்) வினை)

கடி மிளகாய் (கரிப்பு (காரம்) உள்ள மிளகாய்)

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'கடி' என்னும் சொல் 'காப்பு, கூர்மை, விரை (மணம்), விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு' என்னும் பல குணங்களை உணர்த்தியது. ஆதலால், இது பல குணம் தழுவிய ஓர் உரிச் சொல்லாம்.

### நினைவிற் கொள்க

**கடி என்னும் உரிச்சொல் காவல், கூர்மை, விரை, விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு என்னும் பல குணங்களை உணர்த்தும் ஓர் உரிச் சொல்லாகும்.**

ந. சூ.: கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்.

### பயிற்சி

(அ) உரிச்சொல்லாவது யாது? அது எத்துணை வகைப் படும்?

(ஆ) கடி என்னும் உரிச்சொல் எவ்வெப் பொருள்களில் வரும்?

# III. பொது

## 1. வழக்கு

*தீ எரிந்தது.*

கோவலன் துஞ்சினன்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'தீ' 'எரிந்தது' 'கோவலன்' ஆகிய சொற்கள் தம் பொருள்களையே உணர்த்தின. இவை இயல்பாய் வழங்கி வருகின்றன. 'துஞ்சினன்' என்னும் சொல் தனக்குரிய பொருளாகிய 'தூங்கினன்' என்ற பொருளை உணர்த்தாமல் இங்கு 'இறந்தான்' என்ற பொருளை உணர்த்தியது. 'இறந்தான்' என்பது மங்கலமல்லாத சொல்லாக இருத்தலின், அதனைக் கூறல் தகுதியன்று என்று கருதி மங்கலச் சொல்லாகிய துஞ்சினன் என்பது வழங்கப் பட்டுள்ளது. இவ்வாறு சொற்கள் வழங்கப்படும் முறை வழக்கு எனப்படும்.

நினைவிற் கொள்க

**பெரியோர்கள் சில சொற்களை இயல்பாகவும், சில சொற்களைத் தகுதி நோக்கி மாற்றியும் வழங்கி வருதல் வழக்கு எனப்படும். அஃது இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இருவகைப்படும்.**

### இயல்பு வழக்கு

சிந்தாதேவி தோன்றினள்.

வாயிலில் தடுத்தான்.

கோவை சென்றேன்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'சிந்தாதேவி' என்பது பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லாக வுள்ளது. 'இல்வாய்' என்பது 'வாயில்' என முன்

பின்னுக மாறிப் புலவர்களால் இயல்பாக வழங்கப் பட்டு வருகிறது. 'கோயம்புத்தூர்' என்பது 'கோவை' என மாற்றிப் பெரியோர்களால் இயல்பாக வழங்கப் பட்டு வருகிறது. இவை இயல்பாக வழங்கி வருதலின் இயல்பு வழக்கு ஆகும்.

நினைவிற் கொள்க

**ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லால் அப் பொருளை வழங்குதல் இயல்பு வழக்கு ஆகும். அஃது இலக்கண முடையது, இலக்கணப்போலி, மரூஉ என மூன்று வகைப்படும்.**

## இலக்கண முடையது

பரணன் பாடினுன்.

இவ்வெடுத்துக் காட்டில் 'பரணன்' என்ற சொல் லும், 'பாடினுன்' என்ற சொல்லும் பொருள்களுக்கு இயல்பாய் இலக்கணத்தில் அமைந்தவாறே வழங்கப் பட்டுள்ளன. நிலம், நீர், தீ, காற்று, மரம், மனிதன், மலை, பொன் போல்வனவும் இலக்கண விதி தவரு மல் இயல்பாய் வழங்குவனவாகும்.

நினைவிற் கொள்க

**சொற்களை இலக்கண விதி தவருமல் வழங்குதல் இலக்கண முடையதாகும்.**

## இலக்கணப் போலி

புறநகர் சென்ருன்.

கோயில் கட்டினுன்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'புறநகர், கோயில்' என்பவை இலக்கணமுடைய வழக்கில் வந்தன அல்ல. 'நகர்ப்புறம்' என்ற இலக்கணமுடையதே. 'புறநகர்' என முன்பின் ஆக மாறி இலக்கணமுடையதுபோல் தொன்றுதொட்டுப் புலவர்களால் வழங்கப்பட்டு வரு கின்றது. 'கோவில்' என்ற இலக்கணமுடையதே

'கோயில்' என (கோ + இல்) இடையில் 'வ்' உடம்படுமெய்க்குப் பதில் 'ய்' பெற்று இலக்கணமுடையது போல் தொன்றுதொட்டுப் புலவர்களால் வழங்கப் பட்டு வருகின்றது. கீழ்வருவனவும் இவ்வாறு வழங்குவனவாகும்.

| இலக்கணப்போலி | இலக்கணமுடையது |
|---|---|
| முன்றில் | இல்முன் |
| புல்நுனி | நுனிப்புல் |
| வாயில் | இல்வாய் |
| மீகண் | கண்மீ |
| புறவுலா | உலாப்புறம் |
| கடைக்கண் | கண்கடை |
| சதை | தசை |
| சிவிறி | விசிறி |
| ஞிமிறு | மிஞிறு |
| பொதியில் | பொதுவில் |

**நினைவிற் கொள்க**

இலக்கண அமைதி இல்லாததாயினும் உலக வழக்கு நோக்கிப் புலவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவது இலக்கணப் போலி ஆகும். அஃது இரு சொற்கள் முன்பின் ஆக மாறியும், எழுத்துக்கள் வேறுபட்டும் வரும்.

**மரூஉ**

எந்தப் புத்தகம்?

அருமந்தன்ன பையன்.

ஆனை வந்தது.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'எந்த, ஆனை, அருமந்தன்ன' என்பவை இலக்கணமுடைய வழக்கில் வந்தன அல்ல. 'எ' என்ற இலக்கணமுடையதே 'எந்த' என்று எழுத்துக்கள் புதிதாகத் தோன்றியும், 'யானை'

என்ற இலக்கணமுடையதே 'ஆனை' என்று எழுத்துத் திரிந்தும், 'அருமருந்தன்ன' என்ற இலக்கணமுடையதே 'அருமந்தன்ன' என்று எழுத்துக் கெட, புலவர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. கீழ்வருவனவும் இவ்வாறு வழங்குவனவாகும்.

| மரூஉ | இலக்கணமுடையது |
|---|---|
| உறந்தை | உறையூர் |
| தஞ்சை | தஞ்சாவூர் |
| சென்னை | சென்னப்பன் பட்டினம் |
| கோவை | கோயம்புத்தூர் |
| சோணாடு | சோழன் நாடு |
| குடந்தை | கும்பகோணம் |
| பேர் | பெயர் |
| ஆர் | யார் |

நினைவிற் கொள்க

தொன்று தொட்டு வழங்குதல் இன்றி இடையில் ஒரு சொல் சில எழுத்து தோன்றியும், கெட்டும், திரிந்தும் இலக்கணம் சிதைந்தும் மருவி வழங்குவது மரூஉ வழக்கு ஆகும்.

## தகுதி வழக்கு

கால் கழுவி வந்தான்.

அவள் தாலி பெருகிற்று.

அவன் சொல்விளம்பி குடித்தான்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'கால் கழுவி வந்தான்' என்பது 'மலங்கழுவி வந்தான்' என்று பொருள் தருகிறது. 'மலங் கழுவி' என்ற தொடர் பலர் கூடியுள்ள இடத்தில் கூறுவதற்குத் தகுதி இல்லாத இடக்கான தொடராக உள்ளது. ஆதலின், அதனை அடக்கி (மறைத்து) தகுதியுடைய 'கால் கழுவி' என்ற தொடரால் வழங்குதல் மரபாகும்.

'அவள் தாலி பெருகிற்று' என்பது 'அவள் தாலி அறுந்தது' என்று பொருள் தருகிறது. 'அறுந்தது' என்பது அமங்கலச் சொல்லாகும். அதனைச் சொல்லுதல் தகுதியன்றாதலின் தகுதியுடைய 'தாலி பெருகிற்று' என்ற மங்கலச் சொற்களால் வழங்குதல் மரபாகும்.

'அவன் சொல்விளம்பி குடித்தான்' என்பது 'அவன் கள் குடித்தான்' என்று பொருள் தருவதாகும். 'சொல்விளம்பி' என்பது 'கள்' என்று குறிப்பிட்ட ஒரு கூட்டத்தார்க்கே மட்டும் தெரிந்தது ஆகும். 'கள்' என்று கூறுதல் தகுதியன்று என்று அதனை மறைத்து 'சொல் விளம்பி' என்று தகுதியுடைய சொல்லால் குறிப்பிட்ட ஒரு குழுவினர்க்கே புலப்படக் கூறுதல் மரபாகும்.

நினைவிற் கொள்க

ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லை யாதேனும் ஒரு காரணம் பற்றித் தகுதியன்று என்று நீக்கி விட்டுத் தகுதியுடைய வேறொரு சொல்லால் அப்பொருளை வழங்குவது தகுதி வழக்காகும். அஃது இடக்கர் அடக்கல், மங்கலம், குழூஉக் குறி என மூன்று வகைப்படும்.

## இடக்கர் அடக்கல்

வாய்பூசி வந்தான்.

இவ்வெடுத்துக்காட்டு 'வாய் கழுவி வந்தான்' என்று பொருள் தருகிறது. 'வாய் கழுவி' என்பது பலர்முன் கூறத் தகுதியற்ற இடக்கான சொற்களாக உள்ளமையின் அவற்றை அடக்கி 'வாய் பூசி' என்ற தகுதியுடைய சொற்களால் வழங்கப்பட்டது.

நினைவிற் கொள்க

பெரியோர் முன்னிலையில் சொல்லத் தகுதியற்ற இடக்கான சொற்களை அடக்கி (நீக்கி)விட்டு, அப்பொருள் தரத்தக்க தகுதியுடைய சொற்களை வழங்குதல் இடக்கர் அடக்கலாகும்.

| இடக்கர் அடக்கல் | இடக்கர் |
|---|---|
| பகரவீ, பவ்வீ, | பீ |
| கொல்லைக்குப் போனான் | மலங்கழிக்கப் போனான் |
| சிறுநீர் கழித்தான் | மூத்திரம் கழித்தான் |

**மங்கலம்**

நன்காடு சேர்ந்தான்.

இவ்வெடுத்துக்காட்டு 'சுடுகாடு சேர்ந்தான்' (இறந்தான்) என்று பொருள் தருகிறது. 'சுடுகாடு' என்பது அமங்கலமான சொல்லாதலின் அதனைக் கூறுதல் தகுதியன்று என மறைத்து, 'நன்காடு' என மங்கலமான சொற்களால் வழங்கப்பட்டது.

| மங்கலம் | அமங்கலம் |
|---|---|
| திருமுகம் | ஓலை |
| வெள்ளாடு | காராடு |
| நன்காடு | சுடுகாடு |
| துஞ்சினார் | இறந்தார் |

**நினைவிற் கொள்க**

**மங்கலமல்லாத சொல்லை நீக்கி மங்கலமான சொல்லால் வழங்குதல் மங்கலமாகும்.**

**குழூஉக் குறி**

உழக்கு உளுந்து விலை பிஞ்சுவெள்ளை யாகும்.

இவ்வெடுத்துக்காட்டு 'உழக்கு உளுந்தின் விலை கால் ரூபாய் ஆகும்' என்று பொருள் தருகிறது. 'கால் ரூபாய்' எனக் கூறின் அனைவரும் அறிந்து கொள்ளு வராதலின், வணிகர் அதனை மறைத்துத் தம் குழு வினர்க்கே புலப்படும்படி 'பிஞ்சு வெள்ளை' என்று வழங்குவது தகுதியாகும் என்று வழங்குவர்.

| குழூஉக் குறி | குழு | பொருள் |
| --- | --- | --- |
| பறி | பொற்கொல்லர் | பொன் |
| குண வெள்ளை | வணிகர் | மூன்று ரூபாய் |
| மதி வெள்ளை | ,, | ஒரு ரூபாய் |
| கறுப்பு | குடியர் | சாராயம் |
| ஆகாசப் பால் | ,, | கள் |
| வெள்ளை | ,, | கள் |

நினைவிற் கொள்க

ஒரு குழுவினர் யாதேனும் ஒரு காரணம் பற்றி ஒரு பொருளின் இயற்பெயரை மறைத்துப் பிறர்க்குப் பொருள் விளங்காதவாறு சொல்குறி (அடையாளப் பெயர்) அமைத்து வழங்குவது குழூஉக் குறியாகும்.

ந சூ.: இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றுரும் மூவகை இயல்பும்
இடக்கர் அடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல்.

பயிற்சி

(அ) இயல்பு வழக்கு, தகுதி வழக்கு—இவற்றை விளக்கி வரைக.

(ஆ) இயல்பு வழக்கு எத்துணை வகைப்படும்? எடுத்துக் காட்டு தந்து விளக்குக.

(இ) தகுதி வழக்கு எத்துணை வகைப்படும்? வகைக்கோர் எடுத்துக்காட்டு தருக.

## 2. தொடர்

**பாடம் படித்தான்.**

இதில் 'பாடம்' என்ற சொல்லும், 'படித்தான்' என்ற சொல்லும் பொருள் பொருத்தத்தினுல் ஒன்ருே டொன்று தொடர்பு கொண்டுள்ளன. ஆதலின் இது தொடர் ஆகும்.

**வீடு கட்டினன்.**

இது ''வீட்டைக் கட்டினன்'' என்று பொருள் தருகிறது. இதில் 'வீடு' என்ற சொல்லும், 'கட்டினன்' என்ற சொல்லும் இடையில் 'ஐ' என்ற இரண்டாம் வேற்றுமை உருபு மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இது தொகை நிலைத்தொடர் ஆகும்.

**பள்ளிக்குச் சென்ருன்.**

இதில் 'பள்ளி' என்ற சொல்லும், 'சென்ருன்' என்ற சொல்லும் இடையில் 'கு' என்ற நான்காம் வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்க ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இது தொகா நிலைத்தொடர் ஆகும்.

### நினைவிற் கொள்க

பெயர்ச் சொல்லோடு பெயர்ச்சொல்லும், பெயர்ச் சொல் லோடு வினைச்சொல்லும் வேற்றுமை உருபு முதலியன மறைந்து நிற்கவும், வெளிப்பட்டு நிற்கவும் பொருள் பொருத்தத்தினுல் ஒன்ருேடொன்று தொடர்பு கொள்வன தொடர் ஆகும். அது தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர் என இருவகைப் படும்.

# 3. தொகைநிலைத் தொடர்

## (1) வேற்றுமைத் தொகை

**பால் பருகினான்.**

இது 'பாலைப் பருகினான்' என்று பொருள் தருகிறது. 'பால்' என்ற சொல்லும், 'பருகினான்' என்ற சொல்லும் இடையில் 'ஐ' என்ற இரண்டாம் வேற்றுமை உருபு மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இ∴து **இரண்டாம் வேற்றுமைத் தொகை.**

**தலை வணங்கினான்.**

இது 'தலையால் வணங்கினான்' என்று பொருள் தருகிறது. இதில் **'தலை'** என்ற சொல்லும், **'வணங்கினான்'** என்ற சொல்லும் இடையில் 'ஆல்' என்ற மூன்றாம் வேற்றுமை உருபு மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இ∴து **மூன்றாம் வேற்றுமைத் தொகை.**

**பசிப் பகைவன்.**

இது 'பசிக்குப் பகைவன்' என்று பொருள் தருகிறது. இதில் **'பசி'** என்ற சொல்லும் **'பகைவன்'** என்ற சொல்லும் இடையில் **'கு'** என்ற நான்காம் வேற்றுமை உருபு மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இது **நான்காம் வேற்றுமைத் தொகை.**

**மலைவீழ் அருவி.**

இது 'மலையின் வீழ் அருவி' என்று பொருள் தருகிறது. இதில் **'மலை'** என்ற சொல்லும், **'வீழ் அருவி'** என்ற சொற்களும் இடையில் **'இன்'** என்ற ஐந்தாம் வேற்றுமை உருபு மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இ∴து **ஐந்தாம் வேற்றுமைத் தொகை.**

வேலன் மயில்.

இது 'வேலனது மயில்' என்று பொருள் தருகிறது. இதில் 'வேலன்' என்ற சொல்லும், 'மயில்' என்ற சொல்லும் இடையில் 'அது' என்ற ஆறும் வேற்றுமை உருபு மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இஃது ஆறும் வேற்றுமைத் தொகை.

பள்ளி நுழைந்தான்.

இது 'பள்ளியில் நுழைந்தான்' என்று பொருள் தருகிறது. இதில் 'பள்ளி' என்ற சொல்லும், 'நுழைந் தான்' என்ற சொல்லும் இடையில் 'இல்' என்ற ஏழாம் வேற்றுமை உருபு மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இஃது ஏழாம் வேற்றுமைத் தொகை.

பொன் குழை.

இது 'பொன்னால் செய்த குழை' என்று பொருள் தருகிறது. இதில் 'பொன்' என்ற சொல்லும், 'குழை' என்ற சொல்லும் இடையில் 'ஆல்' என்ற மூன்றும் வேற்றுமை உருபும், 'செய்த' என்ற வேறு சொல்லும் மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இது மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. (குழை—காதணி. 'பொன்னால் குழை' எனக் கூறினால் பொருள் பொருத்தமாகத் தொடர வில்லை.)

குறிப்பு: வேற்றுமை உருபோடு 'செய்த, உள்ள, உடைய' முதலிய வேறு சொற்களும் மறைந்து வருவது உருபும் பயனும் உடன்தொக்க தொகை யாகும்.

நினைவிற் கொள்க

இரண்டு சொற்களுக்கு இடையில் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை ஈறாக உள்ள ஆறு வேற்றுமை உருபுகளும் மறைய, ஒன்றை ஒன்று தொடர்ந்து வருவது வேற்றுமைத் தொகையாகும். இஃது ஆறு வகைப்படும்.

ந. சூ.: இரண்டு முதலா மிடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

## அல்வழித் தொகைநிலைத் தொடர்

### (2) வினைத்தொகை

வாழ்மலை.

இது 'வாழ்ந்த மலை, வாழ்கின்ற மலை, வாழும் மலை' என்று பொருள் தரும். இதில் 'வாழ்ந்த' என்பது இறந்த காலப் பெயரெச்ச மாகும். 'வாழ்கின்ற' என்பது நிகழ்காலப் பெயரெச்ச மாகும். 'வாழும்' என்பது எதிர்காலப் பெயரெச்சமாகும். இவற்றுள் முறையே 'த்' இறந்த கால இடைநிலையும், 'கின்று' நிகழ்கால இடைநிலையும் ஆகும். 'அ', 'உம்' பெயரெச்ச விகுதிகளாகும். இவ்வெடுத்துக்காட்டில் காலம் காட்டும் இடைநிலைகளும், பெயரெச்ச விகுதிகளும் மறைய 'வாழ்' என்ற பகுதி மட்டும் நின்று 'மலை' என்னும் பெயரோடு தொடர்ந்து பொருள் தந்தது. ஆதலின், இது வினைத்தொகை.

நினைவிற் கொள்க

பெயரெச்ச வினையின் காலங்காட்டும் இடைநிலையும், விகுதியும் மறைந்து நிற்க, வினைப்பகுதி மட்டும் பெயரோடு தொடர்ந்து பொருள் தருவது வினைத்தொகை.

ந. சூ.: காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

### (3) பண்புத் தொகை

நன் மொழி.

இது 'நன்மை ஆகிய மொழி' என்று பொருள் தருகிறது. இதில் 'நன்மை' என்ற பண்புச் சொல்லின் பண்பு விகுதி 'மை' கெட்டு 'நன்' என்று உள்ள சொல்லுக்கும், 'மொழி' என்ற பெயர்ச் சொல்லுக்கும் இடையில் 'ஆகிய' என்ற பண்புருபு மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இது பண்புத் தொகையாகும்.

நினைவிற் கொள்க

பண்புச் சொல்லில் 'மை' விகுதி கெட்டு, இடையில் 'ஆகிய' என்ற பண்புருபு மறைய பண்புகொள் பெயரோடு தொடர்ந்து வருவது பண்புத் தொகையாகும்.

## இருபெயரொட்டுப் பண்புத்தொகை

சாரைப் பாம்பு.

இது 'சாரை ஆகிய பாம்பு' என்று பொருள் தருகிறது. 'சாரை' என்பது பண்புப் பெயர் அன்று; பொருட் பெயரே. 'பாம்பு' என்பதுவும் பொருள் பெயரே. 'சாரை' என்பது ஒருவகைப் பாம்பினத்தைச் சிறப்பாகக் குறிக்கும் பெயராகும். 'பாம்பு' என்பது பாம்பினத்தைப் பொதுவாகக் குறிக்கும் பெயராகும். சிறப்புப்பெயர், பொதுப்பெயர் இரண்டிற்கும் இடையில் 'ஆகிய' என்ற பண்பு உருபு மறைந்து வந்துள்ளது. ஆதலின், இஃது இருபெயரொட்டுப் பண்புத் தொகையாகும்.

நினைவிற் கொள்க

சிறப்புப் பெயர்க்கும் பொதுப் பெயர்க்கும் இடையில் 'ஆகிய' என்ற பண்பு உருபு மறைந்து வருவது இருபெயரொட்டுப் பண்புத் தொகையாகும்.

ந. சூ. : பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்

ஒருபொருட்கு இருபெயர் வந்தவும் குணத் தொகை.

## (4) உவமைத் தொகை

மதி முகம்.

இது 'மதி போன்ற முகம்' என்று பொருள் தருகிறது. இதில் 'மதி' என்பது உவமையாகும். 'முகம்' என்பது உவமேயம் ஆகும். 'மதி' என்ற உவமைக்கும் 'முகம்' என்ற உவமேயத்திற்கும் இடையில் 'போன்ற' என்ற உவமை உருபு மறைய ஒன்றை ஒன்று

தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இஃது உவமைத் தொகை.

நினைவிற் கொள்க

உவமைச் சொல்லிற்கும் உவமேயச் சொல்லிற்கும் இடையில் 'போல, புரைய' முதலிய உவமை உருபுகள் மறைந்து நிற்க அச் சொற்கள் தொடர்ந்து வருவது உவமைத் தொகை. (உவமை—உவமானம்; உவமேயம்—பொருள்.)

ந. சூ.: உவம உருபிலது உவமைத் தொகையே.

ந. சூ.: போலப் புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே.

## (5) உம்மைத் தொகை

சோறு கறி.

இது 'சோறும் கறியும்' என்று பொருள் தருகிறது. இதில் 'சோறு' என்ற சொல்லுக்குப் பின்னும், 'கறி' என்ற சொல்லுக்குப் பின்னும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இஃது உம்மைத் தொகை.

கபில பரணர்.

இது 'கபிலரும் பரணரும்' என்று பொருள் தருகிறது. இதில் 'கபிலர்' என்ற சொல்லின் ஈற்றிலும், 'பரணர்' என்ற சொல்லின் ஈற்றிலும், 'உம்' என்ற இடைச்சொல் எண்ணல் அளவைப் பொருளில் மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இஃது எண்ணலும்மைத் தொகை.

வீசை சேர்.

இது 'வீசையும் சேரும்' என்று பொருள் தருகிறது. இதில் 'வீசை' என்ற எடுத்தலளவைச் சொல்லின் ஈற்றிலும், 'சேர்' என்ற எடுத்தலளவைச் சொல்

லின் ஈற்றிலும் 'உம்' என்ற இடைச் சொல் மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இஃது எடுத்தலும்மைத் தொகை.

படி ஆழாக்கு.

இது "படியும் ஆழாக்கும்' என்று பொருள் தருகிறது. இதில் 'படி' என்ற முகத்தலளவைச் சொல்லின் ஈற்றிலும், 'ஆழாக்கு' என்ற முகத்தலளவைச் சொல்லின் ஈற்றிலும் 'உம்' என்ற இடைச் சொல் மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இது முகத்தலும்மைத் தொகை.

சாண் அங்குலம்.

இது 'சாணும் அங்குலமும்' என்று பொருள் தருகிறது. இதில் 'சாண்' என்ற நீட்டலளவைச் சொல்லின் ஈற்றிலும், 'அங்குலம்' என்ற நீட்டலளவைச் சொல்லின் ஈற்றிலும் 'உம்' என்ற இடைச் சொல் மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இது நீட்டலும்மைத் தொகை.

குறிப்பு : உம்மைத் தொகை இரண்டு சொற்களின் ஈற்றிலும் 'உம்' இடைச் சொல் மறைந்து வரும்.

நினைவிற் கொள்க

எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால் வகை அளவுப் பெயர்கள் சேரும்போது இரண்டு சொற்களின் ஈற்றிலும் 'உம்' என்னும் இடைச் சொல் மறைய ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் தருவது உம்மைத் தொகை.

ந. சூ. : எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனுநான் களவையுள் உம்இல தத்தொகை.

## (6) அன்மொழித் தொகை

பொன் தொடி வந்தாள்.

இது 'பொன்னால் செய்த தொடியினை (வளையலை) அணிந்த பெண் வந்தாள்' என்று பொருள் தருகிறது. இதில் 'பொன் தொடி' என்பது மூன்றும் வேற்றுமை

உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகும். 'பொன்னால் செய்த வளையல் வந்தாள்' என்றால் பொருள் விளக்கமாக இல்லை. இத்தொடர் 'வந்தாள்' என்ற சொல்லின் குறிப்பினால் 'பொன்னால் செய்த வளையலை அணிந்த பெண்' என்று பொருள் தருகிறது. 'பொன்தொடி' என்ற வேற்றுமைத் தொகையின் புறத்து 'பெண்' என்ற அல்லாத மொழியும் மறைந்து வந்தமையான் இஃது அன்மொழித் தொகை.

இத்தொகை வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை என்னும் ஐந்து தொகைகளில் ஒன்றினை அடுத்தே வரும். எத்தொகையை அடுத்து அன் மொழித் தொகை வருகிறதோ, அத்தொகையின் புறத் துப் பிறந்த அன்மொழித் தொகை என்று கூற வேண்டும்.

பூங்குழல் வந்தாள்.

இது 'பூவை அணிந்த குழலை (கூந்தல்) உடைய பெண் வந்தாள்' என்று பொருள் தருகிறது. இதில் 'பூங்குழல்' என்ற இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையின் புறத்தே 'உடைய பெண்' என்ற அல்லாத மொழிகளும் மறைந்து வந்தமையால், இது வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

அணியிழை வந்தாள்.

இது 'அணிந்த இழை (ஆபரணம்) உடைய பெண் வந்தாள்' என்று பொருள் தருகிறது. இதில் 'அணி யிழை' என்ற வினைத்தொகையின் புறத்தே 'உடைய பெண்' என்ற அல்லாத மொழியும் மறைந்து வந்தமை யால், இது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகை.

இளங்கொடி சென்றாள்.

இது 'இளமையாகிய கொடி போன்ற பெண் சென்றாள்' என்று பொருள் தருகிறது. இதில் 'இளங் கொடி' என்ற பண்புத் தொகையின் புறத்தே

'போன்ற பெண்' என்ற அல்லாத மொழியும் மறைந்து வந்தமையால், இது பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

பிறை நுதல் வந்தாள்.

இது 'பிறை போன்ற நுதல் (நெற்றி) உடைய பெண் வந்தாள்' என்று பொருள் தருகிறது. இதில் 'பிறை நுதல்' என்ற உவமைத் தொகையின் புறத்தே 'உடைய பெண்' என்ற அல்லாத மொழி மறைந்து வந்தமையால், இது உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

உயிர்மெய் எழுது

இஃது 'உயிரும் மெய்யும் கூடிப்பிறந்த எழுத்துக்களை எழுது' என்று பொருள் தருகிறது. இதில் 'உயிர் மெய்' என்ற உம்மைத் தொகையின் புறத்து 'கூடிப் பிறந்த எழுத்துக்களை' என்ற அல்லாத மொழியும் மறைந்து வந்தமையால், இஃது உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

நினைவிற் கொள்க

**வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை என்னும் ஐந்து தொகைகளின் புறத்தே அல்லாத சொல் மறைந்து வருவது அன்மொழித் தொகை.**

குறிப்பு : அன்மொழித் தொகை இரு சொற்களின் இடையில் சொல் மறைதலோடு அவற்றின் புறத்தே வேறு சொல்லும் மறைந்து வரும்.

ந.சூ.: ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி.

நினைவிற் கொள்க

**தொகை நிலைத் தொடர் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர், அன்மொழித் தொகைநிலைத் தொடர் என இருவகைப் படும்.**

ந. சூ.: வேற்றுமை வினைபண்பு உவமை உம்மை
அன்மொழி எனஅத் தொகையா றுகும்.

# 4. தொகாநிலைத் தொடர்

## வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

பரிசைப் பெற்ருன்.

இதில் 'பரிசு' என்ற சொல்லுக்கும், 'பெற்ருன்' என்ற சொல்லுக்கும் இடையில் 'ஐ' என்ற இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்க,ஒன்ருேடு ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர். இ∴து இரண்டாம் வேற்றுமை விரி என்றும் கூறப்படும்.

வாளால் வீசினுன்.

இதில் 'வாள்' என்ற சொல்லுக்கும், 'வீசினுன்' என்ற சொல்லுக்கும் இடையில் 'ஆல்' என்ற மூன்ரும் வேற்றுமை உருபுவெளிப்பட்டு நிற்க, ஒன்ருேடு ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், மூன்ரும் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர். இது மூன்ரும் வேற்றுமை விரி என்றும் கூறப்படும்.

தஞ்சாவூர்க்கு சென்றேன்.

இதில் 'தஞ்சாவூர்' என்ற சொல்லுக்கும், 'சென்றேன்' என்ற சொல்லுக்கும் இடையில் 'கு' என்ற நான்காம் வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்க, ஒன்ருேடு ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர். இது நான்காம் வேற்றுமை விரி என்றும் கூறப்படும்.

பாலின் சிறந்தது.

இது 'பால் போலச் சிறந்தது' என்று பொருள் தருகிறது. இதில் 'பால்' என்ற சொல்லுக்கும், 'சிறந்தது' என்ற சொல்லுக்கும் இடையில் 'இன்' ஐந்தாம் வேற்றுமை உருபு வெளிப்பட்டு ஒப்புமைப் பொருள் தந்து நிற்க, ஒன்ருேடு ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர். இ∴து ஐந்தாம் வேற்றுமை விரி என்றும் கூறப்படும்.

**கோவலனது மனைவி.**

இதில் 'கோவலன்' என்ற சொல்லுக்கும், 'மனைவி' என்ற சொல்லுக்கும் இடையில் 'அது' என்ற ஆறும் வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்க, ஒன்றோடு ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், ஆறும் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர். இஃது ஆறும் வேற்றுமை விரி என்றும் கூறப்படும்.

**நாட்டில் இருந்தான்.**

இதில் 'நாடு' என்ற சொல்லுக்கும், 'இருந்தான்' என்ற சொல்லுக்கும் இடையில் 'இல்' என்ற ஏழாம் வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்க, ஒன்றோடு ஒன்று தொடர்ந்து பொருள் தந்தன. ஆதலின், ஏழாம் வேற்றுமைத் தொகா நிலைத் தொடர். இது ஏழாம் வேற்றுமை விரி என்றும் கூறப்படும்.

நினைவிற் கொள்க

**இரண்டு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்க, ஒன்றோடு ஒன்று பொருள் தருவது வேற்றுமைத் தொகா நிலைத் தொடர். இது வேற்றுமை விரி என்றும் கூறப்படும். வேற்றுமைத் தொகா நிலைத் தொடர் ஆறு வகைப் படும்.**

## அல்வழித் தொகாநிலைத் தொடர்

### வினைமுற்றுத் தொடர்

**வருந்தினள் கண்ணகி.**

இதில் 'வருந்தினள்' என்ற இறந்தகால **வினை** முற்றைத் தொடர்ந்து 'கண்ணகி' என்ற பெயர் வந்து பொருள் தந்தது. இதில் காலம் வெளிப் பட்டு நின்றது. இவ்வாறு வருவது **தெரிநிலை வினை முற்றுத் தொடர்.**

**சிறியன் பரதன்.**

இதில் 'சிறியன்' என்ற குறிப்பு **வினை** முற்றைத் தொடர்ந்து 'பரதன்' என்ற பெயர் வந்து பொருள் தந்தது. இதில் காலம் குறிப்பாக உணர்த்தப்படுகிறது. இவ்வாறு வருவது **குறிப்பு வினைமுற்றுத் தொடர்.**

**பாடிய பையன்.**

இதில் 'பாடிய' என்ற இறந்தகாலப் பெயரெச்சத்தைத் தொடர்ந்து 'பையன்' என்ற பெயர் வந்து பொருள் தந்தது. இதில் காலம் வெளிப்பட்டு நின்றது. இவ்வாறு வருவது **தெரிநிலைப் பெயரெச்சத் தொடர்.**

**பெரிய கோவில்.**

இதில் 'பெரிய' என்ற குறிப்புப் பெயரெச்சத்தைத் தொடர்ந்து 'கோயில்' என்ற பெயர் வந்து பொருள் தந்தது. இதில் காலம் குறிப்பாக உணர்த்தப்படுகிறது. இவ்வாறு வருவது **குறிப்புப் பெயரெச்சத் தொடர்.**

**தோற்று ஓடினான்.**

இதில் 'தோற்று' என்ற இறந்தகால **வினை** யெச்சத்தைத் தொடர்ந்து 'ஓடினான்' என்ற **வினை** முற்று வந்து பொருள் தந்தது. இதில் காலம் வெளிப்பட்டு நின்றது. இவ்வாறு வருவது **தெரிநிலை வினையெச்சத் தொடர்.**

**மெல்லச் சென்றான்.**

இதில் 'மெல்ல' என்ற குறிப்பு **வினை**யெச்சத்தைத் தொடர்ந்து 'சென்றான்' என்ற **வினை**முற்று வந்து பொருள் தந்தது. இதில் காலம் குறிப்பாக உணர்த்தப்படுகிறது. இவ்வாறு வருவது **குறிப்பு வினையெச்சத் தொடர்.**

**செங்குட்டுவன் வென்றான்.**

இதில் 'செங்குட்டுவன்' என்ற எழுவாயைத் தொடர்ந்து 'வென்றான்' என்ற வினைமுற்று வந்து பொருள் தந்தது. ஆதலால், **எழுவாய்த் தொடர்.**

**செழியா ! செல்.**

இதில் 'செழியா' என்ற சொல் செழியனைக் கூப்பிடப் பயன்படுதலின் விளி வேற்றுமை ஆகும். 'செழியா' என்ற விளிவேற்றுமையைத் தொடர்ந்து 'செல்' என்ற சொல் வந்து பொருள் தந்தது. ஆதலின், **விளித்தொடர்.**

மற்று ஒன்று.

இதில் 'மற்று' என்ற இடைச் சொல்லைத் தொடர்ந்து 'ஒன்று' என்ற சொல் வந்து பொருள் தந்தது. ஆதலின், **இடைச்சொல் தொடர்.**

சாலப் பேசினான்.

இதில் 'சால' என்ற உரிச்சொல்லைத் தொடர்ந்து 'பேசினான்' என்ற சொல் வந்து பொருள் தந்தது. ஆதலின், **உரிச்சொல் தொடர்.**

ஓடு ஓடு.

இதில் 'ஓடு' என்ற சொல்லைத் தொடர்ந்து 'ஓடு' என்ற சொல்லே அடுக்கி வந்து பொருள் தந்தது. ஆதலின், உரிச் சொல் தொடர்.

நினைவிற் கொள்க

**வினை முற்று, பெயரெச்சம், வினை யெச்சம், எழுவாய், விளி, வேற்றுமை உருபுகள், இடைச் சொல், உரிச் சொல், அடுக்கு என்ற இவை, வேறு சொற்கள் இடையில் மறையாமல் பிற சொற்களைத் தொடர்ந்து வருவது தொகாநிலைத் தொடர் ஆகும். இஃது ஒன்பது வகைப்படும்.**

நினைவிற் கொள்க

**வினை முற்றுத் தொடர், பெயரெச்சத் தொடர், வினை யெச்சத் தொடர், எழுவாய்த் தொடர், விளித் தொடர், இடைச்**

**சொல் தொடர், உரிச்சொல் தொடர், அடுக்குத் தொடர் இவை அல்வழித் தொகா நிலைத் தொடர் ஆகும்.**

ந.சூ.: *முற்றீ ரெச்சம் எழுவாய் விளிப்பொருள்*
*ஆறுரு பிடைஉரி அடுக்கிவை தொகாநிலை.*

**பயிற்சி**

(அ) தொகை நிலைத்தொடர், தொகா நிலைத்தொடர்— இவற்றை விளக்கி எழுதுக.

(ஆ) வேற்றுமைப் புணர்ச்சி அமைந்த தொகை நிலைத் தொடர்கள் எவை? வகைக்கோர் எடுத்துக்காட்டுத் தருக.

(இ) வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத் தொகை—இவற்றின் இலக்கணங்களை எடுத்துக் காட்டுகள் தந்து விளக்கி எழுதுக.

(ஈ) அன்மொழித்தொகையின் இலக்கணம் யாது? அஃது எத்தொகைகளின் புறத்தே தோன்றும்?

(உ) அல்வழிப் புணர்ச்சியிலமைந்த தொகாநிலைத் தொடர்கள் எவை?

(ஊ) பின்வரும் தொடர்களில் அமைந்த தொகைகளை எடுத்து எழுதுக.

(*i*) இன்சொல் (*ii*) கல்லெறிந்தான் (*iii*) கம்ப இராமாயணம் (*iv*) நீர்மோர் (*v*) பிறைநுதல் (*vi*) பள்ளி வாழ்க்கை (*vii*) சுடுசோறு.

(எ) பின்வரும் எடுத்துக்காட்டுகளில் அமைந்த தொடர்களைப்பற்றி விளக்கம் தருக.

(*i*) கண்டேன் சீதையை (*ii*) படித்த பாடம் (*iii*) பாம்பு பாம்பு (*iv*) நடந்து சென்றார் (*v*) மற்றொன்று கொண்டு வா (*vi*) உறுபொருள் தந்தார்.

# IV. புணர்ச்சி

## 1. புணர்ச்சி இன்னதென்பது—

செல்வி பாடினுள்.

பலாப் பழம்.

மேற்காட்டிய எடுத்துக்காட்டுகளில் 'செல்வி, பலா' என்பன முதலில் நிலைத்து உள்ள சொல் (மொழி)கள் ஆகும். 'பாடினுள், பழம்' என்பன பின்பு வந்து சேர்ந்த மொழிகள் ஆகும். 'செல்வி' என்ற நிலைத்துள்ள மொழியோடு 'பாடினுள்' என்ற வரு மொழி சேரும்போது யாதொரு மாறுபாடும் ஏற்பட வில்லை. இயல்பாகவே உள்ளது. 'பலா' என்ற நிலை மொழியோடு 'பழம்' என்ற வருமொழி சேரும்போது 'ப்' என்ற எழுத்து புதிதாகத் தோன்றியுள்ளது.

**நினைவிற் கொள்க**

**ஒரு தொடரில் முதலில் நிற்கும் மொழி நிலைமொழியாகும். அதனை அடுத்து வந்து சேரும் மொழி வருமொழியாகும். நிலை மொழியும் வருமொழியும் ஒன்றுபடச் சேர்வது புணர்ச்சியாகும். (புணர்ச்சி—சேர்க்கை) புணர்ச்சி இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இருவகைப்படும்.**

## 2. இயல்பு புணர்ச்சி

வெற்றிவேலன் எழுதினுன்.

இதில் 'வெற்றிவேலன்' என்ற நிலைமொழியும், 'எழுதினுன்' என்ற வருமொழியும் புணரும்போது இயல்பாகவே உள்ளன. ஆதலின், இயல்பு புணர்ச்சி.

**நினைவிற் கொள்க**

**நிலைமொழியும் வருமொழியும் யாதொரு மாறுபாடும் ஏற் படாமல் இயல்பாகப் புணர்வது இயல்புப் புணர்ச்சி.**

**விகாரப் புணர்ச்சி**

1. மாம் பழம்
2. பற்பொடி
3. மர வேர்
4. கண்ணேக்கு
5. அஃறிணை

முதல் எடுத்துக் காட்டில் 'மா' என்ற நிலைமொழியும், 'பழம்' என்ற வருமொழியும் புணரும்போது 'ம்' என்ற எழுத்துப் புதிதாகத் தோன்றியது.

இரண்டாம் எடுத்துக் காட்டில் 'பல்' என்ற நிலைமொழியும், 'பொடி' என்ற வருமொழியும் புணரும்போது நிலைமொழி ஈற்று 'ல்' 'ற்' எனத் திரிந்தது.

மூன்றும் எடுத்துக்காட்டில் 'மரம்' என்ற நிலைமொழியும், 'வேர்' என்ற வருமொழியும் புணரும்போது நிலைமொழி ஈற்று 'ம்' கெட்டது.

நான்காம் எடுத்துக் காட்டில் 'கண்' என்ற நிலைமொழியும், 'நோக்கு' என்ற வருமொழியும் புணரும்போது வருமொழி மெய் முதல் 'ந்' 'ண்' எனத் திரிந்தது.

ஐந்தாம் எடுத்துக்காட்டில் 'அல்' என்ற நிலைமொழியும், 'திணை' என்ற வருமொழியும் புணரும்போது நிலைமொழி ஈற்று 'ல்' 'ஃ' எனவும், வருமொழி மெய் முதல் 'த்' 'ற்' எனவும் திரிந்தன.

**நினைவிற் கொள்க**

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது நிலைமொழி ஈற்றெழுத்தோ, வருமொழி முதலோ விகாரப்படுவது விகாரப் புணர்ச்சியாகும். இது தோன்றல் விகாரம், திரிதல் விகாரம், கெடுதல் விகாரம் என மூன்று வகைப்படும்.

## மெய்யீறு, உயிரீறு, மெய்முதல், உயிர்முதல்

கிளி + அழகு = கிளியழகு

பலா + காய் = பலாக்காய்

முள் + எடுத்தான் = முள்ளெடுத்தான்

வில் + முறிந்தது = வில் முறிந்தது

கிளி என்பது 'இ' என்று முடிகிறது. 'இ' என்ற உயிர் எழுத்து ஈற்றில் உள்ளமையால் உயிரீறு. 'அழகு' என்பது 'அ' என்ற உயிர் எழுத்தை முதலில் கொண்டுள்ளது. ஆதலின், உயிர் முதல். இவ் வெடுத்துக் காட்டில் உயிரீறு முன் உயிர்முதல் வந்து புணர்ந்தது.

பலா என்பது 'ஆ' என்று முடிகிறது. 'ஆ' என்ற உயிர் எழுத்து ஈற்றில் உள்ளமையால் உயிரீறு. 'காய்' என்பது 'க்' என்ற மெய்யெழுத்தை முதலில் கொண்டுள்ளது. (க் + ஆ = கா) ஆதலின், மெய்முதல். இவ்வெடுத்துக் காட்டில் உயிரீறுமுன் மெய் முதல் வந்து புணர்ந்தது.

முள் என்பது 'ள்' என்று முடிகிறது. 'ள்' என்ற மெய்யெழுத்து ஈற்றில் உள்ளமையால் மெய்யீறு. 'எடுத்தான்' என்பது 'எ' என்ற உயிர் எழுத்தை முதலில் கொண்டுள்ளது. ஆதலின், உயிர் முதல். இவ்வெடுத்துக் காட்டில் மெய்யீறு முன் உயிர் முதல் வந்து புணர்ந்தது.

வில் என்பது 'ல்' என்று முடிகிறது. 'ல்' என்ற மெய்யெழுத்து ஈற்றில் உள்ளமையால் மெய்யீறு. 'முறிந்தது' என்பது 'ம்' என்ற மெய்யெழுத்தை முதலில் கொண்டுள்ளது. (ம் + உ = மு). ஆதலின், மெய்முதல். இவ்வெடுத்துக்காட்டில் மெய்யீறு முன் மெய் முதல் வந்து புணர்ந்தது.

### நினைவிற் கொள்க

உயிர், மெய் என்பனவற்றை ஈற்றிலும் முதலிலும் உடைய நிலைமொழி வருமொழிகளாகிய சொற்கள் உயிரோடு உயிரும், உயிரோடும் மெய்யும், மெய்யோடு உயிரும், மெய்யோடு மெய் யும் வந்து புணரும்.

## 3. மெய்யீற்றின் முன் உயிர்

### (1) பொது விதி

கால் + ஒடிந்தது = காலொடிந்தது.

பால் + ஆடை = பாலாடை.

இவ்வெடுத்துக் காட்டுக்கள் நிலை மொழி ஈற்றில் 'ல்' என்ற மெய்யீற்றைப் பெற்றுள்ளன. வருமொழி முதலில் 'ஒ' என்ற உயிர்க்குறிலும், 'ஆ' என்ற உயிர் நெடிலும் உள்ளன. இவை புணரும்போது "ல் + ஒ = லொ, ல் + ஆ = லா" என உயிர்மெய் யெழுத்துக்களாக மாறி வந்தன. இவ்வாறு புணர்வது இயல்பு புணர்ச்சியாகும்.

நினைவிற் கொள்க

நிலை மொழி ஈற்றில் மெய்யெழுத்து இருக்க வருமொழி முதலில் உயிர் எழுத்து இருந்து புணரும்போது, அவ்வுயிர் எழுத்து ஈற்றுமெய் மீது ஏறி உயிர் மெய்யாக மாறும். இஃது இயல்பு புணர்ச்சியாகும்.

ந. சூ.: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

### (2) சிறப்பு விதி

மண் + எடுத்தான் = மண்ணெடுத்தான்.

பொய் + ஒழிந்தது = பொய்யொழிந்தது.

கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.

தெவ் + அகன்றது = தெவ்வகன்றது.

முள் + உதிர்ந்தது = முள்ளுதிர்ந்தது.

பொன் + ஆடை = பொன்னாடை.

இவ்வெடுத்துக் காட்டுகள் நிலைமொழி ஈற்றில் ண், ய், ல், வ், ள், ன் என்ற மெய்யெழுத்துக்கள் உள்ளன. இம் மெய்யீற்றிற்கு முதல் எழுத்துக்கள் 'ம, பொ, க, தெ, மு, பொ' என்ற குற்றெழுத்துக்கள்

உள்ளன. வருமொழி முதலில் 'எ, ஒ, எ, அ, உ, ஆ' என்ற உயிர் எழுத்துக்கள் உள்ளன. இந் நிலைமொழி மெய்யீறுகள் இரட்டித்து 'மண்ண், பொய்ய், கல்ல், தெவ்வ், முள்ள், பொன்ன்' என ஆகி உயிர் முதலோடு புணர்ந்தன. 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி மெய்யும் உயிரும் சேர்ந்து உயிர் மெய்யெழுத்துக்களாக வந்தன.

### நினைவிற் கொள்க

**நிலைமொழியில் தனிக் குற்றெழுத்தின் பின் உள்ள மெய்யீறு வருமொழி முதலில் உயிரை முதலாக உடைய சொல் வந்து புணரும்போது இரட்டிக்கும்.**

**ந. சூ.:** தனிக்குறில் முன்ஒற் றுயிர்வரின் இரட்டும்.

## 4. உடம்படு மெய்

**புலி + ஓடியது = புலியோடியது.**

**தீ + எரிந்தது = தீ யெரிந்தது.**

**கை + ஒடிந்தது = கையொடிந்தது.**

இவ்வெடுத்துக் காட்டுகளில் நிலைமொழி ஈற்றில் 'இ, ஈ, ஐ' என்ற உயிர் எழுத்துக்கள் உள்ளன. வருமொழி முதலில் 'ஓ' எ, ஒ' என்ற உயிர் எழுத்துக்கள் உள்ளன. இவை புணரும்போது நிலைமொழியையும் வருமொழியையும் உடம்படுத்த (ஒன்று சேர்க்க) இடையில் 'ய்' என்ற மெய்யெழுத்து தோன்றியது. ஆதலின் 'ய்' உடம்படு மெய்யாகும்.

### நினைவிற் கொள்க

**நிலைமொழி ஈற்றில் 'இ, ஈ, ஐ' என்ற உயிர் எழுத்துக்களில் ஒன்றைப் பெற்ற சொற்கள் வருமொழி முதல் உயிர் எழுத்தோடு புணரும்போது 'ய்' என்னும் உடம்படு மெய் தோன்றும்.**

பல + ஆடுகள் = பலவாடுகள்.

பலா + இலை = பலாவிலை.

கடு + அச்சம் = கடு வச்சம்.

பூ + உதிர்ந்தது = பூவுதிர்ந்தது.

நொ + அழகு = நொவ்வழகு.

கோ + ஆட்சி = கோவாட்சி.

கௌ + அழகு = கௌவழகு.

இவ் வெடுத்துக் காட்டுகளில் நிலைமொழி ஈற்றில் 'அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ' என்ற உயிர் எழுத்துக்கள் உள்ளன. வருமொழி முதலில் 'ஆ, இ, அ, உ' என்ற உயிர் எழுத்துக்கள் உள்ளன. இவை புணரும்போது நிலைமொழியையும் வருமொழியையும் உடம்படுத்த இடையில் 'வ்' என்ற மெய் யெழுத்து தோன்றியது. ஆதலின் 'வ்' உடம்படு மெய்யாகும்.

**நினைவிற் கொள்க**

**நிலைமொழி ஈற்றில் 'அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஓ, ஔ' என்ற உயிர் எழுத்துக்களில் ஒன்றைப் பெற்ற சொற்கள் வருமொழி முதல் உயிர் எழுத்தோடு புணரும்போது 'வ்' என்னும் உடம்படு மெய் தோன்றும்.**

சே + அடி = சேயடி.

தே + ஆரம் = தேவாரம்.

இவ் வெடுத்துக் காட்டுகளில் நிலை மொழி ஈற்றில் 'ஏ' என்ற உயிர் எழுத்து உள்ளது. வருமொழி முதலில் 'அ, ஆ' என்ற உயிர் எழுத்துக்கள் உள்ளன. இவை புணரும்போது நிலை மொழியையும் வருமொழியையும் உடம்படுத்த இடையில் 'ய், வ்' என்ற மெய் யெழுத்துக்கள் தோன்றின. இவை உடம்படு மெய்கள் ஆகும்.

**நினைவிற் கொள்க**

**நிலைமொழி ஈற்றில் 'ஏ' என்ற உயிர் எழுத்தைப் பெற்ற சொல் வருமொழி உயிர் முதலோடு புணரும்போது 'ய்' அல்லது 'வ்' உடம்படு மெய்யாகத் தோன்றும்.**

ந. சூ.: இ ஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.

## 5. உயிர்முன் வல்லினம்

எடுத்து + காட்டு = எடுத்துக் காட்டு.

வர + செய்தான் = வரச் செய்தான்.

ஆட + தூண்டினான் = ஆடத் தூண்டினான்.

ஓடி + போ = ஓடிப்போ.

இவ்வெடுத்துக் காட்டுகளில் நிலைமொழிகள் வினை எச்சமாகும். நிலைமொழி ஈற்றில் 'உ, அ, இ' என்ற உயிர் எழுத்துக்கள் உள்ளன. வருமொழி முதலில் 'க், ச், த், ப்' என்ற வல்லின மெய்கள் உள்ளன. இவை புணரும்போது வருமொழி முதல் வல்லின மெய்கள் இரட்டித்துப் புணர்ந்தன.

நொச்சி + கிளை = நொச்சிக்கிளை.

பலா + சுளை = பலாச் சுளை.

வாழை + தண்டு = வாழைத்தண்டு.

களா + பழம் = களாப் பழம்.

இவ்வெடுத்துக் காட்டுகள் ஆறும் வேற்றுமைத் தொகை ஆகும். நிலைமொழி ஈற்றில் 'இ, ஆ, ஐ' என்ற உயிர் எழுத்துக்கள் உள்ளன. வருமொழி முதலில் 'க், ச், த், ப்' என்ற வல்லின மெய்கள் உள்ளன. இவை புணரும்போது வருமொழி முதல் வல்லின மெய்கள் இரட்டித்துப் புணர்ந்தன.

தீ + கடைகோல் = தீக்கடைகோல்.

தீ + சட்டி = தீச்சட்டி.

இவ் வெடுத்துக் காட்டுகள் இரண்டாம் வேற்றுமைத் தொகை ஆகும். நிலைமொழி ஈற்றில் 'ஈ' உள்ளது. வருமொழி முதலில் 'க், ச்' என்ற வல்லின மெய்

கள் உள்ளன. இவை புணரும்போது வருமொழி வல்லின மெய்கள் இரட்டித்துப் புணர்ந்தன.

மேலே கூறப்பெற்ற நிலைமொழிகளின் ஈற்று எழுத்துக்கள் இயல்பாக அமைந்த உயிரீறுகள் ஆகும்.

மரம் + கிளை = மர + கிளை = மரக்கிளை.

பழம் + சுவை = பழ + சுவை = பழச்சுவை.

இவற்றுள் 'மரம், பழம்' என்ற நிலைமொழிகளின் ஈற்றில் உள்ள 'ம்' இயல்பு மெய்யீருகும். இது 'கிளை, சுவை' என்ற வருமொழியோடு புணரும்போது கெட்டு விடுகிறது. அப்போது 'மர, பழ' என்று ஆகி 'அ' உயிரீருக விளங்குகின்றன. இவை விதி உயிரீருகும். விதி உயிரீருகிய 'அ' முன் 'க்' 'ச்' என்ற வல்லின மெய்கள் புணரும்போது அவ்வல்லின மெய்கள் இரட்டித்துப் புணர்ந்தன.

எடுத்த + பையன் = எடுத்த பையன்.

நடந்தன + குதிரைகள் = நடந்தன குதிரைகள்.

யானை + பெரியது = யானை பெரியது.

இராமனோடு + செல் = இராமனோடு செல்.

இவற்றுள் 'எடுத்த' என்பது பெயரெச்சமாகும். 'அ' என்ற உயிர் ஈறு வருமொழி முதலில் 'ப்' என்ற வல்லின மெய் வந்து இயல்பாகவே அமைந்தது. 'நடந்தன' என்பது வினைமுற்று. 'அ' என்ற உயிர் ஈறு வருமொழி முதலில் 'க்' என்ற வல்லினமெய் வந்து இயல்பாகவே அமைந்தது. 'யானை' என்பது எழுவாயாகும். 'ஐ' என்ற உயிர் ஈறு வருமொழி முதலில் 'ப்' என்ற வல்லின மெய் வந்து இயல்பாகவே அமைந்தது. 'இராமனோடு' என்பது மூன்ரும் வேற்றுமை விரியாகும். 'உ' என்ற உயிர் ஈறு வருமொழி முதலில் 'ச்' என்ற வல்லினமெய் வந்து இயல்பாகவே அமைந்தது.

மேலே காட்டிய எடுத்துக் காட்டுகளால் நிலைமொழிகளின் ஈற்றில் இயல்பாகவேனும், விதியாக

வேனும் நிற்கும் உயிர்களின் முன் வரும் வல்லினம் பெரும்பாலும் மிகும் என்பதும், சிறுபான்மை மிகா என்றும் உணரலாம்.

ந. சூ.: இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே.

## 6. குற்றியலுகரப் புணர்ச்சி

### குற்றியலுகரத்தின் முன் உயிர்

ஆடு + ஓடியது = ஆடோடியது.
எஃகு + எடுத்தான் = எஃகெடுத்தான்
வரகு + இல்லை = வரகில்லை.
பட்டு + ஆடை = பட்டாடை.
பஞ்சு + ஆடை = பஞ்சாடை.
மார்பு = அழகு = மார்பழகு.

ஆடு, எஃகு, வரகு, பட்டு, பஞ்சு, மார்பு இவைகள் முறையே நெடில், ஆய்தம், உயிர், வன்மை, மென்மை, இடைத் தொடர்க் குற்றியலுகரங்களாகும். இவற்றின் ஈற்றில் குற்றியலுகரம் உள்ளது. வரு மொழி முதலில் 'ஓ, எ, இ, ஆ, அ' என்ற உயிர் எழுத்துக்கள் உள்ளன. புணரும்போது நிலை மொழியீற்று உகரம் கெட 'ஆட், எஃக், வரக், பட்ட், பஞ்ச், மார்ப்' என ஆகி வருமொழி முதலில் உள்ள உயிர் எழுத்துக்கள் சேர, 'ஆடோடியது, எஃகெடுத்தான், வரகில்லை, பட்டாடை, பஞ்சாடை, மார்பழகு' என ஆயின.

#### நினைவிற் கொள்க

நிலைமொழி ஈற்றில் குற்றியலுகரம் இருந்து வருமொழி முதலில் உயிர்வந்து புணரும்போது, நிலைமொழி ஈற்று உகரம் கெட்டு, வருமொழி உயிர்முதல் அவ் வல்லின மெய்யுடன் சேர்ந்து ஒலிக்கும்.

நாடு + யாது = நாடியாது.

எஃகு + யாது = எஃகியாது.

வரகு + யாது = வரகியாது.

பட்டு + யாது = பட்டியாது.

பஞ்சு + யாது = பஞ்சியாது.

மார்பு + யாது = மார்பியாது.

நிலைமொழி ஆறும் அறுவகைக் குற்றியலுகரங்களாகும். நிலைமொழியீற்றில் 'உ' உள்ளது. வருமொழி முதலில் 'ய்' உள்ளது. புணரும்போது நிலைமொழி ஈற்று உகரம் இகரமாகத் திரிந்து 'நாடியாது, எஃகியாது, வரகியாது, பட்டியாது, பஞ்சியாது, மார்பியாது' என ஆயின.

**நினைவிற் கொள்க**

**நிலைமொழி ஈற்றில் குற்றியலுகரம் இருந்து வருமொழி முதலில் யகரம் வந்து புணரும்போது நிலைமொழி ஈற்று உகரம் இகரமாகத் திரியும்.**

நிலவு + அழகு = நிலவழகு.

கதவு + யாது = கதவியாது.

நிலவு, கதவு — இவை முற்றியலுகரம். 'நிலவு' என்ற நிலைமொழி ஈற்றிலுள்ள முற்றியலுகரம் வருமொழி முதலில் உள்ள 'அ' என்ற உயிர் வந்து புணரும்போது ஈற்று உகரம் கெட 'நிலவ்' என்று ஆகி, வருமொழி முதலோடு சேர்ந்து 'நிலவழகு' என்று ஆயிற்று.

'கதவு' என்ற நிலைமொழி ஈற்றிலுள்ள முற்றியலுகரம் வருமொழி முதலில் உள்ள 'ய்' என்ற மெய் வந்து புணரும்போது நிலைமொழி ஈற்றிலுள்ள முற்றியலுகரம் இகரமாகத் திரிந்து வருமொழி முதலோடு சேர்ந்து 'கதவியாது' என்று ஆயிற்று.

ந. சூ.: உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்

யவ்வரின் இய்யாம் முற்றுமற் றொரோவழி.

## குற்றியலுகரத்தின் முன் வல்லினம்

**வேற்றுமைப் புணர்ச்சி**

வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டோ, மறைந்தோ வர, சொற்கள் புணர்தல் வேற்றுமைப் புணர்ச்சியாகும்.

காட்டுக்கு + சென்றான் = காட்டுக்குச் சென்றான். (வே. விரி)

காடு + சென்றான் = காடு சென்றான். (வே. தொ.)

**அல்வழிப் புணர்ச்சி**

வேற்றுமை அல்லாத வழியில் சொற்கள் புணர்வது அல்வழிப் புணர்ச்சியாகும். வினைத்தொகை முதலிய ஐவகைத் தொகைகளும், எழுவாய்த் தொடர் முதலிய ஒன்பது தொகாநிலைத் தொடர்களும் இதன் கண் அடங்கும்.

சுக்கு + தூள் = சுக்குத்தூள் (வே. புணர்ச்சி)

சுக்கு + சிறிது = சுக்குச் சிறிது (அ. புணர்ச்சி)

சுக்கு—வன்றொடர்க் குற்றியலுகரம். இவற்றின் நிலைமொழி ஈற்றில் குற்றியலுகரம் நிற்க, வருமொழி முதலில் த், ச் என்ற வல்லின மெய் வர, வேற்றுமை அல்வழி இருவழியிலும் வருமொழி வல்லினம் மிகுந்தது.

**நினைவிற் கொள்க**

**நிலைமொழி ஈற்றில் வன்றொடர்க் குற்றியலுகரம் நிற்க, வருமொழி முதலில் வல்லின மெய்வரின் வேற்றுமை, அல்வழி ஆகிய இருவகைப் புணர்ச்சியிலும் வருமொழி வல்லினம் மிகும்.**

குரங்கு + தலை = குரங்குத் தலை (வே. புணர்ச்சி)

குரங்கு + சிறிது = குரங்கு சிறிது(அல்.புணர்ச்சி)

குரங்கு—மென்றொடர்க் குற்றியலுகரம். நிலைமொழி ஈற்றில் குற்றியலுகரம் நிற்க, வருமொழி

முதலில் 'த், ச்' வல்லினம் மெய் வர, வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் மிகுந்தும், அல்வழியில் இயல் பாகவும் வந்தன.

**நினைவிற் கொள்க**

**நிலைமொழி ஈற்றில் மென்றொடர்க் குற்றியலுகரம் நிற்க, வருமொழி முதலில் வல்லினமெய்வரின் வேற்றுமைப் புணர்ச்சி யில் மிகும்; அல்வழிப் புணர்ச்சியில் மிகாது.**

மாடு + பார் = மாடு பார். (நெடிற்றொடர்)

எஃகு + துடைத்தான் = எஃகு துடைத்தான். (ஆய்தத் தொடர்)

வரகு + கொண்டுவா = வரகு கொண்டுவா. (உயிர்த் தொடர்)

மார்பு + புண் = மார்பு புண் (இடைத்தொடர்)

இவை நான்கும் வேற்றுமைப் புணர்ச்சி.

ஆறு + தலை = ஆறு தலை. (நெடிற் றொடர்.)

எஃகு + சிறிது = எஃகு சிறிது. (ஆய்தத் தொடர்.)

விறகு + பெரிது = விறகு பெரிது. (உயிர்த் தொடர்.)

சால்பு + பெரிது = சால்பு பெரிது. (இடைத் தொடர்.)

இவை நான்கும் அல்வழிப் புணர்ச்சி.

நிலைமொழி ஈற்றில் நெடிற்றொடர், ஆய்தத் தொடர், உயிர்த்தொடர், இடைத்தொடர்க் குற்றிய லுகரம் நிற்க, வருமொழி முதலில், க், ச், த், ப் என்ற வல்லினமெய் வர வேற்றுமை, அல்வழி இருவகைப் புணர்ச்சியிலும் இயல்பாக வந்தன.

**நினைவிற் கொள்க**

**நிலைமொழி ஈற்றில் நெடிற்றொடர், ஆய்தத் தொடர், உயிர்த் தொடர், இடைத்தொடர்க் குற்றியலுகரங்களில் ஒன்று நிற்க,**

வருமொழி முதலில் வல்லினம் வரின், வேற்றுமை, அல்வழி ஆகிய இருவகைப் புணர்ச்சியிலும் இயல்பாகும்.

## ஒற்றிரட்டிக்கும் குற்றியலுகரப் புணர்ச்சி

ஆறு + பெருக்கு = ஆற்றுப் பெருக்கு.
ஆடு + கால் = ஆட்டுக் கால்.
கயிறு + கட்டில் = கயிற்றுக் கட்டில்.

நெடிற்றொடர், உயிர்த் தொடர்க் குற்றியலுகரங்களில் உள்ள றகர, டகரங்கள் இரட்டித்தபோது வல்லினம் மிக்கது.

## மென்றொடர்க் குற்றியலுகரத்திற்குச் சிறப்பு விதி

சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம்.
இரும்பு + பாதை = இருப்புப் பாதை.
குரங்கு + மனம் = குரக்குமனம்.
கரும்பு + வில் = கருப்பு வில்.

இவ் வெடுத்துக்காட்டுகளுள் 'சிலம்பு, இரும்பு, குரங்கு, கரும்பு' என்ற மென்றொடர்க் குற்றியலுகரங்கள், வன்றொடர்க் குற்றியலுகரங்களாகத் திரிந்து முன்பு சொல்லப் பெற்ற விதிகளின்படி புணர்ந்தன.

### பயிற்சி

(அ) புணர்ச்சி என்பது யாது? அஃது எத்துணை வகைப்படும்?

(ஆ) விகாரப்புணர்ச்சி எத்துணை வகைப்படும்?

(இ) உடம்படு மெய்கள் யாவை?

(ஈ) சேர்த்து எழுதுக:-
(*i*) பொன் + குழை (*ii*) பேச்சு + அழகு (*iii*) மா + காய் (*iv*) மரம் + வேர் (*v*) பல் + அழகு (*vi*) பனை + ஓலை (*vii*) பல + அணி (*viii*) பாட்டு + பாடினுள் (*ix*) பலா + பழம் (*x*) செய்தது + யார் (*xi*) முடிவு + யாது (*xii*) பட்டு + துணி (*xiii*) இரும்பு + சட்டி

(உ) பிரித்து எழுதுக:—
(*i*) பொற்றொடி (*ii*) சொல்லழகு (*iii*) சேற்றிடை (*iv*) குளக்கரை (*v*) கரையோரம் (*vi*) காலொடிந்து (*vii*) பலாவிலை (*viii*) நாடியாது (*ix*) இருப்புச்சட்டம்.

# V. யாப்பு

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (குறள்)

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த விருதலையும் எய்தும்
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்
தடுவது போலுந் துயர். (நாலடியார்)

இவைகளைச் செய்யுள் என்று கூறுகின்றோம்; பாட்டு என்றும் கூறுகின்றோம். 'செய்யுள், யாப்பு, பாட்டு, பா, கவி' என்பன ஒரே பொருளை உணர்த்தும் சொற்களாகும்.

யாப்பு—யாத்தல், கட்டுதல், தொழிற் பெயர். இங்கு யாக்கப்படும் (கட்டப்படும்) செய்யுளுக்குப் பெயர் ஆகிவருவதால், தொழிலாகு பெயர்.

நம் உடல் தோல், இரத்தம், தசை, நரம்பு, எலும்பு முதலிய பொருள்களால் (தாதுக்களால்) யாக்கப் பட்டு (கட்டப்பட்டு) உயிர் இருப்பதற்கு இடமாய் அமைந்துள்ளது. அதனால், உடலை 'யாக்கை' என்று கூறுகின்றோம். அதுபோல, செய்யுளும் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறு உறுப் புக்களாலும் யாக்கப்பட்டு, பொருளுக்கு இடமாக அழகு பெற அமைந்துள்ளது. அதனால், செய்யுளை 'யாப்பு' என்று கூறுகின்றோம்.

இவ்வாறு அமைந்த செய்யுட்கள் (அ) வெண்பா (ஆ) ஆசிரியப்பா (இ) கலிப்பா (ஈ) வஞ்சிப்பா என நான்கு வகைப்படும்.

**நினைவிற் கொள்க**

**எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற ஆறும் யாப்பின் (செய்யுளின்) உறுப்புக்கள் ஆகும்.**

## 1. எழுத்து

எழுத்திலக்கணத்தில் கூறப்பட்ட எழுத்துக்கள் இங்குக் குற்றெழுத்து, நெட்டெழுத்து, ஒற்றெழுத்து என முப்பிரிவுகளாக வகுக்கப்படும். இவை அசைகளை ஆக்குவதற்கு உறுப்பாக நிற்பனவாகும்.

## 2. அசை

### நேர் அசை

அ அல்

ஆ ஆல்

இவ் வெடுத்துக்காட்டுக்களில் 'அ' என்பது ஒரு குறில் தனித்தும், 'அல்' என்பது ஒரு குறில் ஒற்றடுத்தும், 'ஆ' என்பது ஒரு நெடில் தனித்தும், 'ஆல்' என்பது ஒரு நெடில் ஒற்றடுத்தும் வந்தன. இவை நேர் அசைகள் ஆகும்.

**நினைவிற் கொள்க**

**குற்றெழுத்து தனித்தேனும், நெட்டெழுத்து தனித்தேனும், இவை ஒற்றடுத்தேனும் வருவது நேர் அசையாகும்.**

### நிரை அசை

கர கரம்

படை படாம்

இவ் வெடுத்துக்காட்டுகளில் 'கர' என்பது இரு குறில்கள் இணைந்தும் (சேர்ந்தும்), 'கரம்'என்பது இரு குறில்கள் இணைந்து ஒற்றடுத்தும், 'படை' என்பது குறிலின்பின் நெடில் இணைந்தும், 'படாம்' என்பது குறிலின் பின் இணைந்த நெடில் ஒற்றடுத்தும் வந்தன. இவை நிரை அசைகள் ஆகும்.

### நினைவிற் கொள்க

**இரு குறில்கள் இணைந்தேனும், ஒரு குறில் பின்நெடில் இணைந்தேனும், இவை ஒற்றடுத்தேனும் வருவது நிரையசை யாகும்.**

குறிப்பு: (1) ஒரு குற்றெழுத்து மட்டும் சீரின் முதலிலும், இடையிலும் தனித்து நேர் அசையாக வராது. விட்டு இசைப்பின் நேர் அசையாகும்.

(2) இரு நெடில்கள் இணைந்தும், நெடிலும் குறிலும் இணைந்தும் நிரை அசை ஆகா.

(3) 'உரு' என்பது இரண்டு தனிக் குறில்களாகும். இதனை 'உ' என்று ஒரு நேர் அசையாகவும், 'ரு' என்று ஒரு நேர் அசையாகவும் பிரித்தல் கூடாது. 'உரு' என நிரை அசையாகக் கொள்ள வேண்டும்.

(4) 'வரகு' என்பதை 'வ' 'ரகு' எனப் பிரித்து நேர் நிரையசைகளாகக் கொள்ளக் கூடாது. 'வர' 'கு' எனப் பிரித்து நிரை நேர் அசைகளாகக் கொள்ள வேண்டும்.

(5) 'பார்த்தான்' என்பதை 'பார்த்' 'தான்' எனப் பிரித்து நேர் நேர் அசைகளாகக் கொள்ள வேண்டும். 'பயிர்ப்பு' என்பதை 'பயிர்ப்' 'பு' எனப் பிரித்து நிரை நேர் அசைகளாகக் கொள்ள வேண்டும்.

(6) நெடில் முதலில் நின்று நிரையசை யாகாது.

### நினைவிற் கொள்க

**எழுத்துக்கள் ஒன்றோ, பலவோ சேர்ந்து அசைத்து இசைக் கப் பட்டுச் சீர்க்கு உறுப்பாக அமைவது அசையாகும். அது நேர் அசை, நிரை அசை என இருவகைப்படும்.**

## 3. சீர்

ஓரசைச் சீர் இரண்டு.

(1) ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

(2) புண்ணுடையர் கல்லா தவர்.

இவை மும்மூன்று சீர்களால் ஆகிய அடிகளாகும். இவற்றுள் ஒழுக்கம் என்பதை 'ஒழுக்' 'கம்' என நிரைநேர் அசை எனப் பிரிக்க வேண்டும். இஃது ஈரசைகளால் ஆகிய சீர்; 'உடையார்வாய்ச்' என்பதை 'உடை' 'யார்' 'வாய்ச்' என நிரை நேர் நேர் எனப் பிரிக்க வேண்டும். இஃது மூன்று அசைகளால் ஆகிய சீர். சொல் என்பதை நேர் அசை எனக் கொள்ள வேண்டும். இஃது ஓர் அசைச் சீர். 'இது 'நாள்' என்ற வாய்பாட்டால் வழங்கப் பெறும்.

புண்ணுடையர் என்பதை 'புண்' 'ணுடை' 'யர்' என நேர் நிரை நேர் எனப்பிரித்து மூன்று அசைகளால் ஆகிய சீர் என்றும், கல்லா என்பதை 'கல்' 'லா' எனப் பிரித்து இரண்டு அசைகளால் ஆகிய 'சீர்' என்றும் கொள்ள வேண்டும். தவர் என்பதை நிரை எனக் கொள்ள வேண்டும். இஃது ஓர் அசைச் சீர். இது 'மலர்' என்ற வாய்பாட்டால் வழங்கப்பெறும்.

**நினைவிற் கொள்க**

**(1) அசையால் உண்டாவது சீர் ஆகும். இஃது ஓரசைச் சீர், ஈரசைச் சீர், மூவகைச் சீர், நாலசைச் சீர் என நான்கு வகைப்படும்.**

**(2) நேர் அசையேனும், நிரை அசையேனும் தனித்து வந்தால் அஃது ஓரசைச் சீர் ஆகும். இது தனிச்சீர் என்றும் கூறப்படும். ஆதலின், ஓரசைச் சீர் இரண்டு ஆகும்.**

குறிப்பு : ஓர் அசைச்சீர் பெரும்பாலும் வெண் பாவின் ஈற்றடியில் ஈற்றுச் சீராகவே அமையும்.

**ஈரசைச்சீர்கள் நான்கு :**

**(1)** ஒல், லும் — நேர், நேர் — தே மா.

**(2)** வகை, யான் — நிரை, நேர் — புளி மா.

**(3)** ஊர், திரை — நேர், நிரை — கூவிளம்.

**(4)** உதைத், தது — நிரை, நிரை — கருவிளம்.

'ஒல்லும்' என்பது நேர் நேர் என இரு அசைகளால் ஆனது. 'வகையால்' என்பது நிரை நேர் என இரு அசைகளால் ஆனது. 'ஊர் திரை' என்பது நேர் நிரை என இரு அசைகளால் ஆனது. 'உதைத்தது' என்பது நிரை நிரை என இரு அசைகளால் ஆனது. இவை நான்கும் ஈரசைச் சீர்கள் ஆகும்.

நினைவிற் கொள்க

இரண்டு அசைகள் சேர்ந்து ஒரு சீராய் நிற்பது ஈரசைச் சீர் ஆகும். நேரசை, நிரையசைகளை இரண்டு இரண்டாகச் சேர்த்தால் நான்கு ஈரசைச்சீர்கள் வரும். அவை, நேர் நேர், நிரை நேர், நேர் நிரை, நிரை நிரை என்பனவாம்.

காக், கை—நேர் நேர்—தேமா
கர, வா—நிரைநேர்—புளிமா
} மாச்சீர்

நினைவிற் கொள்க

ஈரசைச் சீர்களில் நேர் அசையை ஈற்றிலே உடைய சீர்கள் இரண்டும் மாச்சீர் ஆகும். இவ்விரண்டும் 'மா' என்று முடிவதால் மாச்சீர் எனப் பெயர்பெற்றன.

கண், ணகி—நேர் நிரை—கூவிளம்
கத, றிளுள்—நிரை நிரை—கருவிளம்
} விளச்சீர்

நினைவிற் கொள்க

ஈரசைச் சீர்களில் நிரை அசையை ஈற்றிலே உடைய சீர்கள் இரண்டும் விளச்சீர் ஆகும். இவ்விரண்டும் 'விளம்' என்று முடிவதால் விளச்சீர் எனப் பெயர்பெற்றன.

நினைவிற் கொள்க

ஈரசைச் சீர்கள் நான்கும் ஆசிரியப்பா என்ற செய்யுட்கு உரிய சீர்களாகும். ஆதலால், இவை ஆசிரிய உரிச்சீர், அகவற்சீர், இயற்சீர் எனவும் கூறப்பெறும்.

மூவசைச் சீர்கள் எட்டு :

காய்ச்சீர் 4

நன், றன், று—நேர் நேர் நேர்—தேமாங்காய்
சமன், செய், து — —நிரை நேர் நேர்—புளிமாங்காய்
இவ், விரண், டும்—நேர் நிரை நேர்—கூவிளங்காய்
துணி, வுடை, மை—நிரை நிரை நேர்—கருவிளங்காய்

'நன்றன்று' என்பது நேர் நேர் நேர் என மூன்று அசைகளால் ஆனது. 'சமன் செய்து' நிரை நேர் நேர் என மூன்று அசைகளால் ஆனது. 'இவ்விரண்டும்' நேர் நிரை நேர் என மூன்று அசைகளால் ஆனது. 'துணிவுடைமை' நிரை நிரை நேர் என மூன்று அசைகளால் ஆனது. இவை நான்கும் மூவசைச் சீர்கள் ஆகும்.

நினைவிற் கொள்க

மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீராய் நிற்பது மூவசைச் சீர் ஆகும்.

மூவசைச் சீர் எட்டு ஆகும். மூவசைச் சீரில் 'நேர்' அசையை ஈற்றிலே உடைய சீர்கள் நான்கும் காய்ச்சீர் ஆகும். இவை நான்கும் 'காய்' என்று முடிவதால் காய்ச்சீர் எனப்பெயர் பெற்றன. இச்சீர்கள் வெண்பாவுக்குரிய சீர்களாகும். ஆதலின், வெண்பா உரிச்சீர், வெண்சீர் எனவும் கூறப்பெறும்.

கனிச்சீர் 4

பொன், ஞூர், முடி —நேர் நேர் நிரை—தேமாங்கனி
அர, சன், மனை—நிரை நேர் நிரை—புளிமாங்கனி
மன், னுல, கினை—நேர் நிரை நிரை—கூவிளம் கனி
நரை, முது, புலி—நிரை நிரை நிரை—கருவிளம் கனி

'பொன்ஞூர் முடி' என்பது நேர் நேர் நிரை என மூன்று அசைகளால் ஆனது. 'அரசன்மனை' என்பது

நிரை நேர் நிரை என மூன்று அசைகளால் ஆனது. 'மன்னுலகினை' என்பது நேர் நிரை நிரை என மூன்று அசைகளால் ஆனது. 'நரைமுதுபுலி' என்பது நிரை நிரை நிரை என மூன்று அசைகளால் ஆனது. இவை நான்கும் மூவகைச் சீர்கள் ஆகும்.

### நினைவிற் கொள்க

மூவசைச் சீரில் 'நிரை' அசையை ஈற்றிலே உடைய சீர்கள் நான்கும் கனிச்சீர் ஆகும். இவை நான்கும் 'கனி' என்று முடிவதால் கனிச்சீர் எனப் பெயர் பெற்றன. இச்சீர்கள் வஞ்சிப்பாவுக்குரிய சீர்களாகும். ஆதலின், வஞ்சியுரிச்சீர், வஞ்சிச்சீர் எனவும் கூறப்பெறும்.

### நாலசைச் சீர்

மூவசைச் சீர் எட்டினோடும் நேரசையையும், நிரையசையையும் தனித்தனியே சேர்த்திட 'நேர்' 'ஈற்று' நாலசைச் சீர் எட்டும், 'நிரை' ஈற்று நாலசைச் சீர் எட்டும் ஆகப் பதினாறு நாலசைச் சீர்கள் தோன்றும்.

நாலசைச் சீர்கள் செய்யுளில் சிறுபான்மைதான் பயின்று வரும். இவை பொதுச் சீர் என்று பெயர் பெறும்.

### பயிற்சி

(அ) செய்யுளை யாப்பு என்று ஏன் அழைக்கின்றோம்?

(ஆ) செய்யுள் எத்துணை வகைப்படும்? அவை யாவை?

(இ) செய்யுள் உறுப்புகள் யாவை?

(ஈ) நேரசை, நிரையசை—இவற்றை எடுத்துக்காட்டுகள் கொண்டு விளக்குக.

(உ) மாச்சீர், விளச்சீர்—இவற்றை விளக்கி எழுதுக.

(ஊ) மூவசைச்சீர் எத்துணை வகைப்படும்? அவை யாவை?

(எ) பின்வரும் செய்யுளை அலகிட்டு வாய்பாடு கூறுக.

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்குவது.

# VI. அணி இலக்கணம்

அணி - அழகு. மக்கள் பலவகை அணிகளை அணிந்து அழகுடன் திகழ்வர். அதுபோலச் சில செய்யுள் சொல்லால் அழகுபெற்றுத் திகழும். அதனைச் சொல்லணி என்பர். சில செய்யுள் பொருளால் அழகு பெற்றுத் திகழும். அதனைப் பொருளணி என்பர்.

நினைவிற் கொள்க

செய்யுட்கு அழகு தருவது அணியாகும். அது சொல்லணி, பொருளணி என்று இருவகைப்படும். சொல் பற்றிய அணி சொல்லணியாகும். சொல்லணி திரிபு, மடக்கு முதலாகப் பலவகைப்படும். பொருள்பற்றிய அணி பொருளணியாகும். பொருளணி தன்மை, உவமை, உருவகம் முதலாகப் பலவகைப் படும்.

## (1) இயல்பு நவிற்சி யணி

**(தன்மை நவிற்சி யணி)**

*தாய் இரை தின்ற பின்பு தன்குஞ்சைக்*
*கூட்டிற் கண்டு*
*வாயினைத் திறக்கும்; குஞ்சு தாய் வாய்க்குள்*
*வைக்கும் மூக்கை*
*தாயருந் தியதைக் கக்கித் தன் குஞ்சின்*
*குடல் நிரப்பும்;*
*ஓய்ந்ததும் தந்தை ஊட்டும்; அன்புக்கோர்*
*எடுத்துக் காட்டாம்.*

இச்செய்யுளில் 'தாய்ப் புறா உணவு உண்ட பின்பு தன் குஞ்சைக் கூட்டில் கண்டு வாயைத் திறக்கும்; குஞ்சு தாய்ப் பறவையின் வாய்க்குள் தன் மூக்கை வைக்கும்; தாய்ப் பறவை தான் உண்ட உணவைக் கக்கிக் குஞ்சின் வயிற்றை நிரப்பும்; தாய்ப் பறவை இவ்வாறு உணவூட்டி ஓய்ந்ததும் தந்தைப்

பறவை அவ்வாறு செய்து குஞ்சின் குடல் நிரப்பும். பெற்றோரின் அன்பிற்கு எடுத்துக்காட்டாகும்'' என்று கூறப்பட்டுள்ளது. இவை தாய்ப்புறு, தந்தைப் புறுக்களின் செயலை உள்ளது உள்ளபடி அழகுபடக் கூறுதலின் இச்செய்யுள் இயல்பு நவிற்சி யணியாகும்.

**நினைவிற் கொள்க**

**ஒன்றனது இயல்பை உள்ளவாறு அழகுபடச் சிறப்பித்துக் கூறுவது இயல்பு நவிற்சி யணியாகும். இது தன்மை நவிற்சி யணி என்றும் கூறப்படும். [இயல்பு - தன்மை; நவிற்சி - சொல்லல்.]**

## (2) உயர்வு நவிற்சி யணி

ஆலைவாய்க் கரும்பின் தேனும்
அரிதலைப் பாளைத் தேனும்
சோலைவாய்க் கனியின் தேனும்
தொடையிழி யிறாலின் தேனும்
மாலைவாய் உகுத்த தேனும்
வரம்பிகந் தோடி வங்க
வேலைவாய் மடுப்ப வுண்டு
மீனெலாங் களிக்கு மாதோ.

இச் செய்யுளில் "ஆலையிலுள்ள கரும்பின் துதேனும், அரியப் பெற்ற பாளையது தேனும், சோலையிலுள்ள பழங்களின் தேனும், தேனடையிலிருந்து வீழ்ந்த தேனும், மலர்மாலை வெளிப்படுத்திய தேனும் அளவிறந்து ஓடி வங்கக் கடலை அடைய, அங்குள்ள மீன்கள் தேனுண்டு களிக்கும்'' என்று கூறப்பட்டுள்ளது. இவை, நாட்டினது நீர் வளத்தையும், நிலவளத்தையும் மிகவும் உயர்த்தி அழகுபடக் கூறுதலின், இச்செய்யுள் உயர்வு நவிற்சி யணியாகும்.

**நினைவிற் கொள்க**

**ஒரு பொருளை அதன் தன்மையினும் உயர்த்திக் கூறுவது உயர்வு நவிற்சி யணியாகும்.**

## (3) உவமை யணி

**பால் போன்ற இன்சொல்.**

இது "பால் போன்ற இனிய சொல்" என்று பொருள் தருகிறது.

இத்தொடரில் 'பால்' என்ற பொருளுக்கும், 'சொல்' என்ற பொருளுக்கும் உள்ள ஒப்புமை கூறப்பட்டுள்ளது.

பால் - உவமானம்; சொல் - உவமேயம்; போன்ற - உவமை உருபு; இனிமை - பொதுத்தன்மை.

இவ்வெடுத்துக்காட்டு உவமானம், உவமேயம், உவமை உருபு, பொதுத்தன்மை ஆகிய நான்கு உறுப்புக்களும் பெற்று வந்தது.

**மதி போன்ற முகம்.**

இது "மதிபோன்ற வட்டமான முகம்" என்று பொருள் தருகிறது. மதி - உவமானம்; முகம் - உவமேயம்; போன்ற - உவமை உருபு. 'வட்டம்' என்ற பொதுத்தன்மை மறைந்து வந்தது.

**பவளச் செவ்வாய்.**

இது "பவளம் போன்ற சிவந்த வாய்" என்று பொருள் தருகிறது. பவளம் - உவமானம்; வாய் - உவமேயம்; செம்மை - பொதுத் தன்மை. 'போன்ற' என்ற உவமை உருபு மறைந்து வந்தது.

**தாமரை முகம்.**

இது "தாமரை போன்ற அழகிய முகம்" என்று பொருள் தருகிறது. தாமரை - உவமானம்; முகம் - உவமேயம். 'போன்ற' என்ற உவமை உருபும், 'அழகு' என்ற பொதுத் தன்மையும் மறைந்து வந்தன.

### நினைவிற் கொள்க

**ஒரு பொருளோடு மற்றொரு பொருளுக்குள்ள ஒப்புமை தோன்றக் கூறுவது உவமை யணியாகும். இவ் வணிக்கு உவ**

மானம், உவமேயம், உவமை உருபு, பொதுத்தன்மை என்ற நான்கு உறுப்புக்கள் உண்டு. இந் நான்கு உறுப்புக்களையும் பெற்று வருவது விரியுவமை எனப்படும். இந்நான்கு உறுப்பி னுள் முன் இரண்டோடு பின் இரண்டில் ஒன்றோ, இரண்டோ மறைந்து வருதலும் உண்டு. அது தொகையுவமை எனப்படும்.

குறிப்பு : உதாரணமாக எடுத்துக் கூறும் பொருள் உவமானம் ஆகும். இது 'உவமை' என்றும் கூறப்படும். சொல்லக் கருதிய பொருள் உவமேயம் ஆகும். இது 'பொருள்' என்றும் கூறப்படும்.

## (4) உருவக அணி

பாத மலர்.

இது "பாதம் ஆகிய மலர்" என்று பொருள் தரு கிறது. இதில் 'மலர்' என்ற உவமானத்தின் தன்மை 'பாதம்' என்ற உவமேயத்தின் மீது ஏற்றிக் கூறப்பட் டுள்ளது. மலர் - உவமானம்; பாதம் - உவமேயம். இரண்டிற்கும் இடையில் 'ஆகிய' என்ற பண்புருபு மறைந்து வந்தது. இவ்வாறு வருவது தொகை உருவகம் ஆகும்.

பல் ஆகிய முத்து.

இதில் 'முத்து' என்ற உவமானத்தின் தன்மை 'பல்' என்ற உவமேயத்தின் மீது ஏற்றிக் கூறப்பட் டுள்ளது. முத்து - உவமானம்; பல் - உவமேயம். இரண்டிற்கும் இடையில் 'ஆகிய' என்ற பண்புருபு வெளிப்பட்டு வந்தது. இவ்வாறு வருவது விரி உரு வகம் ஆகும்.

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்
லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா — வேற்படையும்
வாளுமே கண்ணு வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.

இச்செய்யுளில் "பெண்களுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நாற்குணத்தையும், தேர்,

யானை, குதிரை, காலாள் என்ற நாற்படையாகவும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளை அமைச்சராகவும், சிலம்பை முரசாகவும், கண்களை வேற்படையாகவும் வாட்படையாகவும், முகத்தைக் குடையாகவும், பெண்மையை அரசாகவும் கொண்டு தமயந்தி ஆட்சி செய்கிருள்'' என்று கூறப்பட்டுள்ளது. இதில் நாற்குணம் நாற்படையாகவும், ஐம்புலன் அமைச்சராகவும், சிலம்பு முரசாகவும், கண் வேற்படை வாட்படையாகவும், வதனம் குடையாகவும், பெண்மை அரசாகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளமையால், இச்செய்யுள் உருவக அணியாகும்.

### நினைவிற் கொள்க

உவமானத்தையும் உவமேயத்தையும் வெவ்வேருகக் கூருமல் உவமானத்தின் தன்மையை உவமேயத்தினிடம் ஏற்றிக் கூறுவது உருவக அணியாகும். இவ்வணியில் உவமேயத்திற்கும் உவமானத்திற்கும் இடையில் 'ஆகிய, என்னும்' முதலான சொற்கள் உருபாக மறைந்தேனும் வெளிப்பட்டேனும் வரும். இருபெயரொட்டாகவும் வரும்.

## உவமை யணிக்கும் உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு

| உவமை யணி | உருவக அணி |
|---|---|
| 1. உவமானம் முன்பும் உவமேயம் பின்பும் இருக்கும் | 1. உவமேயம் முன்பும் உவமானம் பின்பும் இருக்கும். |
| 2. உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் இடையில் 'போல' முதலிய உவமை உருபுகள் மறைந்தேனும் வெளிப்பட்டேனும் நிற்கும். | 2. உவமேயத்திற்கும் உவமானத்திற்கும் இடையில் 'ஆகிய, என்னும், என்ற' உருபுகள் மறைந்தேனும், வெளிப்பட்டேனும் நிற்கும். |

குறிப்பு : உவமையை மாற்றிப் போட்டால் உருவகமாக அமையும்.

மதிமுகம் - உவமை.

முகமதி - உருவகம்.

பயிற்சி

(அ) அணியாவது யாது? அஃது எத்துணை வகைப்படும்?

(ஆ) இயல்பு நவிற்சி அணியின் இலக்கணத்தை எழுதுக.

(இ) உயர்வு நவிற்சி அணியை ஓர் எடுத்துக்காட்டுத் தந்து விளக்கி எழுதுக.

(ஈ) உவமையணியில் அமைந்த உறுப்புகள் யாவை?

(உ) உருவக அணியின் இலக்கணம் யாது?

(ஊ) உவமையணிக்கும் உருவக அணிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

# VII. மொழிப் பயிற்சி

## 1. வாக்கியம்—பொது இலக்கணம்

நாம் பேசும்போதும், எழுதும்போதும் கருத்து முற்றுப் பெறும்படி சொற்களைத் தொடராக அமைத்துப் பேசுகின்றோம்; எழுதுகின்றோம். இதனை முற்றுச் சொற்றொடர் அல்லது வாக்கியம் என்பர்.

### (அ) தனி வாக்கியம்

(1) நக்கீரன் திருமுருகாற்றுப்படை பாடினன்.

(2) கௌந்தியடிகள் மதுரையில் மாதரியிடம் கோவலன் கண்ணகியை அடைக்கலமாகத் தந்தார்.

இவ்வெடுத்துக்காட்டுகளுள் 'நக்கீரன்' என்ற ஓர் எழுவாய் 'பாடினன்' என்ற ஒரு பயனிலையையும், 'கௌந்தியடிகள்' என்ற ஓர் எழுவாய் 'தந்தார்' என்ற ஒரு பயனிலையையும் கொண்டு முடிந்தன.

நினைவிற் கொள்க

ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிவது தனி வாக்கியம் ஆகும்.

## (ஆ) தொடர் வாக்கியம்

இராமன் கோசலை இருப்பிடம் சென்றான்; அவளை வணங்கினான்; தந்தை இட்ட கட்டளையைக் கூறினான்.

இவ் வெடுத்துக் காட்டில் 'இராமன்' என்ற ஓர் எழுவாய், 'சென்றான், வணங்கினான், கூறினான்' என்ற மூன்று பயனிலைகளைக் கொண்டு முடிந்தது. இம் மூன்று தனி வாக்கியங்களும் 'இராமன் கோசலை இருப்பிடம் சென்று, அவளை வணங்கி, தந்தை இட்ட கட்டளையைக் கூறினான்' என ஒரே சொற்றொடர்க்குரிய பொருளைத் தந்தன. ஆதலின், தொடர் வாக்கியம்.

கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் சென்றனர்.

இவ் வெடுத்துக் காட்டில் 'கோவலன், கண்ணகி' என்ற இரண்டு எழுவாய்கள் 'சென்றனர்' என்ற ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்தன. ஆதலின், தொடர்நிலை வாக்கியம்.

நினைவிற் கொள்க

ஓர் எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டும், பல எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டும் முடியும் வாக்கியம் தொடர் வாக்கியம் ஆகும்.

## (இ) கலவை வாக்கியம்

அன்னை மகனை அழைத்து 'நீ பள்ளிக்கூடம் செல்' என்று கூறினாள்.

இவ் வெடுத்துக்காட்டில், 'அன்னை மகனை அழைத்துக் கூறினாள்' என்பது முதல் (தனி) வாக்கியம். 'நீ பள்ளிக்கூடம் செல்' என்பது துணை வாக்கியம். ஒரு தனி வாக்கியம் அதனுடன் பொருள் தொடர்புடைய துணை வாக்கியத்தோடு அமைந்ததால் கலவை வாக்கியம் ஆயிற்று.

**செங்குட்டுவன் கனகவிசயரை வென்று, அவர் தலையில் கல் ஏற்றி, வஞ்சிநகர் வந்து, கோயில் கட்டினுன்.**

இதில் செங்குட்டுவன் என்ற எழுவாய் 'வென்று, ஏற்றி, வந்து' என்ற எச்சத் தொடர்களைப் பெற்று 'கட்டினுன்'என்ற பயனிலையைக் கொண்டு முடிந்தது. 'செங்குட்டுவன் கோயில் கட்டினுன்' என்பது தனி வாக்கியம். ஒரு தனி வாக்கியம் எச்சச் சொற்றொடர்களைக் கொண்டு முடிந்ததால், இது கலவை வாக்கியம்.

**செழியன் வீட்டிற்குக் காலந் தாழ்த்தி வர, தந்தை கால தாமதம் ஏன்? என்று கேட்க, "நான் இனிமேல் காலந் தாழ்த்தி வரமாட்டேன்; மன்னித்தருள்க" என்று வேண்டினுன்.**

இவ்வெடுத்துக் காட்டில் 'செழியன் வேண்டினுன்' என்ற முதன்மை வாக்கியமும், 'செழியன் . . வர, தந்தை . . கேட்க' என்ற எச்சச் சொற்றொடர்களும், 'நான் . . வரமாட்டேன்' என்ற தனி வாக்கியமும் கலந்து முடிந்ததால், இது கலவை வாக்கியம்.

**நினைவிற் கொள்க**

**ஒரு தனி வாக்கியம் அதனுடன் பொருள் தொடர்புடைய, ஒன்றும் பலவுமாகிய துணை வாக்கியங்களோடு முடிவதும், எச்சத் தொடர்களைக் கொண்டு முடிவதும் கலவை வாக்கியம் ஆகும்.**

## 2. வாக்கியப் பொருத்தம்

எந்த வாக்கியம் எழுதினும் எழுவாய் அதன் பயனிலையோடு திணை, பால், எண், இடங்களில் பொருத்தமாக அமையும்படி எழுதவேண்டும்.

### (அ) திணைப் பொருத்தம்

தமயந்தி வந்தாள்.

இதில் தமயந்தி—எழுவாய், உயர்திணை. வந்தாள்-பயனிலை, உயர்திணை. எனவே, எழுவாய் உயர்திணையில் அமைந்தமையால், பயனிலையும் உயர்திணையில் அமைந்தது.

குதிரை வேகமாக ஓடியது.

இதில் குதிரை — எழுவாய், அஃறிணை. ஓடியது— பயனிலை, அஃறிணை. எனவே, எழுவாய்அஃறிணையில் அமைந்தமையால், பயனிலையும் அஃறிணையில் அமைந்தது.

**நினைவிற் கொள்க**

**எழுவாய் எத்திணையில் அமைந்துள்ளதோ அதே திணையில் பயனிலை அமைவது திணைப் பொருத்தமாகும்.**

## (ஆ) பால் பொருத்தம்

அரிச்சந்திரன் உண்மை பேசினான்.

இதில் அரிச்சந்திரன்—எழுவாய், ஆண்பால். பேசினான்—பயனிலை, ஆண்பால். எனவே, எழுவாய் ஆண்பாலில் அமைந்தமையால், பயனிலையும் ஆண் பாலில் அமைந்தது.

சந்திரமதி மகனுடல் கண்டு வருந்தினாள்.

இதில் சந்திரமதி—எழுவாய், பெண்பால். வருந் தினாள்—பயனிலை, பெண்பால்.

வீரர்கள் பகைவரை வென்றனர்.

இதில் வீரர்கள்—எழுவாய், பலர்பால். வென்ற னர்—பயனிலை, பலர்பால்.

மாடு புல் மேய்ந்தது.

இதில் மாடு— எழுவாய், ஒன்றன்பால். மேய்ந் தது—பயனிலை, ஒன்றன்பால்.

மாடுகள் மேய்ந்தன.

இதில் மாடுகள்—எழுவாய், பலவின்பால். மேய்ந் தன —பயனிலை, பலவின்பால்.

**நினைவிற் கொள்க**

**எழுவாய் எந்தப் பாலில் அமைந்துள்ளதோ அதே பாலில் பயனிலை அமைவது பால் பொருத்தமாகும்.**

### (இ) எண் பொருத்தம்

வேலன் வென்றான்.

இதில் வேலன்—எழுவாய், ஒருமை எண். வென்றான்—பயனிலை, ஒருமை எண். எனவே, எழுவாய் ஒருமை எண் ஆக அமைந்தமையால், பயனிலையும் ஒருமை எண்ணில் அமைந்தது.

மரங்கள் வீழ்ந்தன.

இதில் மரங்கள்—எழுவாய், பன்மை எண். வீழ்ந்தன—பயனிலை, பன்மை எண். எனவே, எழுவாய் பன்மை எண் ஆக அமைந்தமையால் பயனிலையும் பன்மை எண்ணில் அமைந்தது.

நினைவிற் கொள்க

**எழுவாய் எந்த எண்ணில் அமைந்துள்ளதோ அதே எண்ணில் பயனிலை அமைவது எண் பொருத்தமாகும்.**

### (ஈ) இடப் பொருத்தம்

நான் படித்தேன்.

இதில் நான்—எழுவாய், தன்மை இடம். படித்தேன்—பயனிலை, தன்மை இடம். எனவே, எழுவாய் தன்மை இடமாக அமைந்தமையால் பயனிலையும் தன்மை இடத்தில் அமைந்தது.

நீ படித்தாய்.

இதில் நீ—எழுவாய், முன்னிலை இடம். படித்தாய்—பயனிலை, முன்னிலை இடம். எனவே, எழுவாய் முன்னிலை இடமாக அமைந்தமையால் பயனிலையும் முன்னிலை இடத்தில் அமைந்தது.

அவன் சென்றான்.

இதில் அவன்—எழுவாய், படர்க்கை இடம். சென்றான்-பயனிலை, படர்க்கை இடம். எனவே, எழுவாய் படர்க்கை இடமாக அமைந்தமையால் பயனிலையும் படர்க்கை இடத்தில் அமைந்தது.

நினைவிற் கொள்க

எழுவாய் எந்த இடத்தில் அமைந்துள்ளதோ அதே இடத்தில் பயனிலை அமைவது இடப் பொருத்தமாகும். எடுத்துக் காட்டுகளில் பால், எண், இடப் பொருத்தங்கள் அமைந்துள்ள மையைக் காண்க.

(1) பாலன் படித்தான். (2) அவன் படித்தான்.
(3) செல்வி படித்தாள். (4) அவள் படித்தாள்.
(5) பையன்கள் படித்தனர். (6) அவர்கள் படித்தனர்.
(7) முயல் ஓடியது. (8) அது ஓடியது.
(9) முயல்கள் ஓடின. (10) அவை ஓடின.
(11) நான் படித்தேன். (12) நாங்கள் படித்தோம்.
(13) நீ படித்தாய். (14) நீங்கள் படித்தீர்.

| எழுவாய்கள் | பயனிலை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|
| 1, 2 பாலன், அவன் | படித்தான் | ஆண் | ஒருமை | படர்க்கை |
| 3, 4 செல்வி, அவள் | படித்தாள் | பெண் | ,, | ,, |
| 5, 6 பையன்கள் அவர்கள் | படித்தனர் | பலர் | பன்மை | ,, |
| 7, 8 முயல், அது | ஓடியது | ஒன்றன் | ஒருமை | ,, |
| 9, 10 முயல்கள், அவை | ஓடின | பலவின் | பன்மை | ,, |
| 11. நான் | படித்தேன் | — | ஒருமை | தன்மை |
| 12. நாங்கள் | படித்தோம் | — | பன்மை | ,, |
| 13. நீ | படித்தாய் | — | ஒருமை | முன்னிலை |
| 14. நீங்கள் | படித்தீர் | — | பன்மை | ,, |

## (உ) மரியாதைப் பொருத்தம்

(1) அரசர் வந்தனர். (2) அரசி வந்தார்.
(3) ஆசிரியர் வந்தனர். (4) அன்னை வந்தார்.
(5) தந்தை வந்தனர். (6) ஒருவர் வந்தார்.
(7) அவர் வந்தனர். (8) கபிலர் வந்தார்.

இவற்றில் உள்ள எழுவாய்கள் ஒவ்வொன்றும் ஒருமை எண் ஆகும். ஆயினும், உயர்வு கருதி 'அர்,

ஆர்' என்ற பலர்பால் விகுதிகளையுடைய பயனிலே அமைத்து வழங்குகின்றோம். இவ்வாறு வழங்குவது மரியாதைப் பன்மையாகும்.

அரசர்கள் ஆண்டார்கள்.

அவர்கள் உண்டார்கள்.

இவ்வெடுத்துக் காட்டுகளுள் 'அரசர் ஆண்டார், அவர் உண்டார்' என்பனவே பன்மையைக் குறிக்கப் போதுமானவையாகும். ஆயினும், மரியாதை கருதி ஒருமை, பன்மையாக வருவதினின்றும் வேறுபடுத்திக் காட்டி, இவை பன்மையே எனத் தெளிவு படுத்த 'அர், ஆர்' என்ற பலர்பால் விகுதியோடு 'கள்' என்ற மற்ரெரு விகுதியும் சேர்த்து வழங்குவது வழக்கம்.

## 3. பெருவழக்காய் வரும் எழுத்துப் பிழைகளும் திருத்தமும்

ண, ன, ல, ழ, ள, ர, ற — இவ்வெழுத்துக்களை சரியாக உச்சரித்துப் பழகாமையால் தவருகவே எழுத நேர்கிறது. தவருக எழுதுவதால் பொருளும் வேறுபட்டு விடுகிறது. ஆகையால், திருத்தமாக உச்சரித்து எழுதப் பழக வேண்டும். அவற்றிற்குக் கீழ்வருவன ஓரளவு துணை புரியும்.

**ன, ண வேறுபாடு அறியாமல் நிகழும் பிழையும் திருத்தமும்**

| பிழை | திருத்தம் |
|---|---|
| கேனி | கேணி |
| நன்பன் | நண்பன் |
| காரனம் | காரணம் |
| தொன்னூறு | தொண்ணூறு |
| தன்டனே | தண்டனே |
| தலேயனே | தலேயணே |
| அனேக்கட்டு | அணேக்கட்டு |
| கன்னகி | கண்ணகி |

| பிழை | திருத்தம் |
| --- | --- |
| கனையாழி | கணையாழி |
| கருனை | கருணை |
| மூண்று | மூன்று |
| கற்பஞசக்தி | கற்பஞசக்தி |
| திண்ருன் | தின்ருன் |
| நண்ஞள் | நன்ஞள் |
| நண்று | நன்று |
| பண்ணிரண்டு | பன்னிரண்டு |
| ஒண்று | ஒன்று |
| தோண்றி | தோன்றி |
| விற்பாண் | விற்பான் |
| கொண்ருன் | கொன்ருன் |

| ந | ன |
| --- | --- |
| அந்நாள்-அந்த நாள் | அன்ஞள்-அத்தன்மையள் |
| இந்நிலம்-இந்த நிலம் | இன்னிலம்-இனிய நிலம் |
| எந்நாடு-எந்த நாடு | என்ஞடு-எனது நாடு |
| நந்நாள்-நமது நாள் | நன்ஞள்-நல்ல நாள் |
| முந்நாள்-மூன்று நாள் | முன்ஞள்-முந்திய நாள் |
| முந்நூறு-மூன்று நூறு | முன்னூறு-முன்பு நூறு |

| ன | ண |
| --- | --- |
| அரன் - சிவன் | அரண் - கோட்டை |
| ஆனி - ஒரு மாதம் | ஆணி - ஒரு கருவி |
| ஆனே - யானே | ஆணே - கட்டளே |
| ஆன் - பசு | ஆண் - ஆடவன் |
| உன்னல் - நினேத்தல் | உண்ணல் - சாப்பிடல் |
| ஊன் - புலால் | ஊண் - உணவு |
| கனி - பழம் | கணி - சோதிடம் |

| ன | ண |
|---|---|
| கானம் - காடு | காணம் - கொள் |
| கானல்-கடற்கரை,வெப்பம் | காணல் - பார்த்தல் |
| கான் - காடு | காண் - பார் |
| தினை - ஒரு தானியம் | திணை - குலம், ஒழுக்கம் |
| துனை - விரைவு | துணை - உதவி |
| நனி - மிகுதி, நன்கு | நணி - நெருங்கி |
| நான் - பேசுவோன் (தன்மை ஒருமை) | நாண் - கயிறு |
| பனி - குளிர்ச்சி | பணி - வேலை, வணங்கு |
| பனை - ஒரு மரம் | பணை - வயல், பருத்தல் |
| பானம் - குடி | பாணம் - அம்பு |
| புனை - அலங்கரி | புணை - தெப்பம் |
| மனம் - உள்ளம் | மணம் - வாசனை, திருமணம் |
| மனை - வீடு | மணை - அமரும் பலகை |

## ல, ள, ழ வேறுபாடு அறியாமல் நிகழும் பிழையும் திருத்தமும்

| பிழை | திருத்தம் |
|---|---|
| தளைவளி | தலைவலி |
| சோளை | சோலை |
| பொன் களம் | பொன் கலம் |
| நற்காளம் | நற்காலம் |
| தாளாட்டு | தாலாட்டு |
| பள் துளக்கினேன் | பல் துலக்கினேன் |

| பிழை | திருத்தம் |
|---|---|
| கொளை செய்தான் | கொலை செய்தான் |
| வாளைப் பளம்<br>வாலைப் பலம் | வாழைப் பழம் |
| தமிள்<br>தமில் | தமிழ் |
| கோளை<br>கோலை | கோழை |
| விளுங்கினார் | விழுங்கினார் |
| பளங்கள் | பழங்கள் |
| கிளவன் | கிழவன் |
| பளக்கம் | பழக்கம் |
| வளக்கம் | வழக்கம் |
| வாள்க்கை | வாழ்க்கை |
| தோளி | தோழி |
| சூரியன் ஒழி | சூரியன் ஒளி |
| வலரும் | வளரும் |
| தெழிவு | தெளிவு |
| கிலைகள் | கிளைகள் |
| ஏராலம் | ஏராளம் |
| மகான்கல் | மகான்கள் |
| ஆலப்பட்டு | ஆளப்பட்டு |
| அவைக்கலம் | அவைக்களம் |
| வாலை மீன்<br>வாழை மீன் | வாளை மீன் |
| விழங்கினார் | விளங்கினார் |
| கேழ்வி கேட்டார் | கேள்வி கேட்டார் |

| | ல் | ள் | ழ் |
|---|---|---|---|
| 1. | அலகு - பறவையின் மூக்கு | அளகு - பெட்டைக்கோழி | அழகு - வனப்பு |
| 2. | அலி - மாறுபட்ட மனிதப் பிறவி | அளி - கொடு, கருணை | அழி - கெடு |
| 3. | அலை - அலைதல் | அளை - பிசை | அழை - கூப்பிடு |
| 4. | ஆல் - ஒரு மரம் | ஆள் - மனிதன் | ஆழ் - மூழ்கு |
| 5. | இலை - தாவரத்தழை | இளை - மெலிந்து போ | இழை - ஆபரணம், நூலிழை |
| 6. | உலவு - திரிதல் | உளவு - இரகசியமறிதல் | உழவு - விவசாயம் |
| 7. | ஒலி - ஓசை | ஒளி - மறை, வெளிச்சம் | ஒழி - அழி, நீக்கு |
| 8. | கலை - ஆடை | களை - நீக்கு, அகற்று | கழை - மூங்கில் |
| 9. | காலி ஒன்றும் இல்லாதது | காளி - ஒரு பெண் தெய்வம் | காழி - ஓர் ஊர் (சீர்காழி) |
| 10. | கிலி - அச்சம் | கிளி - ஒரு பறவை | கிழி - துண்டு |
| 11. | குலவி - சேர்ந்து | குளவி - ஒருவகை வண்டு | குழவி - குழந்தை |
| 12. | சூல் - கர்ப்பம் | சூள் - ஆணை | சூழ் - ஆராய், சுற்று |
| 13. | தலை - ஓர் உறுப்பு | தளை - கட்டு | தழை - இலை, செழி |
| 14. | தால் - நாக்கு | தாள் - பாதம், முயற்சி | தாழ் - தாழ்ப்பாள், இறங்கு |
| 15. | பொலி - விளங்குதல் | பொளி - வரப்பு | பொழி - ஊற்று, பெய் |
| 16. | வலி - வலிமை, நோதல் | வளி - காற்று | வழி - பாதை |
| 17. | வாலி - வானரத்தலைவன் | வாளி - அம்பு | வாழி - வாழ்க |
| 18. | வால்-ஓர் உறுப்பு, வெண்மை | வாள் - ஓர் ஆயுதம் | வாழ் - உயிரோடிரு |
| 19. | விலா - உடலின் ஒரு பக்கம் | விளா - ஒரு மரம் | விழா - திருவிழா |
| 20. | விலை - விலை | விளை - பயிராக்கு | விழை - விரும்பு |

## ர, ற வேறுபாடு அறியாமல் நிகழும் பிழையும் திருத்தமும்

| பிழை | திருத்தம் |
|---|---|
| உறிய | உரிய |
| நவருத்திரி | நவராத்திரி |
| உறையாடும் | உரையாடும் |
| மறியாதை | மரியாதை |
| உறை நடை | உரை நடை |
| கைவிறல் | கைவிரல் |
| பிறுமணன் | பிராமணன் |
| ஆறம்பம் | ஆரம்பம் |
| சுறுக்கம் | சுருக்கம் |
| தெறியாமல் | தெரியாமல் |
| சறியாக | சரியாக |
| நெறுக்கம் | நெருக்கம் |
| சிருவர் | சிறுவர் |
| முரம் | முறம் |
| துரந்தார் | துறந்தார் |
| தவராகும் | தவறாகும் |
| வரலாரு | வரலாறு |
| உருப்பு | உறுப்பு |
| சிரந்தது | சிறந்தது |
| நிரைய | நிறைய |
| பேசுகிராள் | பேசுகிறாள் |
| பொருமை | பொறுமை |

ர, ற என்ற எழுத்துக்களின் உச்சரிப்பில் மிகுந்த வேற்றுமை தோன்ருவிடினும், பொருளில் மிக வேறுபாடுண்டு. அவற்றைக் கீழ்வரும் சொற்களைக் கொண்டு அறியுங்கள்.

| ர | ற |
|---|---|
| அரம் - ஒரு கருவி | அறம் - தருமம் |
| அரி - திருமால் | அறி - தெரிந்துகொள் |
| அரை - பாதி | அறை - வீட்டின் பகுதி |
| ஆர - நிறைய | ஆற - அடங்க |
| இர - பிச்சை எடு | இற - மாய்ந்துபோ |
| இரை - உணவு | இறை - தலைமை, வரி |
| உரை - சொல் | உறை - வசி |
| எரி - தீ | எறி - வீசு |
| ஒரு - ஒன்று | ஒறு - தண்டனை கொடு |
| கரி - யானை, அடுப்புக்கரி | கறி - மிளகு, தொடுகறி |
| கரை - அணை | கறை - அழுக்கு, குற்றம் |
| குரவர் - ஆசிரியர் | குறவர் - ஒரு சாதியார் |
| குரை - குலைத்தல் | குறை - குற்றம், சுருக்கு |
| கூரிய - கூர்மையான | கூறிய - சொன்ன |
| கூரை - வீட்டின் மேற்பகுதி | கூறை - ஆடை |
| செரு - போர் | செறு - கோபி |
| திரை - அலை | திறை - கப்பம் |
| தெரு - வீதி | தெறு - அழி |
| நிரை - ஒழுங்கு | நிறை - முடிவு |
| பரவை - கடல் | பறவை - பட்சி |
| பரி - குதிரை | பறி - பிடுங்கு |
| பிரை - மோர்த்துளி | பிறை - சந்திரன் |
| மரம் - விருட்சம் | மறம் - வீரம், பாபம் |
| மாரி - மழை | மாறி - வேறுபட்டு |
| விரல் - (கை, கால்) விரல் | விறல் - வலிமை, திறமை |

## பிழைச் சொற்களும் திருத்தமும்

பேச்சு வழக்கில் உள்ள சொற்களில் சில தவறுடையனவும் உண்டு. அவற்றை அவ்வாறே எழுதுவது தவறாகும். அவைகள் இன்னவை என்பதைக் கீழே வரும் சொற்களைக் கொண்டு அறியுங்கள்.

| பிழை | திருத்தம் |
|---|---|
| அடப்பம் | அடைப்பம் |
| அடமானம் | அடைமானம் |
| அடமழை | அடைமழை |
| அண்ணாக்கயறு | அரைஞாண் கயிறு |
| அதாவது | அஃதாவது |
| அருவாமணை | அரிவாள்மணை |
| அருகாமை | அருகு |
| அவைகள் | அவை |
| அனியாயம் | அநியாயம் |
| விநாயகன் | விநாயகன் |
| ஆத்துக்கு | அகத்துக்கு |
| இடது | இடம் |
| இத்துப்போச்சு | இற்றுப் போயிற்று |
| இமையமலை | இமயமலை |
| உசிர் | உயிர் |
| உடமை | உடைமை |
| உத்திரவு | உத்தரவு |
| உலந்து | உலர்ந்து |
| எடஞ்சல் | இடைஞ்சல் |
| எண்ணை | எண்ணெய் |
| எளக்காரம் | இளக்காரம் |
| ஒண்டியாய் | ஒன்றியாய் |

| பிழை | திருத்தம் |
|---|---|
| ஒருவள் | ஒருத்தி |
| ஒருக்கால் | ஒருகால் |
| கத்திரிக்கோல் | கத்தரிக்கோல் |
| கத்திரிக்காய் | கத்தரிக்காய் |
| கருவப்பிலே | கருவேப்பிலே |
| காக்கா | காக்கை |
| குடக்கூலி | குடிக்கூலி |
| கெடிகாரம் | கடிகாரம் |
| கோதும்பை | கோதுமை |
| கோர்த்து | கோத்து |
| சந்தணம் | சந்தனம் |
| சாம்பராணி | சாம்பிராணி |
| சமயல் | சமையல் |
| சிகப்பு | சிவப்பு |
| சிலவு | செலவு |
| சீயக்காய் | சிகைக்காய் |
| சுந்திரம் | சுந்தரம் |
| சுவற்றில் | சுவரில் |
| செரங்கு | சிரங்கு |
| தலேகாணி | தலேயணே |
| திகட்டுது | தெவிட்டுது |
| திராசு | தராசு |
| திருவாணி | திருகாணி |
| துகையல் | துவையல் |
| துடப்பம் | துடைப்பம் |
| தொந்திரவு | தொந்தரவு |
| நஞ்சை | நன்செய் |
| நேத்து | நேற்று |
| நொங்கு | நுங்கு |
| பசும்பால் | பசுப்பால் |
| பயிறு | பயறு |
| பாதாங்கொட்டை | வாதுமைக் கொட்டை |

| பிழை | திருத்தம் |
| --- | --- |
| பாவக்காய் | பாகற்காய் |
| புண்ணுக்கு | பிண்ணுக்கு |
| புடவை | புடைவை |
| போறும் | போதும் |
| மணத்தக்காளி | மணித்தக்காளி |
| முழிக்கிறது | விழிக்கிறது |
| மோர்ந்து / முகந்து | மோந்து |
| ராமசாமி | இராமசாமி |
| ரொம்ப | நிரம்ப |
| லக்கம் | இலக்கம் |
| வயறு | வயிறு |
| வலது கை | வலக்கை |
| விசிரி | விசிறி |
| வெங்கலம் | வெண்கலம் |
| வெண்ணை | வெண்ணெய் |
| அபருதம் | அபராதம் |

## IV. வாக்கிய முடிவுப் பிழைகளும் திருத்தமு[ம்]

ஒரு வாக்கியத்திலுள்ள எழுவாயும் பயனிலையும், திணை, பால், எண், இடங்களில் ஒத்திருக்க வேண்டும் என்று முன்பு அறிந்துள்ளீர்கள். அவ்வாறு ஒத்திரா விடில் வாக்கியம் பிழையுடையதாகும். ஆதலின், அப்பிழைகள் ஏற்படா வண்ணம் வாக்கியங்களை அமைக்கப் பழக வேண்டும்.

| பிழை | திருத்தம் |
| --- | --- |
| அக்காள் வீட்டில் இருக்கிறது. | அக்காள் வீட்டில் இருக்கிறாள். |
| மாடுகள் வந்தார்கள். | மாடுகள் வந்தன. |
| அண்ணன் வந்தாள். | அண்ணன் வந்தான். |
| பெண் வந்தார். | பெண் வந்தாள். |
| பையன்கள் வந்தான். | பையன்கள் வந்தனர். |

| பிழை | திருத்தம் |
| --- | --- |
| மாடு ஓடின. | மாடு ஓடிற்று. |
| பறவைகள் பறந்தது. | பறவைகள் பறந்தன. |
| நான் வந்தோம். | நான் வந்தேன். |
| நாங்கள் வந்தேன். | நாங்கள் வந்தோம். |
| நீ வந்தீர். | நீ வந்தாய். |
| நீங்கள் வந்தாய். | நீங்கள் வந்தீர். |
| நாளை வந்தேன். | நாளை வருவேன். |
| நேற்று வருவேன். | நேற்று வந்தேன். |
| நில், வந்தேன். | நில், வருகிறேன். |

## V. வாக்கிய மாற்றம்

வாக்கியம் தனி வாக்கியம், தொடர் வாக்கியம், கலவை வாக்கியம் என மூன்று வகைப்படும் என்று முன்பு படித்தீர்கள். அவைகளே அன்றி வாக்கியம் செய்தி வாக்கியம், வினா வாக்கியம், கட்டளை வாக்கியம், உணர்ச்சி வாக்கியம் என நான்கு வகைப்படும். இவை ஒவ்வொன்றும் உடன்பாடு, எதிர்மறை இரு வகையிலும் வரும்.

கண்ணன் மாடு மேய்த்தான்.

இது ஒரு செய்தியைக் கூறுவதால் செய்தி வாக்கியம்.

கண்ணன் மாடு மேய்த்தானா?

கண்ணன் யாது மேய்த்தான் ?

இவை ஒரு பொருளைப்பற்றி வினவுதலால் வினா வாக்கியம்.

வழியைப் பார்த்து நட.

இது கட்டளை இடுவதனால் கட்டளை வாக்கியம்.

அந்தோ! காந்தி சுடப்பட்டார்.

இது உணர்ச்சியை வெளிப்படுத்துவதனால் உணர்ச்சி வாக்கியம்.

## வாக்கியங்களை மாற்றுதல்

| | |
|---|---|
| **(அ) செய்தி வாக்கியம்** | **வினா வாக்கியம்** |
| திலகவதி நீறு அளித்தாள். | திலகவதி நீறு அளித்தாளா? |
| புனிதவதி முன்பு மாம்பழம் கொடுத்தாள். | புனிதவதி எப்போது மாம்பழம் கொடுத்தாள் ? |
| பாடம் படித்தல் நல்லது. | பாடம் படித்தல் நல்லதன்றோ? |
| **(ஆ) வினா வாக்கியம்** | **செய்தி வாக்கியம்** |
| இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்றினாரா ?<br>இளங்கோவடிகள் யாது இயற்றினார் ? | இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்றினார். |
| **(இ) உடன்பாட்டு வாக்கியம்** | **எதிர்மறை வாக்கியம்** |
| **செய்தி :** சூரன் தோற்றான். | சூரன் தோற்றிலன். |
| **வினா :** கந்தன் வென்றானா? | கந்தன் வென்றிலனோ ? |
| **கட்டளை :** பெண்ணே! பாடம் படி. | பெண்ணே! பாடம் படியாதே. |
| **உணர்ச்சி :** ஆகா! முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றேன். | ஐயோ! முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிலேன். |

| | |
|---|---|
| (ஈ) **தனி வாக்கியம்** | **தொடர் வாக்கியம்** |
| மரகதாம்பிகை தஞ்சை சென்ருள்.<br>மரகதாம்பிகை ஆற்றில் நீராடினுள்.<br>மரகதாம்பிகை கோவை திரும்பினுள். | மரகதாம்பிகை தஞ்சை சென்று, ஆற்றில் நீராடி கோவை, திரும்பினுள். |
| (உ) **தொடர் வாக்கியம்** | **தனி வாக்கியம்** |
| சாத்தனுர் சீத்தலையில் பிறந்து, மதுரையில் வாழ்ந்து, மணிமேகலையை இயற்றினுர். | சாத்தனுர் சீத்தலையில் பிறந்தார்.<br>சாத்தனுர் மதுரையில் வாழ்ந்தார்.<br>சாத்தனுர் மணிமேகலையை இயற்றினுர். |
| (ஊ) **தனி வாக்கியம்** | **கலவை வாக்கியம்** |
| மோகன் பாடம் படிக்கவில்லை. ஆசிரியர் என்னிடம் தெரிவித்தார். | 'மோகன் பாடம் படிக்கவில்லை' என்று ஆசிரியர் என்னிடம் தெரிவித்தார். |
| (எ) **கலவை வாக்கியம்** | **தனி வாக்கியம்** |
| அறிஞர், "தம்பீ! நீ நன்ருகப் படிக்க வேண்டும்" என்று என்னிடம் கூறினுர். | அறிஞர் என்னிடம் கூறினுர். தம்பீ ! நீ நன்ருகப் படிக்க வேண்டும். |

## பயிற்சி

(அ) தனி வாக்கியம் என்பது யாது ?

(ஆ) தொடர் வாக்கியம் என்பது யாது ?

(இ) கலவை வாக்கியம் என்பது யாது ?

(ஈ) கீழ்க்காணும் பிழைகளைத் திருத்தியெழுதுக :

இரும்பல், உத்தராயனம், கிடாரங்காய், கருப்பட்டி, கினவு, குடுத்து, கைமாறு, சங்கலி, சமயல், தாவாரம், துகை, துடங்குதல், துறவுகோல், தொந்திரவு, நாத்தம், நெலவரம், பெரளி, பொம்மனுட்டி, வெக்கம், மானம் பார்த்த பூமி.

(உ) கீழ்க்கண்ட வாக்கியங்களைத் திருத்துக :

(*i*) அவன் அவள் வீட்டிற்குச் சென்றுள்.

(*ii*) கோழிகள் தானியம் தின்றது.

(*iii*) நேற்று நான் சென்னை செல்வேன்.

(*iv*) கந்தன் நாளைக்கு அசுரனைக் கொன்றுன்.

(*v*) நீங்கள் நேற்று பள்ளிக்கு வந்தார்கள்.

(*vi*) அவர்கள் இன்று தோட்டத்திற்குச் சென்றன.

(ஊ) கீழ்க்காணும் வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுக:

(*i*) வேலன் பாடம் படிக்கிறுன்.

(*ii*) நாங்கள் கட்டுரை எழுதுவோம்.

(*iii*) நீங்கள் பள்ளிக்குச் சென்றீர்களா ?

(*iv*) கந்தா! தெருவில் ஓரமாகச் செல்.

(*v*) ஆகா! இந்தப்படம் எவ்வளவு அழகாக உள்ளது.

(எ) கீழ்வரும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக மாற்றுக:

(*i*) நீ நன்றாக எழுது. நீ பரிசு பெறுவாய்.

(*ii*) ஆபுத்திரன் மதுரை சென்றுன். அவன் அம்பலத்தில் தங்கினுன். அவன் அமுதசுரபி பெற்றுன்.

(ஏ) கீழ்வரும் தனி வாக்கியங்களைக் கலவை வாக்கியங்களாக்குக :

(*i*) தங்கை எழுதுகோலை ஒடித்தாள். தமக்கை தாயிடம் முறை யிட்டாள்.

(*ii*) தந்தை என்னை அழைத்துக் கூறினார் ; மகனே ! நீ ஊருக்குச் செல்லவேண்டும் ; இரண்டு நாட்களில் திரும்பவேண்டும்.

## VI. நிறுத்தற் குறிகள்

நாம் படிக்கும்பொழுது நமக்கும் கேட்போர்க்கும் நன்றாகக் கருத்து விளங்கும்படி, சிற்சில இடங்களில் நிறுத்திப் படிக்க வேண்டும். எந்த இடத்தில் எவ்வளவு நேரம் நிறுத்திப் படிக்க வேண்டும் என்பதை அறிவிக்கும் குறிகள் நிறுத்தற் குறிகள் எனப்படும்.

### (அ) முற்றுப் புள்ளி ( . )

கலைச்செல்வி கல்வி கற்றாள்.

இ∴து ஒரு வாக்கியம். இவ்வாக்கியம் முடிந்துள்ளது என்பதைக் குறிக்க, வாக்கியத்தின் கடைசியில் (.) ஒரு புள்ளி இடப்பட்டுள்ளது. இது முற்றுப்புள்ளி எனப்படும்.

**நினைவிற் கொள்க**

**ஒரு வாக்கியத்தின் முடிவில் இடப்படுவது முற்றுப்புள்ளி. இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.**

குறிப்பு : இயல்பாகக் கண் இமைக்கும் நேரம் அல்லது கை நொடிக்கும் நேரம் ஒரு மாத்திரை ஆகும்.

### (ஆ) முக்காற்புள்ளி ( : )

நான்கு வகைச் சொற்களாவன : பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்பன.

இதில் 'சொற்களாவன' என்பதன்பின் (:) இவ்வாறு குறி இடப்பட்டுள்ளது. இக்குறி இனிமேல் தெரிவிக்க வேண்டிய இடத்தில் இடப்பட்டுள்ளது. இது முக்காற்புள்ளி எனப்படும்.

நினைவிற் கொள்க

ஒரு வாக்கியத்தின் செய்திகளை இனிமேல் தெரிவிக்க வேண்டிய இடத்தில் இடப்படுவது முக்காற்புள்ளி. இங்கு மூன்று மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

## (இ) அரைப்புள்ளி ( ; )

வெற்றி வேலன் பாடம் படித்தான் ; வீட்டிற்குச் சென்றான் ; உணவு உண்டான்.

இவ்வாக்கியத்தில் 'வெற்றி வேலன்' என்னும் சொல் 'படித்தான், சென்றான், உண்டான்' என்னும் மூன்று பயனிலைகட்கு எழுவாயாக அமைந்துள்ளது. ஒரு எழுவாய்க்குப் பல பயனிலைகள் வந்தமையால், கடைசிப் பயனிலைக்கு முன்னே உள்ள பயனிலைகளின் கடைசியில் ( ; ) இவ்வாறு குறி இடப்பட்டுள்ளது. இஃது அரைப்புள்ளி எனப்படும்.

நினைவிற் கொள்க.

ஒரே எழுவாய்க்குப் பல பயனிலைகள் வருமாயின், அப்பய னிலைகளை அடுத்து இடப்படுவது அரைப்புள்ளி. இங்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

## (ஈ) காற்புள்ளி ( , )

செல்வீ, இங்கே வா.

இவ்வாக்கியத்தில் ஒருத்தியைக் கூப்பிடும் பொழுது, கூப்பிடப்படும் பெயருக்குப் பின்பு ( , ) இவ்வாறு குறி இடப்பட்டுள்ளது.

தாமரைச் செல்வியும், அமுதச்செல்வியும், மோகனும் சென்றார்கள்.

இவ்வாக்கியத்தில் 'தாமரைச் செல்வி, அமுதச் செல்வி, மோகன்' என்னும் பல பெயர்ச்சொற்கள் வரிசையாக வந்துள்ளன. முதலில் உள்ள இரண்டு பெயர்ச் சொற்களுக்குப் பின்பு (,) இவ்வாறு குறி இடப்பட்டுள்ளது.

கண்ணகியும் கோவலனும், மாதரியும் ஐயையும், கோப்பெருந்தேவியும் நெடுஞ்செழியனும் மதுரையில் இருந்தனர்.

இவ்வாக்கியத்தில் பெயர்ச்சொற்கள் இரண்டிரண்டாக வந்துள்ளன. அவற்றைப் பிரித்துக்காட்ட இடையில் ( , ) இவ்வாறு குறி இடப்பட்டுள்ளது.

ஆசிரியர் குருநாதனிடம் வந்து, கேள்வி கேட்டு, பதில் கூறுமாறு செய்தார்.

இவ்வாக்கியத்தில் சில கருத்துக்கள் தொடர்ந்து ஒரு முடிவைப் பெற்றுள்ளன. ஒவ்வொரு வினையெச்சத்தின் முடிவிலும் ( , ) இவ்வாறு குறி இடப்பட்டுள்ளது.

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்கு வகையாக நிலம் பிரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாக்கியத்தில் பொருள்கள் எண்ணுமாறு அமைந்துள்ளது. ஒவ்வொரு பொருளின் கடைசியிலும் ( , ) இவ்வாறு குறி இடப்பட்டுள்ளது. இக்குறி காற்புள்ளி எனப்படும்.

### நினைவிற் கொள்க

**கூப்பிடப்படும் பெயருக்குப் பின்பும், பல பெயர்ச்சொற்கள் வரிசையாக வரும்போது ஒவ்வொரு பெயர்ச்சொல்லின் பின்பும், இரண்டிரண்டு பெயர்ச்சொற்களாக வரும்போது அவற்றின் இடையிலும், நீண்ட வாக்கியத்தில் வினையெச்சத்தின் முடிவிலும், பொருள்களை எண்ணும்போது ஒவ்வொரு பொருளின் கடைசியிலும் இடப்படுவது காற்புள்ளி. இங்கு ஒரு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.**

## (உ) வினாக்குறி (?)

*திலகவதி எப்போது படித்தாள் ?*

இவ்வாக்கியம் கேள்விப் பொருளைத் தருகிறது. இது கேள்வி வாக்கியம் என்பதற்காகக் கடைசியில் (?) இவ்வாறு குறி இடப்பட்டுள்ளது. இது வினாக்குறி எனப்படும். (வினா—கேள்வி)

நினைவிற் கொள்க

கேள்வி வாக்கியத்தின் கடைசியில் இடப்படுவது வினாக் குறி. இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

## (ஊ) உணர்ச்சிக் குறி (!)

வடிவாம்பிகை "ஐயோ! சம்பத்குமார் வீழ்ந்து விட்டான்" என வருந்தினாள்.

இவ்வாக்கியத்தில் சம்பத்குமார் வீழ்ந்தமையால், வடிவாம்பிகை தான் கொண்ட உணர்ச்சியை வெளிப் படுத்த 'ஐயோ' என்று கூறினாள். உணர்ச்சியை வெளிப்படுத்தும் சொல்லான 'ஐயோ' என்பதன் கடை சியில் (!) இவ்வாறு குறி இடப்பட்டுள்ளது. இஃது உணர்ச்சிக் குறி.

நினைவிற் கொள்க

வியப்பு, மகிழ்ச்சி, பயம், துக்கம், கோபம், இரக்கம் இவற்றை உணர்த்தும் சொற்களின் பின்பு இடப்படுவது உணர்ச்சிக் குறி. இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

## (எ) மேற்கோள் குறி (" ")

(அ) இரட்டை மேற்கோள் குறி.

கந்தா, "இராமலிங்கம் படிக்கவில்லை" என ஆசிரி யர் என்னிடம் கூறினார்.

இவ்வாக்கியத்தில் "இராமலிங்கம் படிக்கவில்லை" என்பது ஆசிரியர் கூறிய வாக்கியம். அவர் கூறிய வாக்கியம் என்பதைக் குறிக்க அத் தொடரின் முன்பு (") இவ்வாறு குறியும், பின்பு (") இவ்வாறு குறியும் இடப்பட்டுள்ளது. நேர் கூற்றுக்கு முன்னும் பின் னும் இரட்டை மேற்கோள் குறி வரும்.

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

என்பது வள்ளுவர் வாக்கு.

இது திருவள்ளுவர் கூறிய மொழியை மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டதாகும். இவ்வாறு புலவர், பெரியோர்கள் கூறிய மொழிகளை எடுத்துக் காட்டும்போது அம்மொழிகட்கு முன்னும் பின்னும் இரட்டை மேற்கோள் குறி இடவேண்டும்.

## (ஆ) ஒற்றை மேற்கோள் குறி (' ')

'அ', 'இ', 'உ' என்பன சுட்டெழுத்துக்கள்.

இவ்வெடுத்துக் காட்டில் ஒவ்வொரு எழுத்தும் தன்னைச்சுட்டி வந்தமையால் ஒற்றை மேற்கோட் குறி இடப்பட்டுள்ளது.

'படித்த' என்னும் பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிகாது.

இதில் 'படித்த' என்ற சொல் தன்னையே சுட்டிக் கொள்வதால் ஒற்றை மேற்கோட் குறி இடப்பட்டுள்ளது.

பகைவர் பசுக்களைக் கவர்தலை 'வெட்சித் திணை' என்பர்.

இதில் பசுக்களைக் கவர்தல் பற்றிய செயலை 'வெட்சித்திணை' என்று சிறப்பித்துக் கூறுதலால் ஒற்றை மேற்கோட் குறி இடப்பட்டுள்ளது.

"மாணவர்களே! 'மொழியே விழி' என்று பெரியோர் கூறியதை அறிந்து கொள்ளுங்கள்" என்று ஆசிரியர் கூறினர்.

இதில் மேற்கோளுக்குள் 'மொழியே விழி' என்பது மற்றொரு மேற்கோளாக அமைந்தமையால் ஒற்றை மேற்கோட் குறி இடப்பட்டுள்ளது.

### நினைவிற் கொள்க

பிறர் கூறியதை எடுத்துக்காட்டும்பொழுது, தொடக்கத்தில் (") இவ்வாறும், முடிவில் (") இவ்வாறும் இடப்படுவது மேற்கோள் குறி. பொருள் மிகுதியாகவோ, சிறந்ததாகவோ

இருந்தால் இரட்டைக் குறியும், சிறு பொருளுக்கு (' ') இவ்வாறு ஒற்றைக் குறியும் இடல் வேண்டும்.

### (ஏ) பிறைக்கோடுகள் (அடைப்புக்குறி)

**நிறுத்தற் குறிகள் (Punctuation Marks) உரைநடைக்கு இன்றியமையாதவை.**

*இங்கு மொழி பெயர்க்கும்போது பிறைக்கோடு இடப்பட்டுள்ளது.*

**நிறுத்தற் குறிகளுள் பிறைக்கோடும் (அடைப்புக் குறியும்) ஒன்றாகும்.**

*இங்குப் பிறைக்கோடு என்ற அருஞ்சொல்லின் பொருளை விளக்க வந்த சொல்லிற்குப் பிறைக்குறி இடப்பட்டுள்ளது.*

### (ஐ) சிறுகோடு இடுதல் (Dash) (—)

*என் நண்பன் உயிரோடு இருப்பின்—அந்தோ! இறந்ததைக் குறித்து இரங்கிப் பயன் என்?*

*இவ்வாறு ஒன்றைக் கூறி வரும்போது கருத்தில் திடீரென்று தடை ஏற்படின் அவ்விடத்து ஒற்றைக் கோடு இடப்படும். ஒன்றைக் கூறி வரும்போது கருத்தை மாற்றிக் கூறும்போதும் (—) இவ்வாறு குறி இடப்படும்.*

பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களில் ஏற்ற நிறுத்தற் குறிகளை இடுக:**

1. சேரன் சோழன் பாண்டியன் ஆகிய மூவரும் தமிழ் நாட்டு வேந்தராவர்
2. ஆ தமிழின் இனிமையை என்னென்பேன்
3. ஐம்பொறிகளாவன மெய் வாய் கண் மூக்கு செவி என்பனவாம்
4. ஔவை அறஞ்செய விரும்பு என்று கூறுகிறாள்
5. ஆசிரியர் படித்துக் கொண்டிருந்தால் மட்டும் போதாது உடலையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று மாணவர்களிடம் கூறினர்.

6. துரைசாமி கல்லூரி சென்றீரா
7. நிலம் நீர் தீ காற்று வானம் ஆகிய ஐம்பெரும் பூதங்களின் வடிவாய் இறைவன் உள்ளான்
8. அந்தோ புலவர் படும் வேதனையை என்னென்று சொல்வேன்
9. வள்ளுவர் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்று கூறியுள்ளார்
10. குப்புசாமி விரைவாக வந்தார் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார் உணவு உண்டு வீட்டிற்குச் சென்றார்
11. ஐம்பெருங்காவியங்களாவன சிலப்பதிகாரம் மணிமேகலை சிந்தாமணி வளையாபதி குண்டலகேசி என்பனவாம்
12. இராசேந்திரா தமிழ்நாட்டுக் காந்தியடிகள் என்று கூறப்படுபவர் யார்
13. என் நண்பன் வந்தால் நாளை இங்கு இருக்கமாட்டேன்
14. நான் சப்பான் Japan சென்றேன்

## VII. வல்லெழுத்து மிகும் இடங்களும் மிகா இடங்களும்

### (அ) வல்லெழுத்து மிகும் இடங்கள்

(1) அ, இ, உ என்ற சுட்டெழுத்துக்களின் முன்னும், எ என்ற வினா வெழுத்தின் முன்னும் வரும் க, ச, த, ப மிகும்.

அ + கிளை = அக்கிளை.
இ + சந்தை = இச்சந்தை.
உ + பக்கம் = உப்பக்கம்.
எ + துண்டு ? = எத்துண்டு ?

(2) அந்த, இந்த, என்ற சுட்டுச் சொற்களின் முன்னும், எந்த என்ற வினாச் சொல்லின் முன்னும் வரும் வல்லினம் மிகும்.

அந்த + காலம் = அந்தக்காலம்
இந்த + பசு = இந்தப் பசு.
எந்த + திணை? = எந்தத் திணை?

(3) அங்கு, இங்கு என்ற சுட்டுச் சொற்களின் முன்னும், எங்கு என்ற வினச்சொல்லின் முன்னும் வரும் வல்லினம் மிகும்.

அங்கு + கண்டேன் = அங்குக்கண்டேன்.
இங்கு + சென்றாய் = இங்குச் சென்றாய்.
எங்கு + பார்த்தாய் = எங்குப் பார்த்தாய் ?

(4) அப்படி, இப்படி, எப்படி என்ற சொற்களின் முன் வரும் வல்லினம் மிகும்.

அப்படி + தின்றாய் = அப்படித் தின்றாய்.
இப்படி + சொன்னாய் = இப்படிச் சொன்னாய்.
எப்படி + பாடினார் = எப்படிப் பாடினார் ?

(5) இரண்டாம் வேற்றுமை விரியின் முன் வரும் வல்லினம் மிகும்.

கண்ணனை + கண்டேன் = கண்ணனைக் கண்டேன்.
பொருள்தனை + போற்று = பொருள்தனைப் போற்று.
என்னை + தொடு = என்னைத் தொடு.

(6) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையின் முன் வரும் வல்லினம் மிகும்.

தயிர் + குடம் = தயிர்க் குடம்.
மலர் + தார் = மலர்த் தார்.

(7) நான்காம் வேற்றுமை விரியின் முன் வரும் வல்லினம் மிகும்.

எனக்கு + கொடு = எனக்குக் கொடு.
பாலுக்கு + சர்க்கரை = பாலுக்குச் சர்க்கரை.

(8) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையின் முன்வரும் வல்லினம் மிகும்.

வாய் + சொல் = வாய்ச் சொல்.
விழி + புனல் = விழிப்புனல்.

(9) ஆறும் வேற்றுமைத் தொகையின் முன் வரும் வல்லினம் மிகும்.

பலா + சுளை = பலாச் சுளை.
வாழை + காய் = வாழைக்காய்.

(10) ஏழாம் வேற்றுமை விரியின் முன்னும், ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையின் முன்னும் வரும் வல்லினம் மிகும்.

செல்வரிடை + சென்றான் = செல்வரிடைச்சென்றான்.
மலை + குகை = மலைக் குகை.

(11) வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் மிகும்.

செக்கு + துணி = செக்குத் துணி.
கச்சு + கட்டு = கச்சுக் கட்டு.
பட்டு + துண்டு = பட்டுத் துண்டு.
முத்து + சேர்த்தான் = முத்துச் சேர்த்தான்.
சீப்பு + செய்தான் = சீப்புச் செய்தான்.
பற்று + கொடி = பற்றுக் கொடி.

(12) மென்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் மிகும்.

குரங்கு + குட்டி = குரங்குக் குட்டி.
பஞ்சு + பொதி = பஞ்சுப் பொதி.
தண்டு + கீரை = தண்டுக் கீரை.
மருந்து + குப்பி = மருந்துக் குப்பி.
பாம்பு + தோல் = பாம்புத் தோல்.
கன்று + குட்டி = கன்றுக் குட்டி.

(13) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகும்.

கொல்லா + தீவினை = கொல்லாத் தீவினை.
வாழா + கவரிமா = வாழாக் கவரிமா.

(14) அகர ஈற்றுக் குறிப்பு வினை யெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகும்.

மெல்ல + சென்றான் = மெல்லச் சென்றான.
சிறுக + கட்டு = சிறுகக் கட்டு.

(15) யகர மெய் ஈற்று வினை எச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகும்.

*படிப்பதாய் + சென்றான் = படிப்பதாய்ச் சென்றான்.*
*விரைவாய் + போ = விரைவாய்ப் போ.*

(16) இகர ஈற்று வினை எச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகும்.

*ஓடி + சென்றான் = ஓடிச் சென்றான்.*
*விரும்பி + படித்தான் = விரும்பிப் படித்தான்.*

(17) ட, ற இரட்டித்து வரும் நெடில் தொடர், உயிர்த் தொடர்க் குற்றியலுகரங்களுக்கு முன் வரும் வல்லினம் மிகும்.

*வீட்டு + சுவர் = வீட்டுச் சுவர்.*
*ஆற்று + பாய்ச்சல் = ஆற்றுப் பாய்ச்சல்.*
*முரட்டு + காளை = முரட்டுக் காளை.*
*கிணற்று + தவளை = கிணற்றுத் தவளை.*

## வல்லெழுத்து மிகா இடங்கள்

1. வினைத் தொகையில் வல்லினம் மிகாது.

*வாழ் + கிளை = வாழ்கிளை.*
*சுடு + சோறு = சுடுசோறு.*

2. உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.

கல்வி + கேள்வி = கல்வி கேள்வி.
நன்மை + தீமை = நன்மை தீமை.

3. அது, இது, எது என்ற சொற்களின் முன் வரும் வல்லினம் மிகாது.

*அது + காண் = அது காண்.*
*இது + சரி = இது சரி.*
*எது + தின்றது = எது தின்றது.*

4. எண்ணுப் பெயர்கள் முன் வரும் வல்லினம் மிகாது.

*ஒரு + பூ = ஒரு பூ.*
*ஏழு + கடை = ஏழுகடை.*

5. சில, பல என்னும் பெயர்கள் முன் வரும் வல்லினம் மிகாது.
சில + கடை =சில கடை.
பல + துணி =பல துணி.

6. அன்று, இன்று, என்று என்னும் காலப் பெயர்கள் முன் வரும் வல்லினம் மிகாது.
அன்று + கண்டேன் = அன்று கண்டேன்.
இன்று + சென்றேன் = இன்று சென்றேன்.
என்று + பேசினுய் = என்று பேசினுய்.

7. ஆ, ஏ, ஓ என்பவைகளை ஈற்றிலே உடைய வினுச் சொற்களின் முன் வரும் வல்லினம் மிகாது.
அவளா + செய்தாள்? = அவளா செய்தாள்?
நீயே + பார்த்தாய்? = நீயே பார்த்தாய்?
அவனே + கேட்டான்? = அவனே கேட்டான்?

8. இரண்டாம் வேற்றுமைத் தொகைகளில் வல்லினம் மிகாது.
பறவை + பிடித்தான் = பறவை பிடித்தான்.
கதை + சொல் = கதை சொல்.

9. நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், இடைத் தொடர்க் குற்றியலுகரங்கள் முன்வரும் வல்லினம் மிகாது.
ஆடு + சிறிது = ஆடு சிறிது.
எஃகு + தீது = எஃகு தீது.
வரகு + சிறிது = வரகு சிறிது.
மார்பு + பெரியது = மார்பு பெரியது.

10. மூன்ரும் வேற்றுமை விரியின் முன் வரும் வல்லினம் மிகாது.
கண்ணுல் + பார்த்தேன் = கண்ணுல் பார்த்தேன்.
கந்தனெடு + சென்ருன் = கந்தனெடு சென்ருன்.
கன்ருேடு + பசு வந்தது = கன்ருேடு பசு வந்தது.

11. ஏழாம் வேற்றுமை விரியின் முன் வரும் வல்லினம் மிகாது.
மரத்தில் + தங்கினுன் = மரத்தில் தங்கினுன்.
வீட்டில் + புகுந்தான் = வீட்டில் புகுந்தான்.

12. தெரிநிலைப் பெயரெச்சங்களின் முன்வரும் வல்லினம்மிகாது.
படித்த + பையன் = படித்த பையன்.
நடிக்கிற + சிறுவன் = நடிக்கிற சிறுவன்.
ஓடாத + குதிரை = ஓடாத குதிரை.

13. குறிப்புப் பெயரெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகாது.
நல்ல + பிள்ளை = நல்ல பிள்ளை.
இல்லாத + செய்தி = இல்லாத செய்தி.

14. எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.
பறவை + பறந்தது = பறவை பறந்தது.
கோழி + கூவிற்று = கோழி கூவிற்று.

15. விளித் தொடரில் வல்லினம் மிகாது.
தம்பீ + கேள் = தம்பீ கேள்.
அன்னையே + சொல் = அன்னையே சொல்.

16. வரும்படி, போகும்படி, சொன்னபடி இவைகளின் முன் வரும் வல்லினம் மிகாது.
வரும்படி + கூறினான் = வரும்படி கூறினான்.
போகும்படி + செய்தான் = போகும்படி சொன்னான்.
சொன்னபடி + செய்தான் = சொன்னபடி செய்தான்.

17. ஆறும் வேற்றுமைத் தொகையிலும், ஆறும் வேற்றுமை விரியிலும் வல்லினம் மிகாது.
என் + சட்டை = என் சட்டை.
நளனது + துண்டு = நளனது துண்டு.

## பயிற்சி

(அ) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக :
கொழுந்துக்கீரை, சேர்த்துக்கொடு, கண்டுகேட்டு, கொய்துகொண்டு, கூழுக்குப்பாடினான், விளங்கச் செய, எத்துணை, எங்குச் சென்றாய், அங்குப்பார்த்தேன், மாரிபெரிது.

(ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக :
களா + செடி, என்னை + தொடு, வள்ளிக்கு + சொல், எங்கு + தேடு, கொக்கு + பறந்தது, இப்படி + சொன்னான், எ + சமயம், தம்பியோடு + செல், வந்து + ஆடினான், கூறு + பையன்.